விலை: 30/-

QD / 154 / NEWS / 2017

NAVAMANI WEEKLY

# நவமணி

தமிழ் ... களின் சுதந்திரமான குரல்







உங்களுக்கு யாரை பிடிக்கும் 04»



வடக்கு முஸ்லிம்களின் வரலாற்று துயரம் 07»

## 69ஆவது சுதந்திர நிகழ்வுகள் காலிமுகத்திடலில்

■ பா.மலரம்பிகை

இலங்கையின் 69 ஆவது சுதந்திர தின நிகழ்வு தேசிய ஒற்றுமை என்ற தொனிப்பொருளில் சனிக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் காலி முகத்திடலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகள் சனிக்கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் 1.15 மணிவரை இடம்பெறவுள்ளதோடு, இராணுவப்படை, விமானப்படை, கடற்படை, ஆயுதப்படை, பொலிஸ் விசேட அதிரடிப்படை, சிவில் பாதுகாப்பு திணைக்களம், பாதுகாப்பு படையினர் மற்றும் தேசிய மாணவர் படையணி என்பவற்றைச் சேர்ந்த சுமார் 8000 படை வீரர்கள் அணிவகுப்பு மரியாதையில்

15 »»»

## சுதந்திரத்தின் சுவர்ண பூமியாக எமது நாட்டை மாற்றுவோம்



நீதி மற்றும் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட புதியதோர் தேசத்தில் சமாதானமும் சுபீட்சமும் கிடைக்கப்பெற்ற மக்களாக வாழும் பாக்கியம்

15 »»»

## சவால்களை வென்றிட அனைவரும் ஒன்றுபடுவோம்



நாட்டின் சவால்களை துணிவுடன் எதிர்கொண்டு வெற்றிகளை அடைய சுதந்திர தினத்தில் உறுதிபூணுவோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

15 »»»

## வரலாற்றில் தடம் பதித்த திருமலை சாஹிரா கல்லூரி

■ சஹ்றின் எம். இஸ்மத்

தேசிய மட்டத்தில் விஞ்ஞானப்பிரிவில் அதிசிறந்த 10 பாடசாலைகளுள்

15 »»»

# கட்சிகளைப் பதிவு செய்யும் தடை முழுமையாக நீக்கம்

## 28 வரை கட்சிகளை பதியலாம்

ஐந்து வருடங்களின் பின் புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்காக தேர்தல் செயலகம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இதன்படி இம்மாதம் முதலாம் திகதி முதல் 28ஆம் திகதிவரை புதிய அரசியல் கட்சிகள் பதிவுக்காக விண்ணப்பிக்க முடியும் என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். முஹம்மத் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரதேச சபைகளுக்காக கோரப்பட்டிருந்த நியமனப் பத்திரங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

15 »»»

## இடை நிறுத்தப்பட்ட 80 மாணவர்களின் பெறுபேறுகளை வெளியிட தீர்மானம்

### கபீர் ஹாசிம், முஸ்லிம் கவுன்சில் முயற்சிக்கு பலன்



■ ஏ.ஏ.எம்.பாயிஸ்

தாம் வசிக்கும் மாவட்டத்திற்கு வெளியே கல்விப்பொதுத்தராதர உயர்தரப்பரீட்சை எழுதியமைக்காக பரீட்சைப்பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டிருந்த மாணவர்களுக்கான பெறுபேறுகளை வெளியிட பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரும் ஐக்கிய தேசியக்கட்சி

15 »»»

## டிரம்பின் தீர்மானம் அதிர்ச்சி தருகிறது

### அமைச்சர் ஹக்கீம்



புதிதாக பதவியேற்ற அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் அரபு நாடுகள் மீது விதித்துள்ள பயணக் கட்டுப்பாடுகள் சர்வதேச அரங்கில் சூடான பேசுபொருளாக மாறியுள்ளது. இந்த உத்தரவை ஏற்கமறுத்த தலைமை வழக்க நிஞரை

15 »»»

## அமெ.பாணியில் குவைத்: 5 நாட்டவர்களுக்கு தடை

15 »

## மரண வீட்டுக்கு சென்றதால் வழக்குக்கு சமூகமளிக்கவில்லை

### ஞானசார தேரரின் சட்டத்தரணி

அல்குர்ஆன் அவமதிப்பு மற்றும் நிப்போன் ஊடக மாநாட்டில் குழப்பம் விளைவித்தமை தொடர்பாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் உட்பட அறுவருக்கெதிரான வழக்கு நேற்று கோட்டை

15 »»»

## 7 முஸ்லிம்களின் தேசத் துரோக பிரகடனத்தை நீக்கவும்

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் தேசத்துரோகிகளாக பிரகடனம் செய்யப்பட்ட கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் எழு பேருக்கு எதிரான அறிவிப்பை நீக்குமாறு

15 »»»

### ஜனாதிபதி நீதி அமைச்சருக்கு ஆலோசனை



## அமெரிக்காவில் இலங்கையர் எவரும் தடுத்து வைக்கப்படவில்லை

15 »»»

## வசீம் கொலை விவகார அநுரவின் தொலைபேசி அழைப்பில் விசாரணை

■ பீ.எப்.எம் றிஷாட்

வசீம் தாஜுதீன் கொலை செய்யப்பட்ட

15 »»»

நாட்டின் எந்தவொரு இடத்திலிருந்தும் உங்கள் வைத்தியரை செனல் செய்யலாம்




இலங்கையின் பாரிய வைத்தியர் செனல் செய்யும் வலையமைப்பு

உட்பட 200+ நாடளாவியரீதியிலான வைத்தியசாலைகள்

எந்தவொரு தொலைபேசி வலையமைப்பிலிருந்தும் 225 அல்லது SLT ஊடாக 1225ஐ அழையுங்கள்

தங்க ஆபரண பாதுகாப்பு வசதி



உங்கள் பெறுமதிமிக்க தங்க நகைகளை பாதுகாப்பாக வைத்து மன நிம்மதியையும் நிதி அனுகூலங்களையும் பெற்றுக்கொள்ள எமது தங்க ஆபரண பாதுகாப்பு வசதியை பெற்றிடுங்கள்.

நாம் வழங்கும் வசதிகள் என்ன?

- பாதுகாப்பு வைப்புப் பணம் எதுவும் தேவையில்லை
- மிகவும் நியாயமான பாதுகாப்புக் கட்டணம்
- குறைந்தபட்சம் 6 மாதங்களுக்கான பாதுகாப்பு வைப்பு. இதனை 1 வருடம் வரை நீடிக்கலாம்.
- பாதுகாப்பில் வைக்கப்படும் தங்கத்திற்கு இலவச தக்கா.ஃபுல் காப்புறுதி
- இச்சேவை தற்போது புறக்கோட்டை, பழைய சோனக வீதி, தெமடகொட, கிருலப்பனை, காத்தான்குடி, கல்முனை, காலி, அக்குறணை, கம்பளை, சம்மாந்துறை, மாவனல்லை, அக்கரைப்பற்று, தெஹிவளை, நிந்தவூர், குளியாப்பிட்டி, ஏறாவூர், நீர்கொழும்பு, பதுளை, புத்தளம், கிண்ணியா மற்றும் இரத்தினபுரி கிளைகளில் வழங்கப்படும்.
- தங்க ஆபரண பாதுகாப்பு வசதியில் வைக்கப்பட்ட தங்க ஆபரண சான்றிதழை பிணையாக வைத்து உங்கள் அவசர பணத்தேவையை பூர்த்தி செய்யலாம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி

Amãna Bank

# திரைக்கு பின்னால்

- சஞ்சாரி

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கிழக்கு விஜயம், கண்டிக்கான அதிவேக பாதை நிர்மாணப் பணிகளின் ஆரம்பம், கூட்டு எதிர்க்கட்சியின் நுகேகொட கூட்டம், அமைச்சர் மனோகணேசனின் கல்முனை விஜயம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் பசீர் சேகுதாவூதின் ஊடகப் பேட்டி, பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க பிரதேச செயலாளர் ஒருவரை அச்சுறுத்தியதாகக் கூறப்படும் குற்றச் சாட்டு போன்றன காரணமாக அரசியல் களம் சூடாகவே காணப்பட்டது.**

## மன்னிப்பு கோரமாட்டேன் என அடம் பிடிக்கும் பிரதியமைச்சர்

திவுலபிட்டிய அக்கரகம பிரதேசத்தில் இடம்பெறும் மண் வியாபாரம் தொடர்பாக எழுந்த பிரச்சினை இவ்வாரத்தில் ஊடகங்களில் கூடுதலாக பேசப்பட்ட விடயமாகவுள்ளது. திவுலபிட்டியிலிருந்து மண் எடுத்துச் செல்லப்பட்டு முதுராஜவெல ச துப்பு நிலத்துக்கு போடப்படுகிறது. இது தொடர்பான தகவல் கிடை த்ததும் பிரதி அமைச்சர் திவுலபிட்டிய பிரதேச செயலாளரிடம் விபரங்களைக் கேட்டறியும் போதே வாக்குவாதம் ஏற்பட்டது. பிரதேசசபை சார்பாக பதிலளிக்கத் தவறியதனையடுத்து பிரதி அமைச்சர் பிரதேச செயலாளருக்கு செய்யும் அநியாயத்துக்காக உமக்கு இடியே விழும் என்று கூறிய கூற்றினை வாபஸ் பெற வேண்டுமெனக் கூறி கம்பஹா மாவட்டத்தில் அரச ஊழியர்கள் ஒருநாள் பகிஷ்கரிப்பிலீடுபட்டனர். தான் எப்படியும் மன்னிப்புக் கோர மாட்டேன் என பிரதியமைச்சர் அடம்பிடித்து வரும் நிலையில் இது தொடர்பாக உள்துறை அமைச்சு நடத்திய விசாரணையில் பிரதேச செயலாளர் தவறிழைத்திருப்பதாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதன் எதிரொலியாக பிரதேச செயலாளர் அலுவலகத்தின் பொறியியலாளர் களுத்துறைக்கு இடமாற்றப்பட்டுள்ளார். வெள்ளிக்கிழமைக்கு முன ரஞ்சன் மன்னிப்புக் கேட்காவிடின் நாடளாவிய ரீதியில் பணிப் பகிஷ்கரிப்பு ஒன்றை நடத்தப் போவதாக இலங்கை நிர்வாக உத்தியோகத்தர் சங்கம் தெரிவித்துள்ளது. இதேநேரம் மண்ணை அகழ்வதற்கு பூகோள விஞ்ஞான சுரங்கப் பணியகம் வழங்கியிருந்த இரு அனுமதிப் பத்திரங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன. இப்போது நான் நடத்திய போராட்டம் வெற்றி பெற்றுள்ளது. நான் போராடியது மக்களுக்காக ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு நான் விடுக்கும் சவால் நான் செய்த தவறு என்ன என்று கூறுங்கள் என பிரதி அமைச்சர் ரஞ்சன் தெரிவித்துள்ளார்.

## குரோட்டன், பலா இலைகளுடன் மாகாண சபைக்கு வந்த சு.க. உறுப்பினர்கள்

வறட்சியை எதிர் கொள்வதற்கு பலா இலையும் குரோட்டன் இலையும் உண்ணலாம் என மகாவலி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் தெரிவித்த கருத்து பெரும் சர்ச்சையை உருவாக்கியுள்ளது. எதிர்க்கட்சியினருக்கு இக்கூற்று வாயில் சீனி போட்டது போன்று அமைந்துள்ளது. தென் மாகாண சபை மாதாந்த அமர்வில் குரோட்டன், பலா மற்றும் புல்லுக்கட்டுகளுடன் உறுப்பினர்கள் வந்தமை சுவாரஷ்யமாக இருந்தது. தென் மாகாண சபை உறுப்பினர் சன்ன சாலிய மெண்டிஸ் பலா இலை மாலை அணிந்து சபைக்குள் வந்ததனையடுத்து உறுப்பினர்கள் அவரை கேலி செய்யத் தொடங்கினர். சபையின் பிரதித் தலைவர் சம்பத் அதுகோரள உரையாற்றும்போது, அரசாங்கக் கட்சி உறுப்பினர்கள் தாம் கொண்டு வந்திருந்த பலா மற்றும் குரோட்டன் இலையைக் காண்பித்து ஆட்சேபனை தெரிவித்தனர். பிரதித்தலை வர் இந்த அரசு வறட்சியை எதிர் கொள்வதற்குத் தயாராகவில்லை எனக் குற்றஞ்சாட்டி உரையாற்றினார். ஐ.தே.க. வினருக்கு பலா மற்றும் குரோட்டன் இலைகளை கறி சமைத்து கொடுக்க வேண்டும் அவர்களுக்கு பழகியதும் நாட்டு மக்களும் முன்மாதிரியாகப் பின்பற்றுவார்கள் என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் தென்னகோன் நிலமே, இந்த இலைகளில் நல்ல மருத்துவப் பலன்கள் உள்ளன. முதலில் அதனைச் செய்வோம். உங்கள் பக்கத்திலே விவசாய அமைச்சர் இருக்கிறார்.

பிரதித் தலைவர் சம்பத் அதுகோரள : நல்லதென்றால் உண்ணுங்கள், இவற்றை உண்டால் பின் புல்லையும் உண்ணலாம்.

விளையாட்டுத்துறை அமைச்சர் வீரசுமன வீரசிங்க, இவற்றை நீங்கள் உண்டு 62 லட்சம் மக்களுக்கும் வழங்குங்கள். இப்போது 6 இலட்சம் பேருக்கு நீங்கள் புல்லைத்தான் உண்ணக் கொடுக்கப் போகிறீர்கள். எப்படியானாலும் இன்னும் சில காலத்தில் புண்ணாக்கினை உண்ணக் கொடுப்பீர்கள். சந்தன பிரியந்த (ஐ.தே.க.) எமது அமைச்சரா? விவசாய அமைச்சரா சொன்ன செயலாளர் யார்? அக்காலத்தில் எங்களுக்கு பருப்பு என்று சபதில்லாக் காயை உண்ண வைத்தார்கள்.

சன்ன சாலிய மெண்டிஸ் இந்த அரசுக்கு அதிக ஆயுள் இல்லை. தண்ணீர் சூடாகும் வரைதான் இந்த நடனம். அதுவரை புல்லை சாப்பிட்டுக் கொண்டு இருங்கள்.

## மலேசியத் தூதுவர் முஸம்மிலது விருந்துபசாரத்துக்கு முன்னாள் மலேசியத் தூதுவர்

முன்னாள் கொழும்பு மேயர் ஏ.ஜே. எம். முஸம்மில் மலேசியாவின் தூதுவராக கடந்த திங்களன்று பதவியேற்றார். மலேசியா செல்வதற்கு முன் கொழும்பில் அவரது இல்லத்தில் கடந்த வெள்ளியன்று விருந்துபசாரம் ஒன்றை வழங்கி பிரியாவிடை பெற்றுக் கொண்டார். அமைச்சர் கபீர் ஹாசிம் ஏ.எச்.எம். பௌசி உட்பட குடும்ப உறவினர்கள் மற்றும் கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர்கள் சமூகப் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். முன்னாள் ஈரான் தூதுவர்களான எம்.எம். சுஹைர், ஓமர் காமில், ஆப்கானிஸ்தான் தூதுவர் சாமரிக்கார், ஜேர்மன் தூதுவர் சரத் கோங்கஹகே, யூகோஸ்லாவிய தூதுவர் ராசிக் சரூக் ஆகியோரும் கலந்து கொண்டனர். பதவிக்காலத்தை முடித்து வெள்ளியன்று தாயகம் திரும்பிய முன்னாள் தூதுவர் அன்சாரும் கலந்து கொண்டார். நுகேகொடையில் நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சி மேடையில் உரையாற்றிய முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வரும் அங்கிருந்து நேரே நிகழ்வில் கலந்து கொண்டார். வந்திருந்த பலரும் நுகேகொட கூட்டம் பற்றியே கருத்துப் பரிமாறிக் கொண்டனர். மலேசியாவுக்குச் சென்றாலும் ஒரு மாதத்தில் தாயகம் திரும்பி வழமையான பணிகளை முன்னெடுப்பதாக பெரோஸா முஸம்மில் தனக்கு வாழ்த்து தெரிவித்தவர்களுக்கு தெரிவித்தார்.

## நுகேகொடை கூட்டத்தில் வெற்றிடமாக இருந்த இந்து மதக் குருவின் கதிரை

சோதிடத்தில் நம்பிக்கை வைத்திருப்ப வர்கள் கிரக மாற்றம் குறித்து கூடுதலான அக்கறை செலுத்துவர். கடந்த வெள்ளியன்று கிரக மாற்றம் ஏற்பட்டது. கிரக மாற்றம் தமக்குச் சாதகமாகவுள்ளதாக கூறி வரும் கூட்டு எதிர்க்கட்சியினர், புது வருடத்துக்கான தமது முதற் கூட்டத்தினை கிரக மாற்ற தினத்தன்றே நுகேகொடையில் நடத்தினர். ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் நுகேகொடைக்கு வருவார்கள் எனச் செய்த பிரசாரத்துக்கு மத்தியில் நுகேகொடையில் இதற்கு முன் கூடாதளவிற்கு சனம் திரண்டிருந்தது. ஏற்பாட்டாளர்களுக்கு வந்தவர்கள் யார் வராதவர்கள் யார் எனத் தீர்மானிக்க முடியாதளவுக்கு சனம் கூடியிருந்தது. பிற்பகல் 2.45 மணியளவில் கூட்டம் ஆரம்பமானது. கூட்டு எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்திய 51 பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட மாகாண சபை மற்றும் முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

சமயத் தலைவர்களோடு பிரபல சிங்க ளக் கலைஞர்கள் பலரும் கலந்து கொண்டனர். நிகழ்வுகள் நான்கு சமய பிரார்த்தனைகளுடன் ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் இந்து சமயத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி எவரும் வராததனால் அவருக்காகப் போடப்பட்டிருந்த ஆசனம் வெற்றிட மாகவே காணப்பட்டது. முஸ்லிம்கள் சார்பில் உலமாக் கட்சியின் தலைவர் மௌலவி முபாரக் அப்துல் மஜீத் கிராஅத் ஓதினார். அதனுடன் ஒரு சிற்றுரையையும் நிகழ்த்தினார். 'வீழ்ச்சியின் ஆரம்பம்' என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் தமிழ், முஸ்லிம் சார்பில் முன்னாள் பிரதி அமைச்சர் கருணாவும் முன்னாள் ராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வரும் உரையாற்றினார்கள். கருணா தான் சிங்க ளத்தில் எழுதி வந்த உரையை கொச்சை சிங்களத்தில் நிகழ்த்தினார். அஸ்வர் ஹாஜி யார் மஹிந்த வந்தால் பணம் வரும் எனக் கூறும் மஹிந்த கமிங் மணி கமிங் என்ற கருத்துப்பட உரையாற்றியது முகநூல்களில் பேச்சுப் பொருளாக மாறியுள்ளது.

பல்வேறு கட்சித் தலைவர்களது உரைகளையடுத்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இறுதியாக உரையாற்றினார். மஹிந்த ராஜபக்ஷ வைபவத்துக்கு தனது வாகனத்தில் வராது பாதுகாப்புக் காரணிகளுக்காக மற்றொரு வாகனத்திலே வந்திறங்கினார். கூட்ட அறிவிப்பாளர் முன்னாள் ஜனாதிபதி வருகிறார் என அறிவித்த போதும் அந்த வாகனத்தில் மஹிந்த ராஜபக்ஷ வந்திருக்கவில்லை. பிறகு வேறொரு வாகனத்திலே அவர் வந்தார்.

மத்திய வங்கி பிணை முறி மூலம் கொள்ளையடித்த பணத்தைக் கொண்டு தொலைக்காட்சி, வானொலி மற்றும் பத்திரிகை வங்கி ஆரம்பிப்பதற்கு நல்லாட்சி அரச நடவடிக்கை எடுத்து வருகிறது. எமது அரசு பதவிக்கு வந்ததும் உடனே அந்தச் சொத்துக்கள் யாவும் அரசு டைமையாக்கப்படும் என்று இங்கு பேசிய மஹிந்த ராஜபக்ஷ கூறினார்.

இன்று வாழ்க்கைச் செலவு எப்படி? மகிழ்ச்சிகரமாக உண்ணுகிறீர்களா? தலைவர்கள் சந்தோசமாக தூங்குகிறார்கள். பசி என்றால் பலா இலையைச் சாப் பிடுங்கள் என்று கூறுகிறார்கள். இந்தத் தலைவர்களுக்கு பலா இலையை அல்ல, புல்லைத்தான் கொடுக்க வேண்டும். பொடியன்கள் சிலர் வந்து அமைச்சர்கள் வீடுகளுக்கு புல்லுக் கட்டுக்களை அனுப்புவோமா என்று கேட்டார்கள். பைத்தியமா உங்களை கூட்டில் போடுவார்கள் என்று நான் அவர்களிடம் கூறினேன். இந்த கூட்டத் திற்கு வந்திருக்கும் பெருந்தொகையான மக்கள் இந்த அரசுக்கு வீட்டுக்குப் போ என்று கூறுகிறார்கள் என்றும் மஹிந்த ராஜபக்ஷ தனதுரையில் குறிப்பிட்டார். ஊர்வலங்களில் வந்தோர் பலா இலைகளையும் குரோட்டன் இலைகளையும் எடுத்து வந்தனர்.

## மைத்திரியை விமர்சிப்பதிலிருந்து தவிர்த்துக் கொண்ட மஹிந்த அணியினர்

இக்கூட்டத்தில் சிறையிலிருக்கும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவின் உரை ஒளிபரப்பப்பட்டது. விமல் பாராளுமன்றத்திலிருந்து இதற்காக ஆற்றிய உரையே ஒலிபரப்புச் செய்யப்பட்டது. எமது நாட்டில் ஒரு முக்கியமான கூட்டத்திற்கு வந்துள்ள சந்தர்ப்பத்தில் எம்மை இருட்டறைக்குள் சிறைப்படுத்தியிருக்கும் வேளை வெளிநாட்டு நிகழ்ச்சி நிரலொன்று நாட்டில் பொம்மை ஆட்சி அமுல்படுத்தப்படும் வேளை ஆட்சியாளர்கள் நடனமாடும் காட்சிகளை காணக்கூடிய சந்தர்ப்பத்தில் உங்களுக்கு பேசக் கிடைத்ததனை முக்கியமாகக் கருதுகிறேன் எனக்கூறி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை கடுமையாக விமர்சித்து உரையை ஆரம்பித்தார்.

இக்கூட்டத்தில் பேசிய மஹிந்த ராஜபக்ஷ உட்பட சகல கட்சித் தலை வர்களும் தமதுரைகளில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை விமர்சிப்பதி லிருந்து தவிர்த்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## பைசரின் அறிவித்தலின் பின் உள்ளூராட்சித் தேர்தலுக்கு தயாராகும் கட்சிகள்

நீண்ட காலமாக இழுத்தடிக்கப்பட்டு வரும் உள்ளூராட்சித் தேர்தல் எப்போது நடத்தப்படும் என்பது பற்றி இன்னும் உறுதியான முடிவு எடுக்கப்படாத நிலையில் பெப்ரல் அமைப்பு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு உத்தரவிடுமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கு கடந்த திங்களன்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஸ் டிசலிப் இன்னும் ஒரு மாதத்தில் எல்லை நிர்ணயம் தொடர்பாக சிபாரிசுகளை வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுவதனையடுத்து தேர்தல் தொடர்பான நம்பிக்கை கட்சிகளிடையே ஏற்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத்தில் அமைச்சர் அளித்த வாக்குறுதியினையடுத்து தேர்தல்கள் ஆணைக்குழு அரசியல் கட்சிகள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர் பைசர் முஸ்தபா புதிய தேர்தல் வட்டாரங்களை வர்த்தமானியில் பிரகடனப்படுத்துவதாகத் தெரிவித்தார். பெண் பிரதிநிதித்துவம் மற்றும் இளைஞர் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது தொடர்பாகவும் இக்கூ ட்டத்தில் பேசப்பட்டுள்ளது. இக்கூட் டத்தில் கலந்து கொண்ட ஜாதிக ஹெல உறுமயவின் பிரதிநிதி நிசாந்த வர்ணசிங்க எல்லை நிர்ணயக் குழுவின் தலைவரது நடுநிலைத் தன்மை பற்றி கேள்வி எழுப்பினார். அசோக பிரிஸ் ஜே.வி.பி. கூட்டத்தில் மேடையேறியிருந்தார் அவரது அறிக்கையின் நடு நிலையத் தன்மை பற்றியும் சிந்திக்க வேண்டியுள்ளது என நிசாந்த வாதிட்டார்.

இதேநேரம், தேர்தலை ஜூன் அல்லது ஜூலையில் நடத்துவது பற்றி கலந்துரையாடல்கள் நடைபெற்ற நிலையில் புதிய தேர்தல் முறைக்கு சிறு பான்மை மற்றும் சிறு கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்ற நிலையில் தேர்தல் நடத்தப்படுவது தாமதமாகும் என்ற கேள்வியும் அரசியலரங்கில் எழுப்பப்பட்டுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டு எதிர்க்கட்சி தனித்து போட்டியிடும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சிலாபத்தில் தெரிவித்துள்ளார். தேர்தலுக்கு தமது கட்சியினர் என்றும் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## கற்சிலை போன்று ஜனாதிபதி இருக்கிறார்

இவ்வாரத்தில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகளில் ஒன்று சயிடம் தொடர்பாக மேல் நீதிமன்றம் அளித்த தீர்ப்பாகும். சயிடம் நிறுவனத்திற்கு பட்டம் வழங்கும் உரிமையை உறுதிப்படுத்தியே நீதிமன்றம் இத்தீர்ப்பினை அளித்திருந்தது. மக்கள் விடுதலை முன்னணி, இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கம் என்பன இதற்கு தொடராக எதிர்ப்புத் தெரிவித்தே வந்தன. மேல் நீதிமன்றத் தீர்ப்பினையடுத்து பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருடன் தொடர்பு கொண்டு கேட்டார். என்ன நடந்தது நாம் ஒருவரும் இவ்வாறான ஒரு தீர்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. இலங்கையில் கல்வியின் தரத்தை கீழ் மட்டத்திற்கு கொண்டு செல்வதாகும் என்று கூறியதற்குப் பதிலளித்த பிமல் ரத்நாயக்க அரசு ஆரம்பத்திலிருந்து சயிடம் பக்கத்திலே இருந்தது. எனவே, இத்தீர்ப்பு குறித்து எமக்கு வியப்படைய முடியாது. கிரியல்ல நீதிமன்ற தீர்ப்பின் பின் சகல பிரச்சினையும் தீரும் எனத் தெரிவித்திருந்தார். அதாவது அரசு இவ் வாறான ஒரு தீர்ப்பினையே எதிர்பார்த் திருந்தது என்றார்.

இது தொடர்பாக பிமல் ரத்நாயக்கவுடன் பேசிய வைத்தியர் ஒருவர், இந்த நாட் டுக்கு ஒரு பொதுவான தேசிய கொள்கை இல்லையா? என்று கேள்வி எழுப்பினார். தேசிய கொள்கை பற்றிப் பேசுவது சயிடம் போன்ற கடை ஒன்றுக்காக தோன்றும் கல்வி அமைச்சரும் சுகாதார அமைச்சரும் எது பற்றியும் தெரியாத கற்சிலை போன்ற ஒரு ஜனாதிபதியும் இருக்கும் நாட்டிலாகும் என்று பிமல் ரத்நாயக்க பதிலளித்தார்.

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ அமைச்சின் உள்ளக கலந்துரையாடல் ஒன்றில் தேசிய வீடமைப்பு அதிகாரச் சபைக்குள் காலால் இழுக்கின்ற வேலைகளைச் சீர்குலைக்கும் பேய்கள் இன்றும் ஊசலாட்டம் விளையாடுவதாகக் குறிப்பிட்டார். இவ்வாரத்தில் பொல்பிதிகம விஜயபாகம திறப்பு விழாவின் போது அம்பாந்தோட்டை ஒக்வெலவில் சிமெந்து பகிர்ந்தளிக்கும் வைபவத்திலும் சீர்குலைக்கும் வேலைகள் நடந்ததாகவும் அவை தொடர்பாக அமைச்சு மட்டத்தில் இரு விசாரணைகள் நடைபெறுவதாகவும் அமைச்சர் சஜித் தெரிவித்தார். இவ்வளவு சகோதரத்துவத்துடனும் நல்லிணக்கத்துட னும் அரசியல் பழிவாங்கல் இல்லாமல் நாம் வேலை செய்யும்போது சில அதிகாரி களது தேவைகளுக்காக வேலைகளைச் சிக்கலுக்குள்ளாக்குகிறார்கள். அவர்களை பதவிகளிலிருந்து நீக்குவது தவிர வேறு ஒன்று செய்ய முடியாது என அமைச்சர் பிரதி அமைச்சர் இந்திக பண்டாரநாயக்கவுக்கு கூறினார்.

இதேநேரம், அமைச்சர் பெலியத்த தேர்தல் தொகுதியிலுள்ள பட்டியவெவ மற்றும் பல்லத்தர கிராமங்களை இ ணக்கும் 393 லட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட பாலத்தை திங்களன்று திறந்து வைத்தார். செயலதிகார மிகு ஜனாதிபதி ஒருவரை இருமுறை உருவாக்கிய தொகுதி மக்களுக்கு இப்படி ஒரு சிறு வேலையைச் செய்ய முடியாது போனதற்கு வெளியூரிலிருந்து வந்த அரசியல் குருவியான கொழும்பு பிரேமதாஸவின் மகன் இதனைச் செய்தார் என தம் கரம் பற்றி மகிழ்ச்சி தெரிவித்த மக்களிடம் சஜித் தெரிவித்தார்.

## இந்தி முஸ்லிம் லீக் தலைவர் மர்ஹூம் இ. அஹ்மதுடன் இலங்கை தலைவர்களின் பசுமையான நினைவுகள்



அண்மையில் காலமான இந்திய முஸ்லிம் லீக் தலைவர் இ. அஹ்மதை, முன்னாள் அமைச்சர் அஸ்வர் சந்தித்போது எடுத்துக்கொண்ட படம். இப்படத்தில் முறையே இடமிருந்து வலமாக, ஏ.கே.ஏ. அப்துஸ்ஸமத் (தமிழ்நாடு முஸ்லிம்லீக் தலைவர்), முன்னாள் அமைச்சர் அஸ்வர், மர்ஹூம் இ. அஹ்மத் (முன்னாள் முஸ்லீம்லீக் தலைவர்), மர்ஹூம் ஏ.எல்.எம். ஹாசிம் (அகில இலங்கை முஸ்லிம் லீக் பொதுச் செயலாளர்) மற்றும் ஸெய்யித் அலி சாஹிர் மௌலானா ஆகியோரையும் காணலாம்.

# அக்கரைப்பற்று ஆஸ்பத்திரியின் சமையலறை தேடிச் சென்ற ஜனாதிபதி

## பெண் காதி பிரேரணை அங்கீகாரம் மறுப்பு

முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட் டத்தில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பாக நீதியரசர் சலீம் மர்சூப் தலைமையிலான குழு வார இறுதியில் கூடியது. அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா முன்வைத்த ஆலோசனைகள் இக்கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மாதர் அமைப்புக்கள் முன்வைத்த பெண் காதிமார் பிரேரணையை ஏற்றுக் கொள்வதில்லை என்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. இக்குழு எதிர்வரும் 19ஆம் திகதி மீண்டும் கூடவுள்ளது. இதேநேரம் சலீம் மர்சூப் குழுவின் அறிக்கையை முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களது அங்கிகாரத்துடனே நிறைவேற்றப்பட வேண்டுமென்றும் முஸ்லிம் எம்.பிக்கள் சார்பில் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அக்கரைப்பற்றில் ஆஸ்பத்திரியின் சமையலறையைத் தேடிச் சென்ற ஜனாதிபதி

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதனன்று கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்தார். கிழக்கு முதலமைச்சர் நஸீர் அஹமதின் அழைப்பில் ஏறாவூருக்கு விஜயம் செய்தார். ஏறாவூருக்கான நிகழ்ச்சி மாலையே நடைபெற்றது. இதற்கு முன் ஜனாதிபதி களுவாஞ்சிக்குடி வைத்தியசா லைக்கு விஜயம் செய்தார். மட்ட க்களப்பு மாவட்டத்திற்கு மேலதிகமாக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு விஜயம் செய்தார். அக்கரைப்பற்றுக்கு ஜனாதிபதி விஜயம் செய்வது செ வ்வாயன்று மாலையே அறிவிக்கப்பட்டது. அக்கரைப்பற்று ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்த ஜனாதிபதி, நேரடியாக சமைய லறைக்கே விஜயம் செய்தார். வைத்தியச ாலை அத்தியட்சகர் டாக்டர் ஐ.எம். ஜவாஹிரிடம் வைத்தியசாலையின் தேவை கள் பற்றி கேட்டறிந்தார்.

களுவாஞ்சிக்குடி கூட்டத்தில் எதிர்க்கட்சி த் தலைவர் ஆர். சம்பந்தன் உருக்கமான உரையொன்றை நிகழ்த்தினார். ஜனாதிபதி செயலகப் பணிப்பாளர் எம்.கே. ராஹுல் அவரது உரையை ஜனாதிபதிக்கு பின்னாலிருந்தே சிங்களத்தில் மொழி பெயர்த்தார். சம்பந்தன் ஒரு முக்கிய உரையை ஆற்றினார் என்று ஜனாதிபதி அப்போது தெரிவித்துள்ளார்.

## 69ஆவது சுதந்திர தினம்;

# பலத்த பாதுகாப்பு போக்குவரத்து ஏற்பாடு



இலங்கையின் 69 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் சனிக்கிழமை நடைபெறவுள்ளதால் வெள்ளிக்கிழமை(03) 9 மணியிலிருந்து 12 மணி வரை காலி வீதி, காலி முகத்திடலிருந்து பழைய பாராளுமன்ற சுற்றுவட்டம் வரை மூடப்பட்டுள்ளதாக போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளுப்பிட்டிய சந்தியிலிருந்து காலி முகத்திடல் சுற்றுவட்டத்திற்கு, கொள்ளுப்பிட்டி சாந்த மைக்கல் சுற்றுவட்டத்திற்கு ஊடாக காலி முகத்திடல் றொடுன்டா சுற்றுவட்டத்தில் குறித்த வீதியில் வசிப்பவர்கள் மற்றும் பயணிக்க முடியும்.

மேலும், சுதந்திர தின ஒத்திகைகள் இம்பெறுவதால் கொழும்பு நகரில் பாரிய வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளதுடன், கோட்டை, புறகோட்டை, புரகல, தர்மபால மாவத்தை, தாமரை தடாகம், இம்பக்வெல சந்தி கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் பாரிய வாகன நெரிசல் ஏற்பட்டிருந்ததுடன், 138, 120 இலக்க வழித்தடங்களை கொண்ட பஸ் சேவைகள் உள்ளிட்ட பல சேவைகள் பாதிக்கபட்டுள்ளது. இதேவேளை, சுதந்திர தினத்தன்று அதிகாலை 5 மணி முதல் நண்பகல் 12 மணி வரை வாகனப் போக்குவரத்து ஒழுங்குகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

சுதந்திர தினத்தை முன்னிட்டு கொழும்பு நகரில் பாதுகாப்புத் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதோடு, சுதந்திர தினத்தன்று அதிகாலை 5 மணி முதல் காலிமுகத்திடல் சுற்றுவட்டம் முதல் பழைய பாராளுமன்ற சுற்றுவட்டம் வரையிலும், சைத்தியா வீதியூடாகவும் வாகனங்கள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

காலை 7 முதல் நண்பகல் 12 மணி வரை கொள்ளுப்பிட்டிய சந்தியால் காலி முகத்திடல் நோக்கிப் பிரவேசிப்பதற்கும், செள். மைக்கல்ஸ் வீதியால் காலி முகத்திடல் நோக்கிப் பயணிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர். தொடுன்ன சுற்றுவட்டத்தின் ஊடாக காலி வீதிக்குள் பிரவேசிப்பதற்கும் செரமிக் சந்தியூடாக பழைய பாராளுமன்றம் நோக்கி லோட்டஸ் வீதியூடாகப் பயணிப்பதற்கும் வாகனங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், யோர்க் வீதியால் இலங்கை வங்கி மாவத்தைக்குள் பிரவேசிப்பதற்கும் சீநோர் சந்தியால் கோட்டை ரயில் நிலைய வீதியூடாக மத்திய தபால் பரிமாற்று நிலைய சந்தி ஊடாக செரமிக் சந்திக்குள் பிரவேசிப்பதற்கும் வாகனங்களுக்கு அனுமதி வழங்கப்படாது.

மார்க் கான் மாக்கார் வீதி, உத்தரனந்த மாவத்தை சந்தியூடாக காலி முகத்திடல் சுற்றுவட்டத்திற்குள் பிரவேசிப்பதற்கு குறிப்பிட்ட காலப்பகுதியில் வாகனங்களுக்கு அனுமதி வழங்கப்படாது.

எனினும், அந்த பிரதேசங்களில் உள்ளவர்கள் மற்றும் அலுவலகங்களில் தொழில் புரிவோருக்கு மாத்திரம் விசேட அனுமதி வழங்கப்படும் என்றும் பொலிஸ் தலைமையம் தெரிவித்தது. இதேவேளை, 69 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் சனிக்கிழமை இடம்பெறவுள்ளதால் கொழும்பில் சனிக்கிழமை பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், போக்குவரத்து முறைகளிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதேவேளை காலி முகத்திடலில் முப்படையினரின் அணிவகுப்புக்கள் இடம்பெறுவதுடன் பாடசாலை மாணவர்களின் அணிவகுப்புக்களும் இடம்பெறவுள்ளன.

## தேசிய மருத்துவ ஆய்வு நிலையத்தில் நோயாளர் வார்ட், பற் சிகிச்சை நிலையம்



ஐ.டீ.எச் தொற்றுநோய்களுக்கான தேசிய மருத்துவ ஆய்வு நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்ட நோயாளர் வார்ட்டும், பற் சிகிச்சை நிலையமும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் வியாழனன்று திறந்து வைக்கப்படடது.

டெங்கு நோயாளர்களை அனுமதிக்கும் நோக்கில் இலங்கை இராணுவத்தின் அனுசரணையில் இந்த நோயாளர் விடுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதன் நிர்மாணப் பணிகளுக்காக இராணுவத்தினர் வழங்கிய பங்களிப்பினை கௌரவிக்கும் முகமாக மேல் மாகாண கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுதந்த ரனசிங்க மற்றும் மருத்துவமனைக்கு தாதியர்களை அமர்த்திய இலங்கை கடற்படையினருக்கும் ஜனாதிபதியால் நினைவுச் சின்னங்கள் இதன் போது வழங்கி வைக்கப்பட்டன.

புதிய நோயாளர் வார்ட்டை திறந்து வைத்து முதலாவது நோயாளரை பதிவு செய்த ஜனாதிபதி நோயாளர்களுடன் சுமுகமாக உரையாடியதன் பின்னர் 6ஏ வார்ட்டை அவதானித்தார்.

இந்நிகழ்வில் சுகாதாரம் அமைச்சர் ராஜித சேனாரத்ன, பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார், ஜனாதிபதி செயற்றிட்டப் பணிப்பாளர் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொலன்னாவ பிரதேச அமைப்பாளர் பிரசன்ன சோளங்க ஆரச்சி, சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ஜயசுந்தர பண்டார, மருத்துவமனை பணிப்பாளர் திமுது ரத்நாயக்க மற்றும் விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம உள்ளிட்டோர் இந்நிகழ்வில் பங்குபற்றினர்.

## சாதாரண தர செயன்முறை பரீட்சை 21 இல் ஆரம்பம்

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் செயன்முறை பரீட்சை எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் மார்ச் 7 ஆம் திகதி வரை நடைபெறும் என பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

நடனம், சங்கீதம், நாடகக் கலை ஆகிய பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சை இடம்பெறுவதோடு, இதற்கு ஒரு இலட்சத்து 70 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். மேற்பார்வை செய்யும் ஆசிரியர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை இடம்பெறும் என்றும் திணைக்களம் தெரிவித்தது.

## குமார் குணரத்னத்திற்கு இலங்கை பிரஜா உரிமை

முன்னிலை சோசலிசக் கட்சியின் அரசியல்துறை உறுப்பினர் குமார் குணரத்னத்திற்கு இலங்கை பிரஜா உரிமை வழங்கப்பட்டது.

குமார் குணரத்னத்திற்கு இலங்கை பிரஜா உரிமை வழங்கப்பட வேண்டும் என, முன்னிலை சோசலிசக் கட்சியின் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்த நிலையில், கடந்த புதன்கிழமை(01) முதல் அமுலுக்கு வரும் வகையில் இவருக்கு இலங்கைப் பிரஜா உரிமை வழங்கப்பட்டுள்ளதாக, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்தது.

முன்னதாக மக்கள் விடுதலை முன்னணியின் முக்கிய தலைவராக செயற்பட்ட இவர், கட்சியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அவுஸ்திரேலியாவுக்கு சென்று அந் நாட்டின் குடியுரிமையையும் பெற்றுக் கொண்டார்.

இதனையடுத்து, கடந்த ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு மீண்டும் சுற்றுலா விசாவில் வந்த அவர் (இலங்கைப் பிரஜை அல்லாத நிலையில்) அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு கைதுசெய்யப்பட்டு பின்னர் அவுஸ்திரேலியாவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

பல சர்ச்சைகளுக்கு மத்தியில், தலைமறைவாக இருந்த குமார் குணரட்னம் கடந்த நவம்பர் 4 ஆம் திகதி கேகாலை - அகுருவெல்ல பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இதனையடுத்து, நீண்ட வழக்கு விசாரணையின் பின்னர், கடந்த மார்ச் 31 ஆம் திகதி இவருக்கு ஒரு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன், கடந்த டிசம்பர் 2 ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டார்.

## யானை தாக்கி உயிரிழப்பா? 5 இலட்சம் இழப்பீடு

காட்டு யானைகள் தாக்கி உயிரிழந்தோருக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை 5 இலட்சம் ரூபா வரை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காட்டு யானைகளின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழப்போருக்கு தற்போது 2 இலட்சம் ரூபா இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. இந்த இழப்பீட்டுத் தொகையை அதிகரிப்பதற்கான பிரேரணையொன்றை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கவுள்ளதாக நிலைபெறுதகு அபிவிருத்தி மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சு தெரிவித்தது.






# டொனல்ட் ட்ரம்ப் ஜஸ்டின் டுரூடோ

## உங்களுக்கு யாரைப் பிடிக்கும்?

■ அஷ்கர் தஸ்லீம்

உலக மக்கள் எதிர்பார்த்தது போன்றே, அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப், தனது இனவெறியையும், கோமாளித்தனத்தையும் வெளிக்காட்டத் துவங்கியுள்ளார். மெக்சிகோவுடனான எல்லையில் தடுப்பு சுவர் அமைத்தல் மற்றும் 7 முஸ்லிம் நாடுகளிலிருந்து வருவோரை தடுக்கும் சட்டமூலம் என்பன அவரது இனவெறியையும், கோமாளித்தனத்தையும் படம்பிடித்துக் காட்டுகின்றன.

மெக்சிகோவுடனான அமெரிக்க எல்லையில், மெக்சிகோ நாட்டவர்கள் அமெரிக்காவினுள் நுழையாதவாறு, தடுப்பு சுவரை அமைப்பதாக, டொனல்ட் ட்ரம்ப், தனது தேர்தல் பிரச்சாரத்தின்போது கூறிவந்தார். இப்போது, அந்த சுவரை அமைப்பதற்கு மெக்சிகோ பணம் வழங்க வேண்டும் என்று ட்ரம்ப் கூறுகிறார். இவ்வாறு மெக்சிகோ பணம் வழங்க வேண்டும் என்ற ட்ரம்பின் கோரிக்கையை புறக்கணித்துள்ள மெக்சிகோ ஜனாதிபதி, அதனை காரசாரமாக விமர்சித்துள்ளார்.

இதேநேரம், முஸ்லிம்கள் அமெரிக்காவினுள் நுழைவதை தடுப்பதாகவும், தேர்தல் பிரசாரத்தின்போது ட்ரம்ப் கூறி வந்தார். அதனை நடைமுறைப்படுத்தும் வகையில், இப்போது 7 முஸ்லிம் நாடுகளிலிருந்து அமெரிக்காவுக்கு வருவோரை தடை செய்யும் சட்டமூலத்தில் அவர் கடந்த வாரம் கையெழுத்திட்டுள்ளார்.

சிரியா, சோமாலியா, சூடான், லிபியா, யெமன், ஈரான், ஈராக் ஆகிய முஸ்லிம் நாடுகளிலிருந்து அமெரிக்கா வருவோரை தடை செய்யும் சட்டமூலத்தில் கையொப்பமிட்டுள்ள டொனல்ட் ட்ரம்ப், சிரிய நாட்டவருக்கு அகதி அந்தஸ்து வழங்கப்படாது என்றும் அறிவித்துள்ளார். இந்த சட்டமூலத்துக்கு எதிராக, அமெரிக்க நீதிபதியொருவர் தடையுத்தரவு பிறப்பித்ததை தொடர்ந்து, அமெரிக்க விமான நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள், அமெரிக்காவினுள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பின்னர், இந்த நீதிபதியை டொனல்ட் டிரம்ப் பதவி விலக்கியுள்ளார்.

முஸ்லிம்களை பிரத்தியேகமாக பதிவு செய்வதாகவும் ட்ரம்ப் கூறியிருந்தார். இது அமுல்படுத்தப்படுவதாக இருந்தால், முஸ்லிம்களுக்கு ஆதரவாக, தங்களது குடியுரிமை பதிவுகளை முஸ்லிம்களாக மாற்றுவதற்கும் பல பிரபலமான முஸ்லிம் அல்லாதோர் முன்வந்திருக்கிறார்கள்.

முன்னாள் இராஜாங்க செயலாளர் மெடலின் அல்ப்ரைட் ஒருவர்.

எனவே, அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப், தேர்தல் பிரசாரத்தின்போது அவர் தெரிவித்த விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றமை இப்போது புலனாகின்றது. இதனை அமெரிக்க மக்களும், உலக நாடுகளும் எதிர்கொள்ளும் முறைமை எவ்வாறு அமையப்போகின்றது என்பதே இப்போது உள்ள முக்கியமான விடயம்.

உலக நாடுகளில் ஜனநாயகத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கூறி, வியாட்நாம், ஈராக், ஆப்கானிஸ்தான் என்று பல உலக நாடுகள் மீது இராணுவப் படையெடுப்பு மேற்கொண்ட அமெரிக்கா, இன்றை மத்திய கிழக்கில் இலட்சக்கணக்கான உயிரிழப்புக்களுக்கும் உடைமைச் சேதங்களுக்கும் காரணமாக அமைந்துள்ளது. இவ்வாறான நிலையில், இனவெறிப் போக்குக் கொண்ட டொனல்ட் ட்ரம்ப், அமெரிக்காவின் கடிவாளத்தை இப்போது கையில் எடுத்துள்ளதால், அமெரிக்காவின் சிறுபான்மையினர், அமெரிக்க முஸ்லிம்கள், உலக நாடுகள், குறிப்பாக முஸ்லிம் நாடுகள் மீது ட்ரம்ப் எவ்வாறான கொள்கையைப் பிரயோகிக்கப் போகிறார் என்பது பெரும் அச்சமாக உள்ளது.

எவ்வாறாயினும், டொனல்ட் ட்ரம்ப், அவரது ஆட்சிக் காலத்தை எவ்வாறு கடத்தப்போகிறார்? என்னென்ன முடிவுகளை எடுத்து அமுல்படுத்தப் போகிறார் என்பதைப் பொறுத்தே, அடுத்த சில வருடங்களுக்கான சர்வதேச அரசியல் போக்கு அமையப் போகின்றது. ட்ரம்பின் ஆட்சிக்காலம்தான், அமெரிக்காவை உலக மக்கள் பெருமளவில் வெறுத்த காலப்பகுதியாக அமையப்போகின்றது.

இவ்வாறான நிலையில், அமெரிக்காவுக்கு வடக்கே உள்ள கனடாவின் பிரதமர் ஜஸ்டின் டுரூடோ, முஸ்லிம்களுக்கு ஆதரவளித்து வருகின்றமை பெரும் ஆதரவை அவருக்கு ஏற்படுத்திக்கொடுத்துள்ளது. கனடாவின் பலமே அதன் பல்வகைத்தன்மைதான் என்று தெரிவித்துள்ள கனடிய பிரதமர், அகதிகளை கனடா எப்போதும் வரவேற்கிறது என்று தெரிவித்துள்ளார்.

கனடாவின் கியூபெக் பிரதேசத்திலுள்ள இஸ்லாமிய கலாசர நிலைய மஸ்ஜிதில், பயங்கரவாதிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 6 முஸ்லிம்கள் உயிரிழந்துள்ள செய்தி, கனடியர்களை கவலைகொள்ளச் செய்துள்ளது. கடந்த ஞாயிறு (29) இரவு 08 மணி அளவில், இத்துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்படும்போது, 50 பேர் அளவில் இந்நிலையத்தில் இருந்துள்ளனர்.

பல்லின பல்கலாசார சகவாழ்வுக்கும், நல்லிணக்கத்துக்கும் பெயர் பெற்ற கனடாவில், இவ்வாறான ஒரு பயங்கரவாத சம்பவம் நிகழ்ந்தமை, அனைவரையும் ஆச்சரியத்துக்குட்படுத்தியுள்ளது. இந்தப்ப பயங்கரவாத சம்பவத்தைத் தொடர்ந்து, அறிக்கை விடுத்துள்ள கனேடிய பிரதமர் ஜஸ்டின் டுருடோ, இந்த சம்பவத்தை, முஸ்லிம்களுக்கு எதிரான பயங்கரவாதம் என்று தெளிவாகவே குறிப்பிட்டுள்ளார்.

இவர் விடுத்துள்ள அறிக்கையில், முஸ்லிம்களுக்கு எதிரான இந்தப் பயங்கரவாதத் தாக்குதலை கண்டிப்பதாகவும், தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு, அனைத்து கனடியர்கள் சார்பாகவும், அவரது மனைவி சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப், முஸ்லிம்களுக்கும், குடியேற்றக்காரர்களுக்கும் எதிரான நிலைப்பாடுகளை தெளிவாகவும், பகிரங்கமாகவும் எடுத்து, அமெரிக்கர்களதும், உலக மக்களதும் எதிர்ப்பை சம்பாதித்துக்கொண்டிருக்கின்ற வேளையில், கனேடிய பிதமர் ஜஸ்டின், முஸ்லிம்களுக்கும், குடியேற்றக் காரர்களுக்கும் ஆதரவான நிலைப்பாடுகளை எடுத்திருப்பவர்.

அமெரிக்காவில் டொனல்ட் ட்ரம்பின் இனவெறி கொள்கைகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் மாறாக, கனடாவில் அனைத்து இன, மதத்தவர்களுக்கும் தாராளமான சுதந்திரத்தை வழங்கி, கனடாவை பன்மைத்துவத்தின் அடையாளமாக மாற்றி வருகிறவர் கனடிய பிரதமர் ஜஸ்டின் டுருடோ. கனடாவின் குடியேற்ற மற்றும் பிரஜா உரிமை அமைச்சராக சோமாலிய பூர்வீகத்தைக் கொண்ட அஹ்மத் ஹுஸைன் என்ற முஸ்லிம் நபரை நியமித்திருக்கிறார் அவர்.


இவ்வாறான நிலையில், கனடாவில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை ஆரம்பித்து, தூண்டிவிடும் நோக்கத்திலேயே, இத்தாக்குதல் நடாத்தப்பட்டிருக்கின்றமை தெளிவானதாகும். மேற்குலகில் முஸ்லிம்களுக்கு மிகவும் சௌகரியமான நாடாக கனடா மாறுவதை விரும்பாதவர்களே இவ்வாறான தாக்குதல்களின் பின்னால் உள்ளனர்.

இந்த தாக்குதலைத் தொடர்ந்து, ஜஸ்டின் டுருடோ தெரிவித்துள்ள கருத்துக்களில் ஒரு முக்கியமான விடயம் உள்ளது. அதாவது, எப்போதும் முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும்போது, அதனை ஒரு தனிநபருடன் தொடர்பான சம்பவமாகவோ, அல்லது மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள் மேற்கொண்ட சம்பவமாகவோதான் மேற்குலக அரச தலைவர்களும், ஊடகங்களும் காட்டுகின்றன. ஆனால், இச்சம்பவத்தை முஸ்லிம்களுக்கு எதிரான பயங்கரவாதம் என்று ஜஸ்டின் டுருடோ தெளிவாகவே தெரிவித்துள்ளார். இவ்வாறு துணிகரமாக கருத்து வெளியிட்டுள்ள அவர் பாராட்டுக்குரியவர்.

முஸ்லிம் கனேடியர்கள் எமது தேசிய கட்டமைப்பின் ஒரு முக்கிய பகுதி. எமது சமூகங்களிலும், நகரங்களிலும், இந்த நாட்டிலும், இவ்வாறான உணர்வற்ற நடவடிக்கைகளுக்கு எந்தவொரு இடமும் இல்லை. அனைத்து கனடியர்களதும் உரிமைகளையும் கனடிய சட்ட அமுலாக்க நிறுவனங்கள் பாதுகாக்கும் என்றும் அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மிகவும் ஆகர்ஷணமிக்க ஆளுமையைக் கொண்டுள்ள ஜஸ்டின் டுருடோ, கனடாவை பன்மைத்துவத்தின் பூஞ்சோலையாக மாற்ற நினைப்பவர். கனடாவில் உள்ள அனைத்து இன, மத, கலாசாரங்களைச் சேர்ந்தவர்களையும் சமமாகப் பார்ப்பவர். இப்போது, அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் டிரம்பம் மற்றும் கனேடிய பிரதமர் ஜஸ்டின் டுருடோ ஆகியோரை உங்கள் மனக் கண்கள் முன்கொண்டு வாருங்கள். உங்களுக்கு யாரைப் பிடிக்கும்?





# இலங்கை முஸ்லிம்களின்கல்வி முன்னோடி அறிஞர் எம்.ஸி. சித்திலெப்பை

✱ ஸக்கியா ஸித்தீக் பரீத்

**5ஆம் திகதி சித்திலெப்பை நினைவுதினம்**

19ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலப்பகுதியில் இலங்கையின் ஏனைய சமூகங்கள் கல்வி, சமூக, சமய, கலாசாரத்துறைகளில் முன்னேறத் துடித்துக் கொண்டிருக்கும் போது எமது சமூகத்தவர்கள் தந்தைமாரின் வியாபாரத் துறையோடு திருப்தியடைந்து கொண்டிருந்தனர்.

இந்நிலையில் வேகமாக முன்னேறி வரும் உலகிற்கு முகம் கொடுக்க கல்வியறிவு அவசியம் என்ற உண்மையை உணர்த்தி சமுதாயத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கத்தோடு, இருளைக் கிழித்து வரும் ஒளி பொருந்திய நட்சத்திரங்கள் போலச் சில தலைவர்கள் நமது சமூகத்தில் தோன்றினார்கள். இவர்களுள் முக்கியமான ஒருவராக நாம் எம்.ஸி. சித்திலெப்பையைக் காண்கிறோம்.

இலங்கையின் முதற் சட்டத்தரணிகளில் ஒருவரான எம்.எஸ். சித்திலெப்பையின் மகனாக முகம்மது காசிம் சித்திலெப்பை கண்டியில் 1838 ஜுன் 11இல் பிறந்தார். இவரது பாட்டனார் கண்டிப்பிரதேசத்தில் ஒரு வளமிக்க வியாபாரியாகத் திகழ்ந்தார். எனினும் இவரது மகன் தந்தையைப்பின்பற்றி வியாபாரம் செய்வதில் நாட்டம் கொள்ளாமல் ஆங்கிலேயர் ஆரம்பித்த ஆங்கில அகடமியில் சேர்ந்து கல்வி கற்று வழக்கறிஞரானார்.



எம். ஸி. சித்திலெப்பையின் மூத்த சகோதரர் அரபு மொழி கற்று ஆலிமாக விளங்கினார். இவரிடம் எம்.ஸி. சித்திலெப்பை குர்ஆனையும், அரபு மொழியையும் திறம்படக்கற்றுக் கொண்டார். தனது சகோதரன் மரணப் படுக்கையில் இருக்கும் போது எம்.ஸி. சித்திலெப்பையை அருகே அழைத்து

''என் அருமைச் சகோதரனே! நான் உன்னிடமிருந்து பிரியும் நேரம் வந்துவிட்டது. நீயோ எல்லா விடங்களிலும் காபிர்களுடனேயே கருமமாற்றுகிறாய். உனது ஈமானைக் காப்பாற்ற திரு நபி (ஸல்) அவர்கள் தலையிடுவாராக! எனப் பிரார்த்திக்கின்றேன். இதுதான் மறுமை வாழ்விலும் எனது பிரார்த்தனையாக இருக்கும்'' எனக் கூறிக் கொண்டே இவ்வுலகைப் பிரிந்தார்.

தனது தமையனின் புத்திமதியைக் கேட்ட, எம்.ஸி. சித்திலெப்பை அரபு, தமிழ், ஆங்கில மொழிகளைக் கற்றுப் பாண்டித்தியம் பெற்று வழக்கறிஞரானார். இத்தோடு இவரது சிந்தனைகள் தனது சமூகத்தின் முன்னேற்றம் கருதியதாகவே இருந்தது. அப்போது கல்வி கற்ற முஸ்லிம்களின் தொகை இரண்டு சத வீதத்திலும் குறைவாகவே இருந்துள்ளது. 1880இல் முழுநாட்டிலும் இரண்டு ஆசிரியர்களே இருந்துள்ளனர். மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்த எமது சமூகத்தின் விடிவுக்கான வழிவகைகளை எம்.ஸி. சித்திலெப்பை ஆராய்ந்தார். மார்க்கச் சூழலை அடிப்படையாகக் கொண்டதொரு கல்விச் சூழலை உருவாக்க வேண்டுமென்றதொரு எண்ணம் எம். ஸி. சித்திலெப்பையின் மனதில் தோன்றியது.

முதலில் பெற்றோரின் மத்தியில் கல்வி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தோடு, ''முஸ்லிம் நேசன்'' என்ற பத்திரிகையை வெளியிட்டு முஸ்லிம்களின் அடிப்படைத்தேவையும் அவசியத்தேவையும் கல்வியே என்ற கருத்தை வலியுறுத்தி எழுதத் தொடங்கினார். பல்வேறு சொற்பொழிவுகள், மேடைப்பேச்சுக்களின் மூலம் கல்வி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தினார். இலங்கை முஸ்லிம் சமூகம், சர்வதேச முஸ்லிம் சமூகத்தின் ஓர் அங்கம் எனவும், மாறிவரும் உலகிற்கேற்ப நம்மைத் தயார் படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் குரல் எழுப்பினார்.

''முஸ்லிம் நேஷன்'' பத்திரிகையில் கல்வி பற்றி எழுதிய அவரது தத்துவக் கருத்துக்கள் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கவையாகும். 'கல்வி என்பது பாஷைகளை வாசித்தறிதல் மட்டுமல்ல, மனவிருத்திற்கும், அறிவிற்கும், தெளிவிற்கும் நூல்களை வாசிப்பதாகும். தமிழ்ப்பாஷையிலே அறிவை வளர்க்கக்கூடிய நூல்கள் குறைவு. எனவே தமிழ்மொழி மட்டும் தெரிந்தவர்கள் ஏனைய அறிவுகளையும் தெரிந்து கொள்ள அரபுக்கிதாபுகளிலிருந்து அறிய வேண்டிய அறிவுகளையும், இங்கிலீஷ் முதலிய பாஷைகளின் கல்வியையும் படித்தவர்களும், படிக்காதவர்களும், இளையவர்களும், முதியவர்களும், ஏனைய அனைவர்களும் தமது வேலை முயற்சிகளோடு வாசித்து அறிந்து கொள்ளும்படி உலமாக்கள், கல்விமான்கள் ஆகியவர்களுடைய உதவியைக் கொண்டு ஒரு பத்திரிகையை கிழமை தோறும் பிரசுரம் செய்து இப்பத்திரிகைக்கு ''முஸ்லிம் நேஷன்'' எனப் பெயரிட்டோம்' என முஸ்லிம் நேஷன் பத்திரிகையின் முதற் பக்கத்தில் எழுதப்பட்டுள்ளது.

மேலும் ''கல்வி விசாலமானது. நாளுக்கு நாள் வளரும் தன்மையுடையது. தாய்மொழி நூல்களை மட்டும் கற்றறிந்தால் விரைவில் வளர்ச்சியடையும் கல்வியை முழுமையாகப் பெறமுடியாது'' எனவும்

''கல்வி அறியாமையை அகற்றுவதற்கும் தன்னைத்தானே அறிந்து கொள்வதற்கும் உதவும் அரும் பெரும் சக்தி'' எனவும் ''சிறந்த கல்வியைக் கற்று கற்றதன்படி ஒழுகுபவனே இறைவனின் விருப்பத்துக்குரியவன்'' எனவும் ''இளம் சமுதாயத்தை இருளிலிருந்து வெளிச்சத்துக்கு கொண்டுவரும் கருவி கல்வியே'' எனவும் இவர் கூறியுள்ள ஆழமான கல்விக்கருத்துக்கள் சிந்திக்கப்பட வேண்டியவைகளாகும். அன்று எம். ஸி. சித்திலெப்பை கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி ஆற்றிய உரைகளினதும் எழுதிய எழுத்துக்களினதும் தாக்கம்தான் 1892 ஜுன் 22இல் கொழும்பு மருதானைப் பள்ளிவளவில் மலர்ந்த ''மத்ரஸதுல் ஸாஹிரா'' வாகும்.

கல்வித்துறையிலும், சமூகத்துறையிலும் ஒலித்த எம். ஸி. சித்திலெப்பையின் குரல் அரசியல் துறையிலும் ஒலித்ததன் விளைவாக டபிள்யூ. எம். அப்துல்றகுமான் முஸ்லிம்களின் பிரதிநிதியாக சட்டமன்றத்திற்குத் தெரிவானார்.

கல்வியாளராக, சட்டவல்லுநராக, சமூகவாதியாகச் செயற்பட்ட எம். ஸி. சித்திலெப்பையை ஓர் இலக்கிய வாதியாகவும் காண்கின்றோம். இவரால் எழுதப்பட்ட ''அசன்பே சரித்திரம்'' இலங்கையில் எழுதப்பட்ட முதல் நாவல் என்பதற்கு ஆதாரங்கள் உண்டு என நூலக வித்தகர், ஆய்வாளர் எஸ்.எம். கமால்தீன் பதிவு செய்துள்ளார்.

சமூகத்திற்காகப் பணி பல புரிந்து, சமூகத்தின் ஓர் அங்கமாகி, பிற இனங்களோடு இணைந்து வாழக்கூடிய தனித்துவ மிக்க சமுதாயமாக முஸ்லிம் சமுதாயத்தை மாற்றிய முகம்மது காஸிம் சித்திலெப்பை 1898 பெப்ரவரி 5இல் இவ்வுலக வாழ்வைப் பிரிந்தார். எல்லாம் வல்ல இறைவன் அன்னாரது நற்பணிகளை ஏற்று, பாவங்களை மன்னித்து ஜென்னத்துல் பிர்தௌஸை வழங்குவானாக!

## இனிப்பும் கசப்பும்

– வைஸ்

# தனித்து வாழும் நம்மவருடன் தொடர்பை அதிகரிப்போம்

ஓரிரு தினங்களுக்கு முன் பல சிங்கள ஊடகங்களில் படத்துடன் ஒரு செய்தி பிரசுரிக்கப் பட்டிருந்தது. அநேகமான பத்திரிகைகளில் இது முன்பக்கச் செய்தியாக இருந்ததோடு, மறுதினம் காலை எல்லா தொலைக்காட்சி அலைவரிசைகளிலும் பத்திரிகைச் செய்தி வாசிப்பில் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

ஒரு முஸ்லிம் சிறுவன் பௌத்த மதகுருவாக மாறிவிட்டார் என்பதே அந்தச் செய்தி. ஏழுவயதான அந்தச் சிறுவன் நாட்டின் பிரபல பன்சலைக்கு சென்று அதன் பிரதம குருவின் கீழ் தனது பெயரை மாற்றி பௌத்த குருவுக்குரிய காவியுடையை அணிந்து கொண்டார். காவியுடை அணிந்த இந்தச் சிறுவனின் புகைப்படமும் வெளியிடப்பட்டிருந்தது. இது ஓர் அபூர்வ சம்பவம் என்றபடியால் முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தது.

எமது நாட்டின் அரசியல் யாப்பின் படி எவருக்கும் எந்த மதத்தையும் பின்பற்றலாம். அதை தடை செய்வது குற்றம். ஆனால் பலவந்தம் மூலம் மதமாற்றம் செய்ய முடியாது. இதன் அடிப்படையில் எமது நாட்டில் சிங்கள சகோதர, சகோதரிகள் தமிழ் சகோதர, சகோதரிகள் இஸ்லாத்தைத் தழுவி பெயர் மாற்றிக் கொள்கின்றனர்.

இவர்களில் சிலர் திருமண நோக்கில் செய்து கொள்வதுண்டு. திருமணமான ஒருவர் இன்னொருவரை மணக்க விரும்பினால் இஸ்லாத்தைத் தழுவியதாகக் காட்டி பலதார மணம் செய்ய முஸ்லிம்களுக்குரிய உரிமைகளைப் பெற்றுக் கொண்டு மறுமணம் செய்து கொள்வர்.

இன்னும் சில வேற்று மத இளைஞர், யுவதிகள் தாம் காதலிக்கும் முஸ்லிம் இளைஞர், யுவதிகளை திருமணம் செய்து கொள்வதற்காக இஸ்லாம் மதத்திற்கு மாறுவதும் உண்டு.

இஸ்லாத்துக்கு வருவது மிக இலகு என்பது இவர்களது நம்பிக்கையாகும். ஒரு பள்ளிவாசலுக்கு சென்று அங்குள்ள உலமா முன்னிலையில் கலிமா சொன்னால் விடயம் சரியாகிவிடும். இது கடினமான வேலை யல்ல. சொல்லிக் கொடுக்கும் கலிமாவை சொல்வார்கள். சிலர் அதன் அர்த்தத்தையே அறிந்திருக்கமாட்டார்கள். கலிமா சொல்லிக் கொடுத்தபின் இஸ்லாத்துக்கு வந்துவிட்டார் என்று உலமா கடிதம் கொடுப்பார். அந்தக் கடிதத்துடன் சென்று முஸ்லிம் விவாகச் சட்டத்தின்படி மிக இலகுவாக அவர்கள் விவாகம் செய்து கொள்வர்.

முஸ்லிம் விவாகரத்து வழக்குகளுக்கு காதி நீதிமன்றம் சென்றால் இவ்வாறான மதமாற்றத் திருமண வழக்குகளை அறியலாம். அவர்கள் கலிமா சொன்னதைத் தவிர வேறு ஏதும் இல்லை என்பதை அவர்களே கூறுவர். கலிமாவையும் கலிமா என்று அவர்களுக்குத் தெரியாது. பள்ளியில் சொல்லித்தந்ததை சொன்னேன். அது என்னவென்று தெரியாது. நான் மதம் மாறவில்லை. என்று கூறுவர். சில உலமாக்களும் ஏதாவது பெற்றுக் கொண்டு இதனைச் செய்வர். கடிதம் கொடுப்பர். சில விவாகப்பதிவாளர்களும் பணத்தை பெற்றுக் கொண்டு எங்கென்று பார்க்காது அப்பிரதேச முகவரியில் வசிப்பதாகக் காட்டி விவாகப் பதிவு செய்வர்.

பெயர் மாற்றம் செய்து கொள்ளும் போது அதுபற்றி பத்திரிகைகளில் அறிவித்தல் வெளியிட வேண்டும். பத்திரிகைகளைப் பார்த்தால் வேறு மதங்களில் இருந்து இஸ்லாத்துக்கு வருபவர்கள் அறிவித்தல்களை கூடுதலாகக் காணலாம். இஸ்லாத்திலிருந்து வேறு மதத்திற்குச் சென்றவர்கள் மிக மிகக் குறைவு. வருடத்திற்கு ஓரிருவரைக் காண்பதும் அரிது. அவ்வாறு இருந்தாலும் தாய் அல்லது தகப்பன் வேறு மதத்தவராக இருப்பார். தாயும் தகப்பனும் முஸ்லிம் என்றால் பிள்ளைகள் மாறுவதைக் காண முடியாது.

இவ்வாறு இஸ்லாத்துக்கு வருபவர்கள் அதிகமாக இருந்தாலும் இவர்கள் முறையாக இஸ்லாமிய வாழ்க்கையை நடத்துகிறார்களா என்பது உறுதியாக இல்லை. பெயரை மட்டும் மாற்றிக் கொண்டு தமது திருமண நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டு பழைய வழியிலே வாழ்பவர்களையும் நாம் காண்கின்றோம்.

15ஆம் பக்கம் பார்க்க >>>

## அகில இலங்கை சமாதான நீதவானாக டி.எஸ். அதிபர்



கொழும்பு டி.எஸ் சேனாநாயக்க கல்லூரியின் அதிபர் ஆர்.எம்.எம். ரத்நாயக்க அகில இலங்கைக்குமான சமாதான நீதவானாக அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

ஊவா பரணகம பம்பரமான கிராமத்தின் விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளரான ஆர்.எம். அப்புஹாமி தம்பதியினரின் மகனான இவர் துப்படிய மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று களனிப்பல்கலைக்கழகத்தில் பொருளாதார பாடத்தில் சிறப்பு பட்டம் பெற்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்விப்பட்டப்பின்படிப்பு மற்றும் கல்வியியல் எம்.ஏ.பட்டம் பெற்று வயம்ப பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்திலும் கலைமாணி பெற்று கனடா, தாய்லாந்து, இந்தோனேஷியா, பிரித்தானியா இந்தியா ஆகிய நாடுகளில் கல்வி மற்றும் முகாமைத்துவத்தில் பல்வேறு பாடநெறிகளைப் பயின்றுள்ளார். 1998 இல் இலங்கை கல்வி நிர்வாகச்சேவை திறந்த போட்டிப்பரீட்சையில் சித்தி பெற்ற இவர் ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலயம் உட்பட நாட்டின் பல்வேறு பாடசாலைகளில் அதிபராக பணிபுரிந்துள்ளார். இவரது கல்விச்சேவையைப் பாராட்டி மூன்று நிகாயாக்களின் மகா சங்க சபையினரால் தேசபந்து வித்தியார் கீர்த்தி என்ற பட்டமும் ஹோமாகம மகிந்த வித்தியாலயத்தில் மகிந்த நேத்ரா என்ற விருதும் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் முகாமைத்துவசபை அங்கத்தவராகவும் தேசிய கல்வி நிறுவகத்தில் வளவாளராகவும் இலங்கை பாடசாலை பேஸ்போல் சம்மேளனத்தின் தலைவராகவும் இவர் பணிபுரிந்து வருகிறார்.

## சட்டத்தரணியாக ஜெஸீம் ஆஸாத்



செய்கு முகம்மது சலாஹுத்தீன் செய்கு அகமது ஜெஸீம் ஆஸாத் இலங்கை உயர் நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் மற்றும் ஏனைய நீதியரசர்கள் முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

நிந்தவூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், ஓய்வுபெற்ற ஆசிரியர் எஸ்.ஏ.எஸ்.எம். சலாஹுத்தீன், எம்.ஐ. மைமுனாவினதும் புதல்வனாவார். நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடாசாலையில் கல்விகற்ற இவர், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப்பட்டதாரியுமாவார்.

(தகவல்: எம்.எஸ்.எம்.ஸாகிர்)

## வட்டதெனிய பள்ளிவாசல் தலைவராக புவாத் தெரிவு

(வட்டதெனிய முஹம்மத் தாலூத்)



வட்டதெனிய பள்ளிப்பரிபாலன சபையின் தலைவராக ஓய்வு பெற்ற அதிபர் ஜே.ஏ.எம். புவாத் தெரிவாகினார். பள்ளிவாசலில் ஜும்ஆத் தொழுகையின் நடைபெற்ற தேர்தலின் போதே இவர் கூடுதலான வாக்குகளைப் பெற்றுத்தெரிவாகினார்.

பொதுக்கூட்டத்தின் போது தலைவர் மற்றும் நிர்வாகக் குழுவினை தெரிவு செய்வதற்காக 15 பேர் கொண்ட தேர்வுக்குழு ஒன்றை நியமித்து இந்த குழு அங்கத்தவர்களிடையே இடம்பெற்ற வாக்கெடுப்பிலே தலைவரும் 20 பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவானார்கள். புதிய பரிபாலன சபையைத் தெரிவு செய்வதற்கு இதற்கு முன் நடைபெற்ற இரு கூட்டங்களிலும் ஏற்பட்ட குழப்பங்களையடுத்து 3ஆவது கூட்டத்திலே உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

## சட்டத்தரணியாக முகம்மது சப்றாஸ்

(றியாஸ் ஆதம்)



ஏறாவூர் மிச் நகரைச் சேர்ந்த எம்.எம். முகம்மது சப்றாஸ் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் தனது உயர் கல்வியை ஏறாவூர் அலிக்கார் மத்திய கல்லூரியிலும் கற்று தனது பாடசாலை கல்வியை நிறைவு செய்தார்.

2012ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டக் கல்லூரி தேர்வுப் பரீட்சையில் சித்தியடைந்து சட்டக் கல்லூரியில் சட்டத்துறை கல்வியைப் பூர்த்தி செய்து அண்மையில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் ஏறாவூரைச் சேர்ந்த மர்ஹூம் முகம்மது முஸ்தபா மற்றும் அலி பாத்திமா தம்பதிகளின் புதல்வராவார்.

# முஸ்லிம் மக்களை ஏமாற்றி தமிழர்கள் ஒரு போதும் நிம்மதியாக வாழ முடியாது

## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன்



(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

தமிழர்கள் முஸ்லிம் மக்களை ஏமாற்றி ஒருபோதும் நிம்மதியாக வாழ முடியாது. அதேபோன்றுதான் முஸ்லிம் மக்கள் தமிழ் சமூகத்தை ஏமாற்றி கிழக்கு மாகாணத்திலோ அல்லது வடக்கு கிழக்கில் எங்கேயும் வாழ முடியாது என பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

புதன்கிழமை மட்டக்களப்பு ஏறாவூருக்கு ஜனாதிபதியுடன் வருகை தந்த அவர் ஜனாதிபதி மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சரினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட பல்வேறு திட்டங்களில் பங்குபற்றி உரையாற்றினார்.

தொடர்ந்து உரையாற்றிய சம்பந்தன், இந்த நாட்டில் எவரும் எவரையும் ஏமாற்ற முடியாது. தமிழ் பேசும் மக்கள் என்ற ரீதியில் நாங்கள் ஒன்றாக இணைந்து எமது உரிமைகளைப் பெறுவதற்கு மற்றவர்களின் உரிமைகளை மதித்து அந்த மதிப்பின் அடிப்படையில் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய உரிமைகளைக் கொடுத்து வாழ வேண்டும்.

சிறுபான்மையினராகிய நாங்களும் இந்த நாட்டில் கௌரவமாகவும் சுயமரியாதையுடனும்தான் வாழ விரும்புகின்றோம். ஜனாதிபதியினுடைய கொள்கைகளின் அடிப்படையில் ,சமூகத்தில் ஏற்பட்டிருக்கின்ற பல்வேறு பலவீனங்களையும் குறைபாடுகளையும் நீக்குவதற்கு சில திட்டங்கள் வகுக்கப்பட்டு,அதற்கான பொருத்தமான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றன. போதைப் பொருள் பாவனை, புகைத்தல், மதுபான பாவனை, வறுமை ஒழித்தல், சுற்றுச் சூழலைக் காத்தல், அபிவிருத்தியை முன்னெடுத்தல் இவ்விதமாக பல திட்டங்கள் இவை சமூகத்தின் நலனில் அக்கறை கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற கருமங்களாகும்.மேற்படி அனைத்துத் திட்டங்களிலும் சமுதாயத்திற்கு ஒரு பெரும் பங்கிருக்கின்றது. ஒட்டு மொத்த சமூகத்தின் உதவி ஒத்தாசை, பங்களிப்பு இல்லாமல் இந்தக் கருமங்கள் எதனையும் வெற்றிகரமாக நிறைவேற்றிட முடியாது. இந்தத் திட்டங்களின் முக்கியத்துவத்தையும் அதன் பெறுமதியையும் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.அதனைத் தெளிவுபடுத்தும் முகமாகத்தான் இத்தகைய நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.இதனை எல்லாத் தரப்பினரும் சேர்ந்து நடைமுறைப் படுத்த வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம்.நீண்ட காலமாக இந்த நாட்டைப் பீடித்துள்ள தேசிய இனப் பிரச்சினைக்கு எப்பொழுது ஒரு அரசியல் தீர்வு வரப்போகின்றது என்பதே இப்பொழுது நம் எல்லோருக்கும் முன்னாலும் இருக்கின்ற முக்கியமாக கேள்வியாகும்.

தேசியப் பிரச்சினைக்கு ஒரு தேசியத் தீர்வு காண்பது சம்பந்தமாக இப்பொழுது சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன அந்த நடவடிக்கையிலே ஜனாதிபதி, பிரதம மந்திரி மற்றும் பாராளுமன்றம் ஆகிய தரப்புக்கள் முக்கிய பங்காளித்துவத்தை வகிக்கின்றன.இந்த முக்கிய பங்காளிகளின் ஒத்துழைப்புடன் ஒரு அரசியல் சாசன சபை உருவாகிக் கொண்டிருக்கின்றது. இது விடயமாக பல்வேறு நடவடிக்கைக் குழுக்கள் இயங்குகின்றன. பல்வேறு கருமங்கள் பல்வேறு மட்டத்தில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அதேவேளை பல்வேறு கருத்துக்களும் கூறப்படுகின்றன. கிழக்கு மாகணத்திலே மூவின மக்களும் வாழ்கின்றார்கள் என்பது ஒரு சிறப்பான அம்சமாகும்.மட்டக்களப்பு மாவட்டத்தில்

சிறுபான்மை இனமான தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் கூடுதலாக வாழ்கின்றார்கள்.

தமிழ் பேசும் சிறுபான்மை மக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றக் கூடியதாக வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் உள்ளன எமது நியாயபூர்வமான அபிலாஷைகளை நிறைவேற்றி எமது பிறப்புரிமைகளைப் பெற்று நாங்களும் இந்த நாட்டில் சம பிரஜைகளாக சமத்துவமாக சக வாழ்வு வாழ்வதற்குத்தான் ஏங்கிக் கொண்டிருக்கின்றோம் என்றார்.



பொலன்னறுவை மாணிக்கம்பிட்டி அல்மினா கனிஷ்ட வித்தியாலத்தில் அதிபர் சவாஹிர் , உதவி அதிபர் கலீல் ரஹ்மான் தலைமையில் போதை ஒழிப்பு தொடர்பான அமைதிப் பேரணியொன்று நடத்தப்பட்டது. பாடசாலை மாணவ, மாணவிகளால் துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. நிகழ்வில் பொலிஸ் அதிகாரிகளும், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

(வினாசர் ராஜா இஸ்லாஹி)

## ஸ்ரமிக்க சுரெக்கும் நடமாடும் சேவை





(கிண்ணியா செய்தியாளர்)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகமும் இணைந்து 'ஸ்ரமிக்க சுரெக்கும்' நடமாடும் சேவை வியாழக்கிழமை கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் நடத்தியது.

இதன் போது வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் தலதா அத்துக்கோரள திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லாஹ் மஃறுப், கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ் , விஷேட புலனாய்ப் பிரிவு , நல்லிணக்கப் பிரிவுக்கான அதிகாரிகளும் கலந்து கொண்டார்.

இதன் போது அமைச்சர் உரையாற்றுகையில் கூறியதாவது, வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டுக்கு செல்லுமாறும், பதிவு செய்யாமல் செல்வோருக்கு எந்தவித உதவிகளும் செய்ய முடியாது எனவும் மூதூர் றிஸானா நபிக்கின் பெற்றோர் செய்த தவறுகளினால் அவரை இழக்க வேண்டி ஏற்பட்டது தற்போதைய அரசு இன, மத வேறுபாடு இன்றி செயற்படுகின்றது. எனவே அனைவரின் பிரச்சினைகளையும் தீர்த்து வைக்கும்.

இதன் போது வெளிநாடுகளில் ஏற்பட்ட விபத்துக்களுக்கு எந்த நஷ்ட ஈடும் வழங்கப்படாமை, குறித்த தொழிலுக்கு செல்கின்ற போது அந்த தொழிலும், ஒப்பந்தம் செய்யப்படுகின்ற சம்பளமும் வழங்கப்படுவதில்லை போன்ற பல பிரச்சினைகளை அமைச்சரிடம் மக்கள் முன்வைத்தார்கள். இந்நடமாடும் சேவையில் ஆண் , பெண் என 200 இற்கு மேற்பட்ட வெளிநாட்டுக்கு சென்று வந்தவர்கள் வருகை தந்திருந்தார்கள்.

# மத்திய மாகாண விவசாயிகளுக்கு போதிய நீர்வழங்கல் திட்டம்

(மொஹொமட் ஆஸிக்)

(மத்திய மாகாணத்திலுள்ள வயல் நிலங்கள் உட்பட அனைத்து நிலங்களையும் விவசாயம் செய்ய முன் வரும் விவசாயிகளுக்கு அதற்கு தேவையான நீரை வழங்க தமது திணைக்களம் தயாராக உள்ளதாக மத்திய மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர் பொறியியலாளர் திருமதி எஸ்.கே.ஐ.விஜேவர்தன தெரிவித்தார்.

மத்திய மாகாணத்திலுள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள் தொடர்பாக புதனன்று அவரிடம் வினவிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர், மத்திய மாகாணத்தில் 4000க்கும் மேற்பட்ட சிறு நீர்ப்பாசன திட்டங்கள் மத்திய மாகாண நீர்ப்பாசன திணைக்களத்திற்கு சொந்தமாக உள்ளதாகவும் அவற்றின் மூலம் சுமார் 60,000 ஏக்கருக்கு நீரை வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மத்திய மாகாணத்தில் கடந்த காலங்களில் ஏற்பட்ட வரட்சி காரணமாக பாரிய அளவில் விவசாயம் பாதிக்கப்பட்டதாகவும் அதனை நிவர்த்தி செய்வதற்கு கைவிடப்பட்ட வயல் நிலங்களிலும் ஏனைய நிலங்களிலும் விவசாயம் செய்ய முற்படும் விவசாயிகளுக்கு தேவையான நீரை மத்திய மாகாணத்திலுள்ள 4000ற்கும் அதிகமான சிறு நீர்ப்பாசன திட்டங்களை திருத்தி அமைப்பதன் மூலம் பெற்றுக் கொடுக்க தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறு நீர்ப்பாசன திட்டங்கள் தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டால் தமது திணைக்களத்திற்கு அறியத்தருமாறும் அவர் மேலும் தெரிவித்தார். மத்திய மாகாணத்திலுள்ள 4000 க்கும் மேட்பட்ட சிறு நீர்ப்பாசன திட்டங்களில் திருத்த வேலைகளுக்கு இவ்வருடன் 150 இலட்சம் ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டுள்ளதுடன் இது போதுமானது இல்லை என்றும் திணைக்களம் தெரிவிக்கின்றது.

**மர்ஹூம் நாகூர் நிகாஹ் சேவை**

உண்மையான உறுதியான மஹர் அடிப்படையில் சிறந்த துணைகளைத் தேடித் தருவதற்கு எம்மை நாடவும். 30 வருட சேவையுடைய தர்ஹ் முகவர் M.A.S. Hameed (p.m), No. 460A, Mosque Lane, Kalmunaikkudy - 09. (077 3249459), N. Rahmathullah (R.I.) T.P : 077 2810009. WhatsApp : 077 9697790 Email - nrahmathullah786@yahoo.com

# ஹபுகஸ்தலாவையில் அகாஸ் கிராமம் திறப்பு விழா



ஹபுகஸ்தலாவை பகுதியில் வாழும் பொதுமக்கள், நலன்விரும்பிகள், அனைவரையும் கலந்துசிறப்பிக்குமாறு தலைவர் எஸ்.எச். ரஹ்மான் கேட்டுக்கொண்டுள்ளார்.

(ஹபுகஸ்தலாவை நிருபர்)

ஹபுகஸ்தலாவையில் வாழும் வறிய குடும்பங்களுக்கு மேர்சி லங்கா நிறுவனத்தின் சிபாரிசின் அடிப்படையில் குவைட் நாட்டைச் சேர்ந்த ஜொமால் நாசர் அப்துல் லாஹ்வின் குடும்பத்தினர்களால் ஏற்படுத்தப்பட்ட 14 வீடுகள் கொண்ட அகாஸ் கிராமம் திறப்பு விழாவின் போது தெரிவு செய்யப்பட்டுள்ள 14 வறியகுடும்பங்களுக்கு வீடுகள் கையளிக்கப்படும். இந்நிகழ்வு எதிர்வரும் 3 ஆம் திகதி மு.பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்படி ஹபுகஸ்தலாவை மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆப்பள்ளி தலைவர் எஸ்.எச்.ரஹ்மான் தலைமையின் கீழ் நடைபெறவுள்ள திறப்பு விழாவுக்கு பிரதம அதிதியாக குவைட் நாட்டைச்சேர்ந்த ஜொமால் நாசர் அப்துல்லாஹ் குடும்பத்தினரும் கௌரவஅதிதிகளாக மேசி லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் மற்றும் அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். இவ்விழாவிற்கு

## திஹாரியில் சுதந்திரதின விழா

திஹாரிய மஸ்ஜிதுல் ரௌலா ஜும்ஆ பள்ளி நிர்வாகம் ஏனைய அமைப்புகளுடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ள சுதந்திரதின நிகழ்வு சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.

மஸ்ஜிதுல் ரௌலா பள்ளி முன்னாலுள்ள அரங்கில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதேச பௌத்த தேரர்களும், உலமாக்களும், அரசியல் பிரமுகர்களும் பொலிஸ் மற்றும் ஏனைய அரச நிறுவன பிரமுகர்களும் கலந்துகொள்ளவுள்ளதாக பள்ளிவாசல் பொதுச்செயலாளர் எம்.எச்.எம். கௌஸுன் தெரிவித்தார்.

**இலங்கை அரச வணிக (பொது) கூட்டுத்தாபனம்**
STC
இல. 100 நவம் மாவத்தை, கொழும்பு - 02

**கேள்விமனு கோரல்**

புதிய மின் கருவிகள், கைக்கருவிகள், பாகங்கள், உதிரிப்பாகங்களை விற்பனை செய்தல்

இலங்கை அரச வணிக (பொது) கூட்டுத்தாபனம், புதிய கருவிகள், கைக்கருவிகள், பாகங்கள், உதிரிப்பாகங்களை விற்பனை செய்வதற்கு ஆர்வமுள்ள மற்றும் பொருளாதார ரீதியாக நன்மதிப்பு பெற்ற இலங்கை தரப்புக்களிடமிருந்து கேள்விமனுக்களைக் கோருகின்றது.

| | |
|---|---|
| தொகை இலக்கம் 01 | மின் கருவிகள் |
| தொகை இலக்கம் 02 | கைக்கருவி மற்றும் பாகங்கள் |
| தொகை இலக்கம் 03 | மின் கருவிகளுக்கான உதிரிப் பாகங்கள் |

- ஆர்வமுள்ள மனுதாரர்கள், எழுத்து மூல வேண்டுகோளை, இலங்கை அரச வணிக கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் நாயகத்திடம் சமர்ப்பிப்பதன் மூலம், 2017 பெப்ரவரி 13 ஆம் திகதி வரையிலும், வேலை நாட்களில், முற்பகல் 09 மணி முதல் பிற்பகல் 03 மணி வரையிலும், மீளச்செலுத்தப்படாத ஆவணக் கட்டணமான ரூ. 1,500 ஐ, காசாக செலுத்தி, கேள்விமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
- கேள்விமனுக்கள் 2017 பெப்ரவரி 14 ஆம் திகதி முற்பகல் 10.30 மணி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். முகாமையாளர் நாயகம், இலங்கை அரச வணிக (பொது) கூட்டுத்தாபனம், இலக்கம்: 100, நவம் மாவத்தை, கொழும்பு 02.
- ஆர்வமுள்ள மனுதாரர்கள் பொருட்கள் மற்றும் பொருட்களை அவதானித்தல் பற்றிய மேலதிக விபரங்களை, உதவி முகாமையாளரை, 0112440493 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்புகொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி : 011 2422341 / 2432679
தொலைநகல் : 011 2447970
மின்னஞ்சல் : lankagen@sltnet.lk
இணையம் : www.stcgeneral.com

**தலைவர்/ நிர்வாக இயக்குனர்**
**இலங்கை அரச வணிக (பொது) கூட்டுத்தாபனம்,**
**இலக்கம்: 100, நவம் மாவத்தை, கொழும்பு 02.**

නවමණි සති අන්ත NAVAMANI WEEKLY
நவமணி
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
05TH FEBRUARY 2017 - SUNDAY

# சமத்துவம் பேணப்படுவதே உண்மையான சுதந்திரம்!

இலங்கையின் 69 ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்படுகின்றது. இந்த நாட்டை ஆக்கிரமித்திருந்த ஆங்கிலேயர்கள், 1948 பெப்ரவரி 04 ஆம் திகதி, இந்த நாட்டு மக்களுக்கு, இந்த நாட்டை ஆட்சி செய்யும் வாய்ப்பை வழங்கி, சுதந்திரம் வழங்கிய இந்த நாள், ஒவ்வொரு இலங்கையனுக்கும் மிகவும் முக்கியமான நாளாகும்.

இலங்கை, அதன் வரலாறு நெடுகிலும், அந்நிய நாடுகளின் ஆக்கிரமிப்பு அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி வந்துள்ளது. மன்னர் காலங்களில் தென்னிந்திய, தென்கிழக்காசிய ஆக்கிரமிப்பு அச்சுறுத்தல்கள் இலங்கைக்கு இருந்துள்ளது.

மத்திய காலப் பகுதியில், மேற்குலகின் ஆக்கிரமிப்பு வெறி காரணமாக, ஆசிய நாடுகள் பலவும், மேற்குலகின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டு, மேற்குலகின் காலனிகளாக மாறின. இந்த வகையில், 1505 ஆம் ஆண்டு முதல், முறையே போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்கள் இலங்கையை ஆண்டனர்.

இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டபோதும், இலங்கையர்கள் உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்கிறார்களா? என்பதை இந்த முக்கியமான தினத்தில், நாம் பரிசீலித்துப் பார்க்க வேண்டியுள்ளோம்.

ஏனெனில், ஓரே நாடு என்றபோதும், பல்வேறு இனங்களையும், மதங்களையும் சேர்ந்த இலங்கையர்கள், பூரண சுதந்திரத்துடனும், அபிமானத்துடனும் வாழ்வதற்கான சூழல் இலங்கையில் நிலவுகிறதா? என்பது பெரும் கேள்விக்குறியாகவே இப்போது உள்ளது.

இலங்கையில் உள்ள பிரதான இனத்தவர்களான சிங்கள, தமிழ், முஸ்லிம்களுக்கு மத்தியில், வரலாறு நெடுகிலும் சிறந்த உறவு காணப்பட்டபோதும், பிரித்தானியரின் பிரித்தாளும் சூழ்ச்சி காரணமாகவும், இயல்பிலேயே மனிதனிலுள்ள சார்பியம் காரணமாகவும், சுதந்திரத்துக்குப் பின்னைய, இலங்கையில் இனமுரண்பாடு, இன மோதல் ஏற்பட்டது பெரும் துரதிஷ்டமாகும்.

இம்முறை இலங்கையின் சுதந்திர தினம் 'தேசிய ஐக்கியம்' என்ற தொனிப்பொருளில் கொண்டாடப்படுகிறது. நல்லாட்சி அரசின் கீழ் நாட்டின் நல்லிணக்கத்துக்கு மற்றும் சகவாழ்வுக்கு முக்கியத்துவம் அளித்துள்ள நிலையில், சுதந்திரம் அர்த்தமுள்ளதாக அமைவதற்கு சிறுபான்மை மக்களது மனதை வென்றாக வேண்டும்.

சிறுபான்மை மக்கள் என்ற வகையில் தமக்கு அநீதி ஏற்படுகின்றது என்ற உணர்வு களையப்பட வேண்டும். இந்த நாட்டில் அரசு துறைகளில் இன்றும் பெரும்பான்மை இனத்தவர்களே கூடுதலாக இருக்கின்றார்கள். சிறுபான்மை இனத்தவர்கள் அவர்களது விகிதாசர அளவுகூட இல்லாத நிலையிலேயே காணப்படுகின்றனர்.

இவ்வாறான சமத்துவமில்லாத நிலையில் சுதந்திரம் அர்த்தமுடையதாக இருக்காது. இந்த நாட்டில் சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்கள் இந்த நல்லாட்சி அரசினை தமது உயிரைப் பணயமாக வைத்து அமைத்தார்கள். நல்லாட்சி அரசில் தமக்கு அநீதி ஏற்படுகின்றது என்ற உணர்வு வளரத் தொடங்கியுள்ளது. இந்த நிலையை நீக்குவதற்கு அரசு முன்னுரிமையும் முக்கியத்துவமும் அளிக்க வேண்டும்.

நாட்டின் சகல மக்களுக்கும் சமத்துவம், சகல மதங்களுக்கும் உரிய இடமளிக்கும் செயற்பாடுகள் மூலமே உண்மையான சுதந்திரம் மிகு நாடாக, நாடு மிளிரும்.

---



லண்டனிலிருந்து
இர்பான் இக்பால்



# யார் இந்த இலங்கை முஸ்லிம்கள்? II

இலங்கைத் திருநாடு எப்போதும் பல்லின மக்கள் வாழ்ந்த ஒரு பூமியாகும். ஏதோ ஒரு அளவில் பௌத்தம் தவிர்ந்த ஏனைய மத மற்றும் மார்க்கக் கொள்கையுள்ளவர்கள் வாழ்ந்த இப்பூமி நாடு பிடிக்க வந்த வெளிநாட்டு சக்திகள் தவிரவும் நட்புறவுக்காகவும் அரேபிய சமூகம் போன்று நிம்மதி காணும் ஆன்மீக பூமியாகவும் கருதப்பட்டு வந்திருக்கிறது.

ஆயினும், இது எப்போது ஆரம்பித்தது என்று மட்டறுத்துக் கூறி அங்கிருந்து வரலாற்று ஆதாரங்களையும் தகவல்களையும் முன் வைக்கும் சாத்தியம் இப்பூமிக்கு இல்லையென்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

மஹாவம்சம் எனும் பௌத்த - சிங்கள மன்னர்கள், மக்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்ட வரலாற்று நூலிலிருந்தே பெரும்பாலும் சிங்கள மக்கள் தமது பாரம்பரியத்தையும் இலங்கைத் தீவின் பெரும்பான்மை உரிமையையும் தேட விளைகின்றனர். குறித்த நூல் கூட கி.பி 5ஆம் நூற்றாண்டின் பின்னரே கோர்க்கப்பட்டிருந்தது.

அதிலும், விஜயனுடைய இலங்கை வருகையின் கால அளவை வைத்தே சிங்கள இனத்தின் தோற்றத்தை குறித்த நூல் பதிவு செய்துள்ளது. கி.மு 6ஆம் நூற்றாண்டளவில் இந்தியாவிலிருந்து வருகை தந்ததாகக் கூறப்படும் விஜயனை அடிப்படையாகக் கொண்டு, அவரையே சிங்கள இனத்தின் முதலாவது மன்னனாக சித்தரித்து அங்கிருந்து ஆரம்பிக்கப்பட்ட குறித்த வரலாற்று நூல் இதுவரை காலமும் இலங்கைக்கான ஒரு பொது வரலாற்று நூலாக அன்றி பெரும்பாலும் பௌத்த - சிங்கள வரையறையையே பேணி வருகிறது.

மகாபாரதம், இராமாயணம் போன்ற இலக்கியக் காப்பியங்களைத் தழுவிய முறையிலேயே சுமார் 1000 வருட இடைவெளியின் பின் கோர்வையாக்கப்பட்ட வரலாற்றில் பல்வேறு காலப்பிறழ்ச்சிகளும் திரிபுகளும் இருப்பது குறித்து சிங்கள ஆய்வாளர்களும் சுட்டிக்காட்டியே வந்துள்ளார்கள்.

எனினும், இது போன்ற வரலாற்று ஆவணப்படுத்தல் இன்றைய முஸ்லிம் சமூகத்திடமோ நமது மூதாதையரிடமோ இருந்ததில்லை என்பதால் எமது இருப்பு அல்லது பூர்வீகத்தைப் பற்றித் தெளிவாக எடுத்துரைக்கும் ஆதாரங்களைப் பிற மொழிகளில் மற்றும் தேசங்களிலும் வெளிவந்த ஆவணங்களிலிருந்தே எம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

1915ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்தில் காணப்பட்ட அரசியல் சூழ்நிலையைப் பொறுத்தவரை மத ரீதியிலான அடையாளப்படுத்தலை முற்படுத்தல் அவசியமாக்கப்பட்டது. பிரித்தானியரின் காலனித்துவ ஆட்சியின் கீழான இலங்கையில் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இலங்கையில் வாழும் சிறுபான்மையின மக்கள் குறித்த புள்ளிவிபரங்களை அறிய பிரித்தானியரின் Royal Asiatbc Society மேற்கொண்ட நடவடிக்கையிலிருந்தே இன ரீதியிலான வகைப்படுத்தல் அரசியல் ரீதியாக முக்கியம் பெற ஆரம்பித்தது.

அதற்கு முன்னரும் இலங்கைத் தீவில் பல்லின மக்கள் வாழ்ந்து வந்த போதிலும், பிணக்குகள் போர்க்களம் கண்ட போதிலும் அரசியல் ரீதியிலான இன வகைப்படுத்தல் இக்காலகட்டத்திலேயே முக்கியம் பெற ஆரம்பித்தது.

இந்த கால கட்டங்களில் இலங்கையில் வாழ்ந்த முஸ்லிம்கள் தமிழில் 'சோனகர்கள்', சிங்களத்தில் 'யோனக மினிஸ்ஸு' அல்லது ஆங்கிலத்தில் 'மூர்ஸ்' என அறியப்பட்டு வந்தார்கள்.

இங்கு மூர்ஸ் எனும் பெயர் எமது சமூகத்துக்கு வழங்கப்பட்டிருந்தமை போர்த்துக்கீயரால் வழங்கப்பட்டிருந்த காரணப் பெயராகும். அதுவே பின்நாளில் ஒல்லாந்தர், பிரித்தானியராலும் உபயோகப்படுத்தப்பட்டு வந்தது.

சுமார் 900 வருடங்கள் ஐரோப்பாவில் நிலவிய முஸ்லிம்களின் ஆட்சி பெரும்பாலும் 'மூர்ஸ்' ஆட்சியெனவே மேற்கத்தேய வரலாற்று ஆசிரியர்களால் குறிப்பிடப்படுகிறது.

எனினும் மூர்ஸ் எனும் பதமானது வட ஆபிரிக்க, அரேபிய முஸ்லிம்களை அடிப்படையாக வைத்து குறிப்பாக உலகின் மிகப்பழமையான இனக்குழுமங்களுள் ஒன்றான பேபர் இன மக்களின் தோற்றம் மற்றும் பிரசன்னத்தை வைத்து உபயோகிக்கப்படும் சொற்பதமாகும்.

ஐரோப்பாவில் போர்த்துக்கீயர் கண்ட கட்டடக் கலை, சமய ஒற்றுமைகளின் அடிப்படையில் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளிலும் அவர்கள் கண்ட முஸ்லிம்களைப் பொதுவாகவே மூர்ஸ் என்றே அழைத்து வந்ததனால் அதுவே ஆங்கிலப் பதமானது.

மூர்ஸ் இனம் தொடர்பான ஆழமான ஆய்வின் போது தூர கிழக்குடனான அவர்களது வரலாற்றுத் தொடர்புகளையும் நாம் ஆராயலாம்.

எனினும், யோனக, சோனகர் எனும் இரு பதங்களும் இஸ்லாம் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திற்கு முன்னதாகவே தமிழ் மற்றும் சிங்கள மொழிப் பாவனையில் உபயோகத்தில் இருந்து வந்துள்ளது.

தமிழ் மொழியைப் பொறுத்தவரை சோனகர் எனும் பதம் யவனரையே குறிப்பதாகவும் சில கருத்துப் பிறழ்வுகள் அவ்வப்போது தமிழ் ஆய்வாளர்களால் முன்மொழியப்பட்டதுண்டு. ஆயினும் அது தவறானதாகும்.

இதனை மேலும் தெளிவாக விளங்கிக் கொள்ள, சோனகர்; எனும் தமிழ்ச் சொற் பிரயோகம் 'யோனக' எனும் சிஹல (முன்னைய சிங்களம்) சொல்லிலிருந்து பிரிந்து வந்ததா? அல்லது யோன எனும் சமஸ்கிருதச் சொல்லில் இருந்து மருவி வந்ததா என்பதை சற்று ஆராய்வின் ஒரு சில உண்மைகளை நம்மால் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும்.

இதனடிப்படையில் யோனக எனும் சொல்லே சமஸ்கிருதத்திலிருந்து பாளியூடாக சிங்ஹலவுக்குள் இறக்குமதியானதா? எனும் கேள்வியைக் கூட நியாயமாக முன்வைக்க முடியும்.

இதை எந்தக் கோணத்தில் பார்ப்பினும் இங்கு வட இந்திய வேதாந்திகளின் கால இலக்கியங்களும் பதிவுகளுமே முக்கியம் பெறப்போவதை நம்மால் அவதானிக்க முடியும். ஏனெனில் பெரும்பாலும் அன்று அவர்களே 'அறிவு' ள்ள சமுதாயமாகப் பிரகடனப்படுத்திக்கொண்டதால் அவர்கள் சொல்வதே வேதமாகவும், சட்டமாகவும், புராணமாகவும் உருப்பெற்று உப கண்டத்தின் பெரும்பகுதியை ஆளுமை செய்து வந்த வரலாறு நம் முன்னே இருக்கிறது.

எனவே தான், அவர்கள் வழி வந்த வேதப் புராணங்களும், இதிகாசங்களுமே பண்டைய வரலாறாகவும் இலக்கியங்களாகவும் போற்றப்படுகின்றன.

அன்றைய வேதகால இலக்கியங்கள் கூறியவற்றில் நம்பக்கூடிய, நம்பமுடியாத புனைவுகள் போக, மேலே ஏற்கனவே குறிப்பிட்டது போன்று சமூக அடையாளங்களைத் தம்மோடு இணைத்துக் கொண்டதன் மூலமே அவை சாதாரண மக்களிடத்தேயும் பரவ ஆரம்பித்தன.

அந்த வகையில், இராமாயணம், மகாபாரதம் போன்ற வட இந்தியப் புராணங்கள் தமது பதிவுகளில் வேறு இனங்கள் பற்றி என்ன கூறுகின்றன என்று பார்ப்போம்.

முதலில் இராமாயணத்தின் பால காண்டத்தில் வால்மீகி குறிப்பிடும் விடயத்தை எடுத்து நோக்குவோம்.

இந்தோ - ஆரிய காலத்தில் வட மேற்கிலிருந்து வந்து தமது குடியிருப்புகளையும், அரசுகளையும் அமைத்துக் கொண்ட பல்வேறு தரப்புக் குறித்துப் பேசும் இராமாயணம் இதில் அவர்களை வெளியார் தரப்பாகக் குறிப்பிடுகிறது.

இவை பற்றி மேலதிக விளக்கம் தரும் சங்க கால இலக்கியங்கள் எந்த வகையிலுமே இந்து மதக் கோட்பாடுகளோடும், பண்பாட்டுக் கலாசாரப் பழக்கவழக்கங்களிலும் கூட ஒன்றுபடாத அல்லது வேறுபட்டு நின்ற சமுதாயமாகவே இவர்களைக் குறிப்பிடுகின்றது.

இப்போது கம்பனின் இராமாயணத்தின் பால காண்டத்துக்கு உரை நடை வழங்கும் தஞ்சை வெ.கோபாலன், குறித்த காண்டத்தில் வசிஷ்டருக்கும் கௌசிக மன்னனுக்குமிடையில் இடம்பெற்ற ஒரு சம்பவம் குறித்து இராமனுக்கு விளக்கமளிக்கப்பட்ட போது, கௌசிக மன்னன் காமதேனு (பசு) வைத் தனக்குத் தரும்படி கேட்டதாகவும், வஷிஸ்டரோ 'என்னால் தர முடியாது, உன்னால் முடிந்தால் ஓட்டிச் செல்' என்று சொல்ல, கௌசிகன் தன் இஷ்டத்துக்கு காமதேனுவை அடைய முற்பட்டதாகவும், இதைக் கண்டு கோபமுற்ற காமதேனு (பசு) :

'நீங்கள் என்னை இவனிடம் கொடுத்து விட்டீர்களா?' என்று வஷிஸ்ட முனிவரைப் பார்த்துக் காமதேனு (பசு) கேட்க..

வசிஷ்டர் , 'நான் கொடுக்கவில்லை. அவனே எடுத்துக் கொள்ள முற்பட்டான்' என்றார். இதனைக் கேட்ட காமதேனு பெரும் கோபம் கொண்டது. இந்த அரசனை நானே முடிப்பேன் என்று தன் மயிர்க்கால்களைச் சிலிர்த்தது. அதன் மயிர்க்கால்களிலிருந்து பற்பல நாட்டு வீரர்கள், பப்பரர், யவனர், சீனர், சோனகர் எனப்படுவோர் வந்து கௌசிகனின் படை வீரர்களை நீர்மூலம் செய்தனர். அப்போது கௌசிகனின் நூறு பிள்ளைகள், இது பசுவின் செயல் அல்ல, இந்த மாய முனிவன் வசிஷ்டனின் செயல் என்று கருதி அவரைக் கொல்லப் பாய்ந்தனர். வசிஷ்டர் தன் பார்வையால் அவர்கள் அனைவரையும் எரித்து சாம்பலாக்கினார் என்றும் விளக்கமளிக்கிறார்.

இது கம்பனால் சொல்லப்பட்ட கம்ப இராமாயணத்திற்குப் பெற்ற தமிழ் உரை வடிவமாகும். இங்கேயும் யவனரும், சோனகரும் பிரித்துப் பட்டியலிடப்படுவதைப் பார்க்க முடிகிறது.

கி.பி 2ஆம் நூற்றாண்டிற்குரிய கபிலரின் கபிலரகவல் மேலும் சாட்சியமளிக்க:

***அடுபசியால் குலைந்து ஆங்கவர் மீண்டுகையேந்தி நிற்பது கண்டதார் புகலீர்அருந்தியவுண்டியால் ஆர் பசி கழிந்ததுஒட்டியர் மிலேச்சர் ஊணர் சிங்களர் இட்டிடைச் சோனகர் யவனர் சீனத்தர், பற்பலர் நாட்டிலும் பார்ப்பார் இலையால்முற்படைப் பதனில் வேறாகிய முறைமைபோல்நால்வகைச் சாதியிந் நாட்டினில் நாட்டி நீர்மேல்வகை கீழ்வகை விளங்குவது ஒழுக்கால்பெற்றமும் எருமையும் பிறப்பினில்வேறே***

என்றும் கூட எடுத்தியம்புகிறது.

ஆக மொத்தத்தில், கி.மு 300 க்கு முற்பட்ட கால தொடர்பிலும் கி.பி 2ஆம் நூற்றாண்டிலும் கூட சோனகர் என்பார் தனியொரு பிரிவாகவே தமிழுலகத்திற்கு அறிமுகமாகியிருக்கிறார்கள் என்பது இங்கு தெள்ளத்தெளிவாக உணர்த்தப்படுகிறது.

இதற்கு மேலும் சான்று சேர்ப்பின், பால காண்டத்தில் சந்திர சயிலப்படலத்தில், தசரதன் சேனை மிதிலைக்கு வரும் தருணத்தில், வரிசையாகக் கட்டப்பட்டிருந்த குதிரைகளை விளித்து, கம்பன் கீழ்க் காணுமாறு பாடுகிறான்:

***உண் அமுத உத்தியன ஒண்நகர் கொணர்ந்த***
***துண்ணெனும் முழக்கின துருக்கர் தர வந்த***
***மண்மகள் தன் மார்பின் அணி வன்ன சரம் என்ன***
***பண்ணுறு வயப் பரிகள் பந்தியில் நிரைந்தார்.***

அதே போன்று, தசரதன் மண்டபம் வந்து அமர்வதைப் பாடும் கம்பன் (உலாவியற் படலம்) :

***கங்கர் கொங்கர் கலிங்கர் குலிங்கர்கள்***
***சிங்க ளாதிபர் சேரலர் தென்னவர்***
***அங்கராசர் குலிந்தர் அவந்திகர்***
***வங்கர் மாளவர் சோழர் மராடரே***
***மான மாகதர் மச்சர் மிலேச்சர்கள்***
***ஏனை வீர இலாடர் விதர்ப்பர்கள்***
***சீனர் தெங்கணர் செஞ் சகர் சோமகர்***
***சோனசேகர் துருக்கர் குருக்களே***

என்றும் பாடுகிறான்.

மேற்சொன்ன இரு சந்தர்ப்பங்களிலும் 'தமிழ்' கூறும் விளக்கங்கள் வரலாற்றுக் குழப்பங்களைத் தரப்போகிறது.

இங்கே 'துருக்கர்கள்' , 'சோனகர்கள்' வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டுக் காட்டப்படுவது மாத்திரமன்றி அக்காலக் குதிரைகளை அங்கு கொண்டு வந்து சேர்த்தது 'துருக்கர்கள்' அதாவது துருக்கியர்கள் என்று விளக்கமளிக்கப்படுகிறது. அப்படியானால் அன்றைய சமுதாயத்திற்கு, வால்மீகிக்கும் கூட துருக்கியருக்கும், சோனகருக்குமான வித்தியாசம் தெரிந்திருக்கிறது. எனவே அதை ஒப்புவித்த கம்பனுக்கும் கூட அது தெரிந்திருக்கிறது.

பொதுவாகவே குதிரைகள் வியாபாரம், இறக்குமதி என்றாலே வரலாறு அரேபியரையே முன் காட்டி நின்ற போதும், கம்பனால் மிகத் தெளிவாக அரேபியரை விலக்கி வைத்து, துருக்கியரை முன்நிறுத்த முடிந்திருப்பது இங்கே முக்கியத்துவம் பெறுகிறது.

அதேநேரம், சோனகர் என்ற சொற்கொண்டு அங்கு விளிக்கப்படுவது யார் எனும் கேள்விக்கு சமகால இலக்கியப் பதிவுகள், விளக்கங்களைக் கொண்டு ஆராய முற்படும் போது, அது அரேபியரைக் குறிக்கப் பாவனையில் இருந்த சொல்லாக அறிய முடிகிறது.

எனவே, யவனர் என விளிக்கப்பட்ட கிரேக்கர்களும் சோனகர்களும் ஒன்றில்லை என்பது இங்கு தெளிவுபடுத்தப்பட வேண்டிய விடயமாகும்.

இவ்வாறு தமிழில் நெடுங்காலமாகப் பாவனையில் இருந்து வந்த சோனகர் எனும் பதம் பின் நாளில் இலங்கையில் இஸ்லாம் நிலை கொண்ட பின்னும் தொடர்ந்தும் நமது சமூகத்தின் இன அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இன்றும் கூட நமது பிறப்புச் சான்றிதழில் இன அடையாளம் 'சோனகர்' என்றே பதியப்படுகிறது. எனினும் ஒரு சில இடங்களில் இந்தியச் சோனகர், கரையோரச் சோனகர் போன்ற பதங்களும் அவ்வப்போது பாவிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் உண்டு.

அது ஏன்? அவ்வாறு பிரிக்கப்பட்டது என்பதும் நமது சமூகம் அறிந்து கொள்ள வேண்டிய கட்டாய வரலாறாகும்.

இதேவேளை, வட இந்திய இலக்கியங்களில் குறிப்பிடப்படும் 'யோன' என்கின்ற பதம் நாளடைவில் பாளி மொழியூடாக சிங்களத்தில் கலந்திருப்பதையும் இவ்வாறான இலக்கியத் தொடர்புகளைக் கொண்டு எம்மால் நிறுவ முடியும்.

இப்போது தமிழிற் சொல்லப்படும் 'சோனகர்கள்' தமிழிற்கு அவ்வாறு மொழி பெயர்க்கப்பட்டவர்கள் என்பதன் அடிப்படையை அறிந்து கொண்டோம், எனினும் தமிழ் வரலாறு இச்சொல்லை எங்கிருந்து பெற்றுக்கொண்டது என்பது தொடர்பிலும் நமது கவனத்தைச் செலுத்த விரும்புகிறேன்.

வேதகாலப் பதிவுகளிலும், இலக்கியங்களிலும் 'யோனர்கள்' என்று குறிப்பிடப்பட்டிருப்பவர்களையே தமிழ் 'சோனகர்கள்' என்று குறிப்பிட வருவதை இங்கு நாம் தெளிவாகக் காண்கிறோம். சற்றே தம்மைக் குழப்பிக்கொள்ளும் சைவத் தமிழறிஞர்கள் என்னதான் யோனர்களையும், யவனர்களையும் ஒன்றிணைத்துப் புனைய விரும்பினாலும், மொழியியல் ரீதியாக நாம் அறிந்து கொள்ள வேண்டிய இன்னுமொரு விடயம் இருக்கிறது.

அது தான் 'யோன' என்ற சொல்லே பாளியிலிருந்து இலக்கியங்கள் கடன் வாங்கியதாகக் கூறப்படும் கூற்றாகும்.

யோனர், யவனர் என்பது கிரேக்கரையே குறிக்கிறது என்று வாதிட்டு சோனகரின் பாரம்பரியத்தைத் தகர்த்தெறியக் கங்கணக்கட்டி நிற்கும் சில வரலாற்று ஆசிரியர்களைப் பொறுத்தவரை பாளி மொழியிலிருந்து 'யோன' என்ற சொல் உருவானது என்பது ஏற்றுக்கொள்ள மிகவும் கடினமான ஒரு விடயமாகும்.

அதை மறைப்பதற்காக யோனரை வட இந்தியப் புராணங்கள் தரும் யவனரோடு (கிரேக்கர்) ஒன்றாக்கி யோனர்கள் என்று தனியாக யாரும் இருக்கவில்லை என்ற வாதத்தோடு கடந்த காலங்களில் இவர்கள் முன் வந்த சந்தர்ப்பங்களைக் கண்ணுற்றிருக்கிறோம்.

ஆனால் சங்க கால இலக்கியங்களோ மிகத் துல்லியமாக யோனர்களை, யவனர்களிலிருந்து பிரித்து மொழி பெயர்த்திருப்பதை இவர்களும் அறிந்தே இருக்கிறார்கள்.

அதேவேளை, யவனர் என்ற சொல் அக்காலகட்டத்தில் கிரேக்கரைக் குறித்திருப்பதும் சந்தேகத்துக்குரியது என்று "Tle history of Buddhist thought' எனும் தன் நூலில் (p.85) Edward Joseph Thomas (1869 -1958) எனும் அறிஞர் குறிப்பிடுகிறார்.

அப்படியானால், இங்கு யோனர் - யவனர் - சோனகர் ஒற்றுமைகள், வேற்றுமைகள், தொடர்புகள் என்னவாக இருக்கும் என்பதையும் நாம் சற்று அலசும் தேவையைப் பெறுகிறோம்.

தொடரும்...

# வடக்கு முஸ்லிம்களின் வரலாற்றுத் துயரம்!



(எம்.எஸ்.எம். நூர்தீன்)

வில்பத்துக் காட்டில் ஓர் அங்குலத்தைக் கூட முஸ்லிம்களோ அமைச்சர் றிசாட் பதியுதீனோ பிடிக்கவில்லை. முஸ்லிம்கள் வாழ்ந்த, அவர்களின் பூர்வீக காணிகளிலேயே முஸ்லிம்கள் மீளக்குடியேறி வருகின்றனர் என வட மாகாணத்தின் மன்னார் மாவட்டத்திலுள்ள முசலி பிரதேச செயலாளர் பிரிவு மறிச்சுக்கட்டி பாலைக்குழி போன்ற கிராமங்களில் வாழும் முஸ்லிம்கள் தெரிவிக்கின்றனர்.

காத்தான்குடி மீடியா போரத்தைச் சேர்ந்த பத்து ஊடகவியலாளர்கள் கடந்த 27,28,29 ஆம் திகதிகளில், வட மாகாணத்திற்கான கள விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

இந்த களப்பயணத்தின் போது இவர்கள் வடமாகாணத்தின் பல்வேறு பிரதேசங்களுக்கும் சென்றிருந்தனர். வில்பத்து பிரதேசம் மற்றும் வட மாகாணத்தின் மன்னார் மாவட்டத்திலுள்ள முசலி பிரதேசசெயலாளர் பிரிவிலுள்ள மறிச்சுக்கட்டி, பாலைக்குளி போன்ற கிராமங்களுக்கு விஜயம் மேற்கொண்டதுடன், 1990ம் ஆண்டு இடம் பெயர்ந்து, தற்போது மீளக் குடியேறியுள்ள முஸ்லிம்கள் பலரையும் சந்தித்து இவர்கள் கலந்துரையாடினர்.

மறிச்சுக்கட்டி, பாலைக்குளி போன்ற கிராமங்களை உள்ளடக்கி வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் வில்பத்து காட்டுப்பிரதேசமென 2012ம் ஆண்டு வனஜீவராசிகள் திணைக்களம் வர்த்தமானி பிரகடனம் செய்துள்ளது. இதை வைத்துத்தான் வில்பத்துக் காட்டை முஸ்லிம்கள் பிடித்துள்ளார்கள் என்ற புரளியை கிழப்பியுள்ளனர்.

இந்த நடவடிக்கையானது அங்குள்ள முஸ்லிம்களை பெரிதும் பாதிக்கச் செய்துள்ளதுடன், இங்கு முஸ்லிம்கள் பூர்வீகமாக வாழ்ந்துள்ளதை அழிப்பதற்கான சதி நடவடிக்கையாக இவர்களின் இந்த நடிவடிக்கை உள்ளது எனவும் அப்பிரதேச முஸ்லிம்கள் தெரிவிக்கின்றனர்.

மோதரகம வாவிக்கும் பாலாவி வாவிக்குமிடையிலுள்ள பகுதிதான் வில்பத்தாகும். இதற்கான ஆதாரங்கள் வன. ஜீவராசிகள் திணைக்களத்தினால் இரண்டு பக்கமும் பெயர்ப்பலகைகள் போடப்பட்டுள்ளமையாகும். இந்த பெயர்ப்பலகையை ஊடகவியலாளர் குழுவினர் சென்று பார்வையிட்டனர்.

மறிச்சுக்கட்டி பாலைக்குளி போன்ற கிராமங்களில் முஸ்லிம்கள் பூர்வீகமாக வாழ்ந்தார்கள் என்பதற்கு நிறையவே ஆதாரங்கள் அவர்களிடமிருக்கின்றன. பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்கள் மற்றும் காணி உறுதிப்பத்திரங்கள், தேசிய அடையாள அட்டை, பழைய கிணறுகள், ஆரம்பமாக அமைக்கப்பட்டு யுத்தத்தினால் அழிவடைந்த பள்ளிவாயல்கள், அரசாங்கத்தினால் அன்று நிர்மாணிக்கப்பட்ட பாடசாலைக் கட்டிடங்கள் மற்றும் குளங்கள் வீடுகள் என அதே போன்று விவசாயக் காணி உறுதிகள் என பல ஆதாரங்களை இங்குள்ள மக்கள் வைத்துள்ளனர்.

இவ்வாறு இவர்களிடம் ஆதாரமுள்ள நிலையில் தான், மறிச்சுக்கட்டி பாலைக்குழி போன்ற முஸ்லிம்களின் பூர்வீகமான பத்து கிராமங்களை வில்பத்துக் காணி என கூறுகின்றனர். யார் வந்து சொன்னாலும் எங்களின் பூர்வீக பூமியை விட்டு நாங்கள் செல்ல மாட்டோம். இங்கேயே வாழ்ந்து இங்கேயே மரணிப்போம் என அங்குள்ள பிர்தௌஸ் ஆசிரியர் தெரிவித்தார்.

இந்தப்பிரதேசம் வில்பத்தில்லை என முசலி பிரதேச செயலகம் கூட உறுதிப்படுத்தியுள்ளதுடன் மறிச்சுக்கட்டி என பெயர்ப்பலகையும் போடப்பட்டுள்ளது. இது தொடர்பாக இங்குள்ள பள்ளிவாசல்கள் மற்றும் முசலி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்தின் பல தரப்பினருக்கும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளதாகவும், அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

இங்கு 18000 வாக்காளர்கள் இருக்கின்றனர். 7000 குடும்பங்களுக்கு அதிகமாகவும் அதே போன்று 32,000 இற்கு மேற்பட்ட மக்கள் இந்தக் கிராமங்களில் வாழ்கின்றனர். இதில் கரடிக்குளி, மறிச்சுக்கட்டி, முள்ளிக்குளம், காயாக்குளி, பாலைக்குழி, கொண்டச்சி, வேப்பங்குளம் போன்ற பத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்களின் பூர்வீகமான கிராமங்களையே, முஸ்லிம்கள் வில்பத்துவை ஆக்கிரமிக்கிறார்கள் என்று சிலர் குற்றம்சாட்டுவதாக இப்பிரதேச முஸ்லிம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இக்கிராமங்களிலுள்ள முஸ்லிம்களுக்கு சொந்தமான பல ஏக்கர் காணிகளை இலங்கை அரச படையினர் பிடித்து வைத்துக் கொண்டு அவர்களே வேளாண்மை மற்றும் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதாகவும், தங்களது பயிர்ச்செய்கைக்கு தடை விதிப்பதாகவும் இப்பிரதேச முஸ்லிம்கள் தெரிவிக்கின்றனர். நூற்றுக்கணக்கான மாடுகளை எடுத்துக் கொண்டு அதை மீள தரமாட்டோம் என்று அவர்கள் கூறுவதாகவும் கூறுகின்றனர்.

நாங்கள் மீளக்குடியேறி ஆறு வருடங்களாகின்றன. அதில் மூன்று வருடங்கள் நிம்மதியாக வாழ்ந்தோம் பின்னர் கடந்த மூன்று வருடங்களாக பலதரப்பட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றோம் என அவர் மேலும் தெரிவிக்கின்றார். எங்கள் காணிக்குள் நாங்கள் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதையெல்லாம் இந்த அரசாங்கம் தீர்த்து வைக்கவில்லை. ஆனால் வில்பத்து எனக் கூறி எங்களை எழுப்பி விட முயற்சிக்கின்றனர். இந்த நல்லாட்சி அரசாங்கம் இது விடயத்தில் கவனம் செலுத்தி எமது காணிகளை எங்களுக்கு தரவேண்டும். எங்களை தொந்தரவு செய்யக் கூடாது எனவும் இப்பகுதி மக்கள் இந்த ஊடகவியலாளர் குழுவிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இதையடுத்து முசலி பிரதேச செயலகத்திற்கு சென்று உதவி பிரதேச செயலாளர் மற்றும் அதிகாரிகளையும் இக்குழுவினர் சந்தித்தனர். பின்னர் வெள்ளிக்கிழமை, அமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தலைவருமான றிஷாத் பதியுதீனை மன்னாரில் வைத்து இக்குழுவினர் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன் போது மன்னார் மாவட்டத்திலுள்ள மறிச்சுக்கட்டி மற்றும் கரடிக்குளி, பாலைக்குளி போன்ற பிரதேசங்களில் மீளக்குடியேறுகின்ற முஸ்லிம் கிராமங்களையும், கத்தோலிக்க கிராமத்தையும் சேர்த்துத்தான், பல ஊடகங்களும், தெற்கிலே இருக்கின்ற இனவாத சிந்தனை கொண்ட அமைப்புக்களும் சேர்ந்து ஒரு பிழையான தகவலை நாட்டுக்கும் பெரும்பான்மை சிங்கள மக்களுக்கும் திணித்திருக்கின்றார்கள்.

அதில் வில்பத்தை முஸ்லிம்கள் ஆக்கிரமத்திருக்கின்றார்கள். முஸ்லிம்கள் வில்பத்துக் காட்டை அழிப்பதாகவும் முஸ்லிம்கள் அங்கு குடியேறுவதாகவும் அப்பட்டமான பொய்ச் செய்திகளைத்தான் கடந்த காலங்களில் கூறி வந்தார்கள். வில்பத்து என்பது இந்த நாட்டிலே இருக்கின்ற வன. ஜீவராசிகள் திணைக்களத்திற்கு சொந்தமான பெரும் காடாகும். இந்த வில்பத்து பிரதேசம் அநுராதபுர மாவட்டத்திலும் புத்தளம் மாவட்டத்திலும் வரும் ஒரு பகுதியாகும். இது மன்னார் மாவட்டத்திற்குள் ஒரு போதும் வரவில்லை.

விடுதலைப்புலிகளினால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு புத்தளத்திலே பல துன்பங்களோடும், கஷ்டங்களோடும் வாழ்ந்து விட்டு சொந்த மண்ணிலே வந்து வாழ்கின்ற இந்த மக்களை, இன்னொரு மண்ணை வந்து ஆக்கிரமித்தவர்கள் போலும், மிருகங்களை கொல்கின்றவர்கள் போலும், இந்த நாட்டிலே மோசமான ஒரு சமூகம் போலும், சிங்கள மக்கள் மத்தியில் முஸ்லிம்களை காட்டுகின்ற மோசமான நடவடிக்கையினை சில ஊடங்கள் செய்து வருகின்றன.

இதற்குப்பின்னால் பெரிய சக்தி இருந்து சிலரை பயன்படுத்தி சிங்கள முஸ்லிம்கள் மக்கள் மத்தியில் கலவரத்தினை ஏற்படுத்துகின்ற நல்லுறவை சீர்குலைக்க எடுக்கும் சதியாக இந்த நடவடிக்கையை நான் பார்க்கின்றேன் என அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

இதையடுத்து யாழ்ப்பாணத்திற்கு சென்ற காத்தான்குடி மீடியா போரத்தின் ஊடகவியலாளர் குழுவினர், 28 ஆம் திகதி, சனிக்கிழமையன்று யாழ்ப்பாணத்திலுள்ள முஸ்லிம் சிவில் சமூக பிரதிநிதிகள் மற்றும் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி முஸ்லிம் சிவில் சமூக அமைப்புக்களின் சம்மேளன பிரதி நிதிகளையும் சந்தித்தனர்.

இதன் போது யாழ்ப்பாணத்தில் மீள் குடியேறிய முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்து கொண்டனர். யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறியுள்ள முஸ்லிம்கள் தமது சொந்த இடங்களில் வீடுகளை நிர்மாணித்துக்கொள்ள பெரும் சிரமங்களை சந்திப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். யாழ்ப்பாணத்தில் 2016ம் ஆண்டு 3500 முஸ்லிம் குடும்பங்கள் மீளக் குடியமர்வதற்கு விருப்பம் தெரிவித்து பதிவு செய்துள்ளனர். அவர்களில் சுமார் 650 குடும்பங்களே தற்போது யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேறியுள்ளன.

இந்த கள விஜயத்தின் போது யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதுவர் ஏ.நடராஜனையும் சந்தித்து முஸ்லிம்களின் வீட்டுப்பிரச்சினைகள் தொர்பில் கலந்துரையாடப்பட்டது. தனக்கு இதுவரை எந்தவொரு முறைப்பாடும் எவரிடமிருந்தும் கிடைக்கப் பெறவில்லையெனவும் இந்திய அரசாங்கம் வழங்கிய வீடுகள் அனைத்தும் நிர்மானித்து முடித்து விட்டதாகவும் துணைத்தூதுவர் தெரிவித்தார். இன, மதம், மொழி பார்த்து இந்தியா உதவி செய்வதில்லை எனவும் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் உதவுவதாகவுதம் அவர் குறிப்பிட்டார்.

காத்தான்குடி மீடியா போரத்தின் இந்த கள விஜயத்தின் போது யாழ்ப்பாணத்திலுள்ள யாழ் ஊடக அமையத்தினருடனான சந்திப்பும் நடைபெற்றது. அத்தோடு, கிளிநொச்சி ஜும்ஆப்பள்ளிவாசல் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடல் நடைபெற்றது.

# புற்று நோய் ஆட்கொல்லிநோயல்ல

## பெப்ரவரி 4 உலக புற்றுநோய் தினம்

## குணமாக்கும் நவீன மருத்துவம்

செ.தர்ஷிகா

சத்தமின்றி உடலுக்குள் ஊடுருவி கொஞ்சம் கொஞ்சமாக ஆளைக்கொல்லும் கொடிய நோய்களில் புற்றுநோய்க்கு மிக முக்கிய இடமுண்டு. புற்றுநோய் வந்துவிட்டால் இறப்பு கட்டாயம் தான் என்ற நிலை இன்று மாறி நவீன சிகிச்சை முறைகளுக்கு வழி சமைத்துவிட்டது இன்றைய வைத்திய உலகம். ஆனாலும் மக்களுக்கு புற்றுநோய் பற்றி சரியான தெளிவின்மை காரணமாக அவர்களுக்கு பயமும் பீதியும் இருக்கத்தான் செய்கிறது. புற்றுநோய் ஒரு தொற்று நோயல்ல, வாழ்க்கை முறை, உணவுப்பழக்கங்கள் போன்ற சில முறைகள் மாறுபடுவதால் ஏற்படுகின்றது. புற்றுநோய்களில் 23 வகையான புற்றுநோய்கள் உள்ளன. அவற்றுள் பல புற்றுநோய்கள் எதனால் ஏற்படுகிறது என்ற காரணம் தெரியாமலே இன்னும் கிடப்பில் உள்ளன.

பெப்ரவரி (04)ஆம் திகதி உலகப்புற்றுநோய்த்தினத்தையொட்டி இலங்கையில் புற்றுநோய்க்கு எதிராக தேவையான செயற்றிட்டங்களை அரசு முன்னெடுக்கவுள்ளது.


### புற்றுநோய் என்றால் என்ன?

உடலுக்கு அடிப்படையாக உள்ள உயிரணுக்களைப் (செல்கள்) பாதிக்கும் நோயைத்தான் புற்றுநோய் என்கிறோம். இந்த நோய்பற்றி அறிந்துகொள்வதற்குமுன் இயல்பாக உள்ள உயிரணுக்கள் எவ்வாறு புற்றுநோய் அணுக்களாக மாறுகிறது என்று பார்ப்போம்! நம் உடல் பலவகையான உயிரணுக்களால் ஆனது. உடல் வளர, ஆரோக்கியமாக இருக்க, இந்த உயிரணுக்கள் வளர்ந்து பெருகி, மேலும் பல உயிரணுக்களை உருவாக்குகின்றன. இந்தச் சீரான பணியில் ஏதேனும் தவறு ஏற்படும்போது, புதிய உயிரணுக்கள் அதிகமாக உருவாகிவிடுகின்றன. பழைய உயிரணுக்கள் அவற்றின் கால அளவை மீறி உயிர் வாழ்ந்துவிடுகின்றன. இந்த அதிகப்படியான உயிரணுக்கள் உடலில் கட்டியாகத் தோன்றுகின்றன.

எல்லாக் கட்டிகளுமே புற்றுநோய்க் கட்டிகள் அல்ல. புற்றுநோய் அல்லாத கட்டிகளால் உயிருக்கு ஆபத்து இல்லை. இத்தகைய கட்டிகளை அறுவை சிகிச்சையின் மூலம் அகற்றினால் மீண்டும் தோன்றுவதில்லை அவை உடலின் மற்ற பாகங்களுக்குப் பரவுவதில்லை. சிகிச்சையற்ற நிலையில் புற்றுநோய் உயிரணுக்கள் கட்டுப்பாடின்றி வளர்கின்றன. அவை சுற்றியுள்ள மற்ற திசுக்களை ஆக்கிரமித்து அழிக்கின்றன. இரத்தம் மற்றும் நிணநீர் வழியாக உடலின் மற்ற பகுதிகளுக்கும் பரவுகின்றன. இதனால், உறுப்பின் இயக்கங்கள் பாதிக்கப்பட்டு இறப்பு ஏற்படுகிறது.

புற்றுநோய் ஒரு தொற்றுநோய் அல்ல. ஆண்களுக்கு நுரையீரல், வயிறு, குடல், உணவுக்குழாய், பகுதிகளிலும் பெண்களுக்கு மார்பகம், நுரையீரல், வயிறு, குடல், கர்ப்பப்பை வாய் ஆகியவற்றிலும் அதிகமாக புற்றுநோய் வருகிறது. புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரிப்பதுடன் இலங்கையில் மட்டும் ஒரு நாளைக்கு 9 நோயாளர்களை இனங்காண்கின்றனர். ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

GLOBOCAN தரவுகளின் அடிப்படையில் 14.1 மில்லியன் புதிய புற்றுநோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டு பதிவு செய்யப்படுவதாகவும் ஆண்டு தோறும் 8.2 மில்லியன் மக்கள் புற்றுநோயால் இறக்கின்றனர் என்றும் புற்றுநோய் கண்டுபிடிக்கப்பட்டு 5 ஆண்டுகளுக்குள் உலகம் முழுவதும் புற்றுநோயுடன் 32.6 பில்லியன் மக்கள் உயிர் வாழ்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை வாழ் அனைத்துப்பெண்களிலும் மிக அதிகமாகக் காணப்படும் மார்பகப் புற்றுநோயானது 26.8 வீதமாக இருக்கின்றது. 2010 ஆம் ஆண்டிற்குப் பிறகு இலங்கையில் இரண்டாவதாகக் காணப்படும் முன்னணி புற்றுநோய் உதடு மற்றும் வாய்க்குழிப் புற்றுநோய் ஆகும். இது ஆண்களில் மிக அதிகளவில் காணப்படும் புற்றுநோயாகும்.




பெண்கள் மத்தியில் முன்னணியில் இருக்கின்ற ஐந்து முக்கியமான புற்றுநோய்களாக மார்பகம், கருப்பை, கருப்பைக்கழுத்து, தைராய்டு சுரப்பி, உணவுக்குழாயில் களம் மற்றம் சூலகம் போன்ற இடங்களில் வரும் புற்றுநோய்கள் காணப்படுகின்றன. ஆண்களுக்குமத்தியில் உதடு, வாய்க்குழி மற்றும் தொண்டைக்குழி, வாதனாளி, மூச்சுக்குழாயின் பிரதான குழாய்கள், நுரையீரல்கள், உணவுக்கால்வாயில், களம், பெருங்குடல் மற்றும் மலக்குடல் மற்றும் லிம்போமா ஆகியன இருக்கின்றன.

### புற்றுநோய் தொடர்பில் பிழையான கருத்து

புற்றுநோய் என்றால் அதிக வலி தரும் நோய் என்று பரவலான கருத்தும் பயமும் உள்ளது. எந்த வகையான புற்றுநோய், எவ்வளவு பரவி உள்ளது, நோயாளியின் பொறுத்துக்கொள்ளும்தன்மை இவற்றைப் பொறுத்து வலியின் அளவு மாறுபடும். வலியைக் கட்டுப்படுத்த தகுந்த மருந்துகள் உள்ளன. மருத்துவரின் ஆலோசனைப்படி உட்கொள்ளும்போது வலியில் இருந்து நிவாரணம் பெறுவதுடன் வலி மருந்துகளுக்கு அடிமையாவதையும் தடுக்கலாம்.

25% புற்றுநோயாளிகளை மனச்சோர்வு பாதிப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. புற்றுநோய் வந்துவிட்டால் மனச்சோர்வு அடைவது இயல்பு என்று நினைத்து அதைப்பற்றி மருத்துவருடனோ நெருங்கிய உறவினர்களுடனோ சொல்லாமல் விட்டுவிடுகின்றனர். புற்றுநோய் என்று தெரிந்தவுடன் இறப்பு பற்றிய பயம், குடும்பத்தாரின் எதிர்காலம் பற்றிய கவலை, நோயின் தீவிரம் குறித்த பதற்றம், வாழ்க்கை முறையில் மாற்றம், வருமானம் மற்றும் வேலை இப்படி பல சிந்தனைகளால் மனஅழுத்தம் ஏற்பட்டுவிடும் இது இரண்டு வாரங்களுக்கு மேல் நீடித்தால் மருத்துவரிடம் காண்பித்து சிகிச்சை பெறுவது அவசியம். நோயாளி மட்டுமின்றி குடும்பத்தாரும் பதற்றம் மற்றும் மனச்சோர்விற்கு ஆளாகலாம். குடும்பத்தவர்களும் மருத்துவரை அணுகிப் பரிசோதனை செய்துகொள்ளலாம்

### புற்றுநோயைத் தடுக்க முடியுமா?

புற்றுநோயைத் தடுக்க உத்தரவாதமான முறை ஏதும் இல்லை. ஆனால், சரியான வாழ்க்கைமுறையின் மூலம் நோய் ஏற்படும் வாய்ப்பை பெருமளவில் குறைக்க முடியும். புகையிலைப் பொருட்களைப் (உதாரணம்: சிகரெட், பீடி, பான் வகைகள்) பயன்படுத்தாமை மது மற்றும் புகை பிடிக்கும் பழக்கம் ஒரு சேர இருப்பது தொண்டைப் புண்களின் வாய்ப்பை அதிகரிக்கின்றன. குறைந்த கொழுப்பு, அதிகக் காய்கறி, பழம், முழுமையான தானியங்கள் உட்கொள்ளாமை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுவகைகளைத் தவிர்த்தல், உடல் பருமன் ஆகாமல் பார்த்துக்கொள்ளல், சருமத்தை வெயிலில் இருந்து பாதுகாத்தல். சுத்தமான சூழலில் இருத்தல், வைரஸ்களால் ஏற்படும் குறிப்பிட்ட புற்றுநோய்களை தடுப்பூசி மூலம் தடுக்கலாம்.

### அரசு முன்னெடுக்கும் வேலைத்திட்டம்

புற்றுநோய் பற்றி விழிப்புணர்வுகளை அதிகரிக்கவும் புற்றுநோய் பற்றிய கல்வி நடவடிக்கைகளை உயர்த்தவும் இதன் மூலம் நம் நாட்டு அரசாங்கம் மட்டுமன்றி உலகம் முழுவதும் உள்ள அரசாங்கங்கள் மற்றும் தனிநபர்கள் ஒன்றிணைந்து புற்றுநோயினால் ஏற்படக்கூடிய காப்பாற்றக்கூடிய மில்லியன் கணக்காணவர்களை இறப்பிலிருந்து பாதுகாப்பது. போன்றவற்றை நோக்கமாகக் கொண்டே உலகப் புற்றுநோய் தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதாரம் போசனை மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு ஏற்கனவே புற்றுநோய்களை எதிர்த்து போராட பல உத்திகளை முன்னெடுத்துவருகின்றது. புற்றுநோயை ஆரம்பநிலையிலேயே கண்டறிவதற்கு புற்றுநோய்க்கு தகுந்த சிகிச்சையை வழங்குவதற்கும் புற்றுநோயாளர்களின் வாழ்க்கைத்தரத்தை அதிகரிக்கும் வழிவகைகள் சம்பந்தமான வழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் திட்டமிட்டுள்ளது. அந்த வகையில் மாகாணரீதியில் அல்லது மாவட்ட ரீதியில் சேவையாற்றுகின்ற சத்திர சிகிச்சை நிபுணர்கள், புற்றுநோய் சத்திரசிகிச்சை நிபுணர்கள், கதிரியக்க நிபுணர்கள், சமுதாய மருத்துவ நிபுணர்களை பயன்படுத்திக்கொள்ளும் படி கேட்கப்படுகின்றார்கள். அதேபோல பாடசாலை மாணவர்களிடையே புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு பெண்பிள்ளைகளுக்கு (HPV)எனும் வெக்சின் பரிசோதனை செய்வதன்மூலம் புற்றுநோய் வராமல் தடுப்பதற்கு அரசு உரிய திட்டத்தை முன்னெடுக்கவுள்ளது. புற்றுநோய் தொடர்பான தவறான கருத்துக்கள், முதன்மையான தடுப்பு முறைகள் மற்றும் புற்றுநோயை ஆரம்பத்தில் கண்டறியும் நடைமுறைகள் போன் சமூக வழிப்புணர்வு, அறிவூட்டல் துண்டுப்பிரசுரங்கள் கண்காட்சிகள் போன்ற நடத்தப்படல் வேண்டும்.புற்றுநோயை கட்டுப்படுத்த மதுசாரம்,புகையிலை, பாக்கு வகை போன்றவற்றில் அரசாங்கம் தடைகளை வலுப்படுத்தவேண்டும்.இரசாயன பாவனைகளை உணவு உற்பத்தியில் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். கராப்பிட்டிய, குருநாகல், இரத்தினபுரி, கேகாலை, கண்டி ஆகிய பிரதேசங்களில் புற்றுநோய் சத்திரசிகிச்சைக்கான விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த ஆண்டும் பிரசாரத் தொனிப் பொருளாக **''என்னால் முடியும் நம்மால் முடியும்''** என்பதைக்கொண்டு 2017 ஆம் ஆண்டுக்குரிய உலகப் புற்றுநோய்க்குரிய சிகிச்சைத்தீர்வுகளைத் தொடர்ந்து கண்டறியவும் எதிரான போராட்டத்தில் ஒரு நேர்மறையான மற்றும் உயிர்ப்பான அணுகுமுறைகளைக் கையாளவும் ஊக்குவிக்கும் உந்து சக்தியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. புற்றுநோயை ஆரம்பத்திலே கண்டறிந்து இல்லாதொழித்து ஆரோக்கியமான வாழ்க்கைமுறைக்கு செல்லலாம்.

புற்றுநோய் தொடர்பில் தேவையான ஆலோசனைகள், சந்தேகங்களுக்கு 0112368627,0777903407 ஆகிய தொலைபேசிகளுக்கு எவ்வித தயக்கமுமின்றி தொடர்பு கொள்ளலாம்.

# இலங்கையின் 69 ஆவது சுதந்திர தினம்

## இனரீதியான பாரபட்சம் தொடருமானால் சுதந்திரம் அர்த்தமற்றதாகும்

எம்.எஸ். அமீர் ஹுசைன்

இலங்கைத் திருநாடு அந்நிய ஏகாதிபத்தியத்தின் பிடியில் இருந்து விடுதலை பெற்று 2017 பெப்ரவரி 04 ஆம் திகதியுடன் 69 வருடங்கள் நிறைவடைகின்றன. இவ்வருடம் நாம் 69 ஆவது சுதந்திர தினத்தை நினைவு கூருகின்றோம். சுதந்திர தினத்தின் சிறப்பு வைபவம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கொழும்பில் நடைபெறுகின்றது. இலங்கை ஒரு பௌத்த நாடு என்ற அடிப்படையில் 2500 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட தேசமாகும். இலங்கையின் கரையோர பிரதேசங்களை 1505 ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்த ஆரம்பிக்கும் வரையில் இந்நாடு பல சிற்றரசுகளின் கீழ் குருநில மன்னர்களால் ஆளப்பட்டு வந்திருக்கின்றது. இதன் அடையாளமாக ஒவ்வொரு காலப்பகுதிகளிலும் வெவ்வேறு இராசதானிகள் இருந்துள்ளதை நாம் இலங்கையின் வரலாற்றை புரட்டுவதன் மூலம் அறிகின்றோம். போர்த்துக்கேயரை வெளியேற்றிவிட்டு 1658ஆம் ஆண்டு ஒல்லாந்தர் இலங்கையின் கரையோர பிரதேசங்களைக் கைப்பற்றி ஆட்சி செய்தனர். 1796ஆம் ஆண்டு இலங்கையைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் ஒல்லாந்தரை விரட்டி அடித்துவிட்டு முதலில் கரையோரப் பிரதேசங்களை கைப்பற்றி நிர்வாகம் செய்தனர். பின்னர் 1815 ஆம் ஆண்டு கண்டி இராசதானியை கைப்பற்றியதன் மூலம் இலங்கை முழுவதையும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தனர்.

இவ்வாறு இலங்கையை ஆட்சி செய்த பிரித்தானியரிடம் இருந்து இலங்கைத் தேசம் 1948 ஆம் ஆண்டு சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டதாயினும் 1972 ஆம் ஆண்டு வரையில் இந்நாட்டை ஆட்சி செய்வதற்கான அரசியல் யாப்பொன்றை வரைந்து கொள்ள முடியாத நிலை இருந்து வந்தது. 1970 ஆம் ஆண்டு ஸ்ரீ.ல.சு.க. தலைமையிலான கூட்டரசாங்கம் தேர்தலில் பெற்றுக்கொண்ட மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தால் பிரித்தானியரது நிர்வாகத்தை முற்றாக ஒழித்துக் கட்டி 1972 ஆம் ஆண்டு புதிய அரசியல் யாப்பொன்றை வரைந்துகொண்டதன் மூலம் முதலாவது குடியரசாக இலங்கைத்தேசம் மலர்ந்தது. 1972 ஆம் ஆண்டு புதிய அரசியல் யாப்பு அறிமுகம் செய்யப்பட்டதோடு இலங்கையை இலங்கையரே முழுமையாக ஆட்சி செய்யும் நிலை உருவாகியது. அதனைத் தொடர்ந்து 1977 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஐ.தே.க. அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் பிரதி பலனாக 1978 ஆம் ஆண்டு இரண்டாவது குடியரசு யாப்பு வரையப்பட்டு 1972 ஆம் ஆண்டின் முதலாவது குடியரசு யாப்பை முற்றாக மாற்றம் செய்து இரண்டாவது குடியரசுயாப்பு நடைமுறைக்கு வந்தது.

அதனைத் தொடர்ந்து 2015 ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரையில் இரண்டாவது குடியரசு யாப்பில் 19 திருத்தங்கள் வரையில் முன்வைக்கப்பட்டு காலத்திற்கு காலம் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப அரசியல் அமைப்பில் திருத்தம் செய்யப்பட்டிருக்கின்றது. 2015 ஆம் ஆண்டு ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் காரணமாக மலர்ந்துள்ள நல்லாட்சி அரசாங்கம் இரண்டாவது குடியரசு யாப்பை திருத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு தற்போது தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. சுதந்திரத்திற்கு முன்னைய அரசியல் வரலாற்றை சற்று பின்னோக்கிப் பார்த்தால் பிரித்தானியர் இலங்கையை ஆட்சி செய்த 150 வருடங்களுக்குள் 1833 ஆம் ஆண்டு கோல் புருக், 1920 ஆம் ஆண்டு மெனிங், 1924 ஆம் ஆண்டு மக்கலம், 1931 ஆம் ஆண்டு டொனமூர், 1947 ஆம் ஆண்டு சோல்பரி என்ற அடிப்படையில் அரசியல் அமைப்பு சீர்திருத்தங்களை இலங்கைக்கு முன்வைத்து நிர்வாகத்தை முன்னெடுத்து வந்திருக்கின்றது. இவ்வாறாக இலங்கை சுமார் 450 வருடங்களுக்கு மேலாக ஐரோப்பியரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து விடுதலை பெற்ற நாளாக 1948 ஆம் ஆண்டு இலங்கை வரலாற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

இலங்கைக்கு அந்நிய ஏகாதிபத்திய வாதிகளிடம் இருந்து சுதந்திரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற தூர நோக்கில் இந்நாட்டில் வாழ்ந்த சிங்கள தலைவர்களோடு இணைந்து தமிழ்த் தலைவர்களும் முஸ்லிம் தலைவர்களும் தோளோடு தோள் நின்று அந்நிய ஆதிக்கத்திற்கு எதிராக போராட்டங்களை முன்னெடுத்தனர். இலங்கையில் பிரித்தானியருக்கு எதிராக போராடும் இலங்கை தேசிய காங்கிரஸ் 1919 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்த தேசிய காங்கிரசின். நிறைவேற்று குழு உறுப்பினர்களாக மக்தான் இஸ்மாயீல், எஸ்.என். இஸ்மாயீல், டி.பி. ஜாயா, எல்.எம். சபர், எம்.கே. சால்தீன் ஆகியோர் 1922ஆம் ஆண்டு இணைந்து கொண்டனர். அதன் மூலம் சுதந்திரப் போராட்டத்திற்கான இலங்கை முஸ்லிம்களின் பங்களிப்பு ஆரம்பமாகியது. அன்றைய காலகட்டத்தில் இந்த முஸ்லிம் தலைவர்கள் மிகவும் பிரபல்யம் மிக்க தலைவர்களாக கருதப்பட்டவர்களாவர். 1925 ஆம் ஆண்டு அக்டோபர் 14 ஆம் திகதி இந்த தேசிய காங்கிரசின் உதவித் தலைவராக டி.பி.ஜாயா தெரிவு செய்யப்பட்டார். ரியால் முஹம்மத் என்ற முஸ்லிம் தலைவர் இலங்கை தேசிய காங்கிரசின் செயலாளர்களுள் ஒருவராக தெரிவுசெய்யப்பட்டார். 1924 ஆம் ஆண்டு மனிங் அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தை ஆட்சேபித்தபோது முஸ்லிம் தலைவர்கள் பூரணமான ஒத்துழைப்பை வழங்கினர்.

1927 ஆம் ஆண்டு டொனமூர் ஆணைக்குழு இலங்கை வந்தபோது இலங்கைக்காக மற்றுமொரு அரசியல் அமைப்பு சீர்திருத்தத்திற்கான கருத்துக்களை வழங்கியவர்களில் என்.எச். அப்துல் காதர், சேர் மாகான் மாகர், டி.பி ஜாயா ஆகியோர் இடம்பெற்றனர். அதனைத் தொடர்ந்து இலங்கை தேசிய காங்கிரசால் 1930 ஜனவரி 23ஆம் திகதி இங்கிலாந்து மகாராணியை சந்தித்து இலங்கையின் நிலவரம் மற்றும் விடுதலை தொடர்பாக கலந்துரையாடுவதற்காக அனுப்பப்பட்ட தூதுக்குழுவில் காசிம் இஸ்மாயில் என்பவரும் முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித் துவப்படுத்தும் வகையில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார். அன்றைய காலகட்டத்தில் சுதந்திர வேட்கையில் பாடுபட்ட ஏ.ஈ.குனசிங்கா, டபிள்யு.ஏ.டி.சில்வா, டி.எஸ்.சேனாநாயக்கா, எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாநாயக்கா, சி.டபிள்யு.டபிள்யு. கன்னங்கர, பொன்னம்பலம் இராமநாதன், ஜீ.ஜீ.பொன்னம்பலம், சேர். அருணாசலம், டி.பி. ஜயதிலக, போன்ற சிங்கள பௌத்த மற்றும் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த தலைவர்களுடன் இணைந்து முஸ்லிம் தலைவர்களும் இந்நாட்டின் முஸ்லிம் சமூகம் சார்பான ஆதரவையும் ஒத்துழைப்பையும் சுதந்திரத்திற்காக வழங்கினர்.

அதே நேரம் தமிழ் சமூகம் சார்ந்த தலைவர்களான இராமநாதன் மற்றும் ஜீ.ஜீ பொன்னம்பல் போன்றவர்கள் அவர்களது சமூகம் சார்பாக முக்கியமான உரிமைக் கோரிக்கைகளையும் அன்றைய காலகட்டத்திலே முன்வைத்தே விடுதலைக்கான ஆதரவை வழங்கினர். ஆனாலும் முஸ்லிம் தலைவர்களைப் பொறுத்தவரையில் எந்தவிதமான நிபந்தனைகளும் இன்றி இந்நாட்டில் விடுதலை, சுயாதிபத்தியம், இறைமை, தன்னாதிக்கம், ஐக்கியம், சமாதானம் என்ற ஒரே குறிக்கோளில் ஒத்துழைப்பை வழங்கிவர் என்பது பிரதானமாகும். இதற்கு சிறந்த உதாரணமாக 1935 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் திகதி இலங்கை முஸ்லிம் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக போராடிய சிங்கள மற்றும் தமிழ் தலைவர்களும் கலந்துகொண்ட விஷேட வைபவம் ஒன்றில் சேக் அல்பாசி என்ற இஸ்லாமிய அறிஞர் 'சமாதானம் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம்' என்ற தலைப்பில் நிகழ்த்திய உரையைக் குறிப்பிடலாம்.

அத்துடன் தேசிய காங்கிரசுக்கு மேலும் பலம் சேர்க்கும் வகையில் அகில இலங்கை முஸ்லிம் லீக், இலங்கை முஸ்லிம் சங்கம், இலங்கை சோனகர் சங்கம் (சிலோன் மூவர்ஸ் அசோசியேசன்) போன்ற சங்கங்களை உருவாக்கி அவற்றின் ஊடாக முஸ்லிம்களை ஒருங்கிணைத்து பிரித்தானியர் ஆதிக்கத்தில் இருந்து இலங்கையை சுதந்திரம் அடையச் செய்து நாட்டின் இறைமை தன்னாதிக்கம் என்பவற்றை உறுதிப்படுத்த பங்களிப்பை வழங்கியுள்ளனர். இந்த பங்களிப்பும் ஒத்துழைப்பும் இன்று வரையில் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. சுதந்திரத்தின் பின்னர் நாட்டை ஆட்சிசெய்த சிங்கள தலைவர்களுடன் இணைந்து ஐக்கிய இலங்கை என்ற ஒரே தத்துவத்தின் அடிப்படையில் ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர்.

இந்த பங்களிப்பின் காரணமாகவே 1833 ஆம் ஆண்டு முதல் 1931 ஆம் ஆண்டு வரையிலான அரசாங்க சபையில் பல முஸ்லிம்கள் அங்கம் வகித்து நாட்டிற்காகவும் முஸ்லிம்களுக்காகவும் குரல் எழுப்பியதை குறிப்பிடலாம். அவர்களுள் எம்.சி.அப்துர்ரஹ்மான், வாப்பிச்சி மரிக்கார், என்.எச்.எம். அப்துல் காதர், முஹம்மத் சுல்தான், எம்.ரி. அக்பர், டி.பி.ஜாயா, மாகான் மாகர், எம்.சீ.எம். கலீல், சேர் ராசிக் பரீட் போன்றவர்களைக் குறிப்பிடலாம். 1833 ஆம் ஆண்டில் இருந்து 1931 ஆம் ஆண்டு வரையில் பிரித்தானியரால் முன்வைக்கப்பட்ட ஆறு அரசியல் சீர்திருத்தங்களின் கீழும் நிறுவப்பட்ட அரசாங்க சபையில் நியமன மற்றும் தெரிவு அங்கத்தவர்களாக இருந்து இலங்கையின் இறைமைக்காக குரல் எழுப்பினர். 1947 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரையில் பதவிக்கு வந்த இரண்டு பிரதான அரசியல் கட்சிகளின் கீழும் இலங்கை வாழ் முஸ்லிம்கள் ஐக்கிய இலங்கை என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில் அரசியல் பங்களிப்பை செய்து வருகின்றனர். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிளவுபட்ட தேசத்தை அல்லது ஐக்கியம் சீர்குலைந்த தேசத்தை முஸ்லிம்கள் விரும்பியதில்லை.

இருந்தாலும் 1990 ஆம் அண்டின் பின்னர் பௌத்த சமூகத்தில் உருவாகிய சில பௌத்த தீவிர வாத மற்றும் தீவிர சிங்கள உணர்வில் சிந்திக்கும் அனகாரிக தர்மபாலவின் சிந்தனைகளால் கவரப்பட்ட தலைவர்கள் முஸ்லிம்களின் 100 வருடங்களுக்கும் மேற்பட்ட பங்களிப்பை மறுத்தவர்களாக இந்நாட்டு முஸ்லிம்களை இரண்டாந்தர பிரசைகளாக நடத்தவதற்கும் அவர்களை இந்நாட்டின் அடிமைகளாக்கி மேலாதிக்கம் செலுத்தவும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். பதவிக்கு வருகின்ற அரசாங்கங்களில் அங்கம் வகிக்கும் ஒரு சில செல்வாக்கு மிக்க அரசியல் தலைவர்களும் நாட்டின் தலைவர்களும் கூட இந்த பௌத்த தீவிர சிந்தனைவாதிகளை மேலும் உற்சாகப்படுத்தி அரசியல் இலாபம் தேட முற்படுகின்றனர். அத்தகைய சந்தர்ப்பங்களில் இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் எதிரான சிந்தனைகளுக்கும் கருத்துக்களுக்கும் களம் அமைத்துக் கொடுத்து வந்துள்ளனர்.

இதன் உச்ச கட்டத்தைதான் 2011 ஆம் அண்டு முதல் 2014 ஆண்டின் இறுதி வரையில் எழுச்சி பெற்ற பௌத்த தீவிரவாத அமைப்புக்களுக்கு 2005 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையில் பதவியில் இருந்த மஹிந்த ராஜபக்ஷவும் அவரது அரசியல் சகாக்களும் மறைமுகமாக அனுசரணை வழங்கி உற்சாகப்படுத்திய சந்தர்ப்பங்களை நாம் நேரடியாகக் கண்டோம். அத்தகைய தலைவர்களே இந்நாட்டில் முஸ்லிம்களின் பங்களிப்பை முற்றாக மறுத்து இந்நாட்டில் எழுச்சி பெறும் முஸ்லிம்களின் அரசியல், பொருளாதார வர்த்தக, வாணிப பலத்தை அழிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களால் முன்வைக்கப்படும் முஸ்லிம்களுக்கு எதிரான பிரதான குற்றச்சாட்டுக்கள் இந்நாட்டு முஸ்லிம்கள் பௌத்தத்தை அழிப்பதற்கு தயாராகின்றனர், வெளிநாடுகளில் இயங்கும் இஸ்லாமிய பயங்கரவாதிகளோடு இணைந்து இலங்கையை அழிக்க திட்டமிடுகின்றனர், இலங்கையில் இஸ்லாமிய பயங்கரவாதத்தை பரப்புகின்றனர், இலங்கையை இஸ்லாமிய நாடாக மாற்றியமைக்க திட்டமிட்டுள்ளனர் என்பனவாகும்.

இலங்கை வாழ் முஸ்லிம்கள் பொருளாதார ரீதியாக பலம்பெறுவதை முடக்கி அரசியல் உரிமைகள் வழங்குவதை பெறுவதை தடுப்பதும் முஸ்லிம்களை அச்சுறுத்தி அடிமைகளாக நடத்துவதும் இவர்களது திட்டங்களாகும். 2015 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஐ.தே.மு. அரசாங்கம் நாட்டை மீள கட்டியெழுப்புவதாறகாக இன நல்லிணக்க பொறிமுறையொன்றை அறிமுகம் செய்திருக்கின்றது. தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையிலான உறவை பலப்படுத்தி சந்தேகங்களை போக்கி சமாதானத்தை கட்டியெழுப்புவது இந்த நல்லிணக்க செயற்திட்டத்தின் பிரதான குறிகோளாகும். ஆனாலும் நல்லிணக்கத்தின் உண்மையான நோக்கத்தை பெரும்பான்மை சிங்கள மக்கள் இன்னும் ஏற்றுக்கொள்ளாத நிலை காணப்படுகின்றது. அத்துடன் முஸ்லிம்களுக்கு இந்த நல்லிணக்கம் எந்தவிதமான பிரதிபலனையும் கொண்டு வருவதாக இல்லை. இந்நாட்டில் முஸ்லிம்கள் மீது வீண்பழிகளை சுமத்தி இனரீதியான பாரபட்சங்களால் முஸ்லிம் சமூகத்தை நசுக்கும் நிலை உருவாகுமானால் இலங்கை சுதந்திர தேசம் என்பதற்கு அர்த்தமே இல்லாது போய்விடும்.

வடக்கில் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் புரிந்துணர்வும் நல்லிணக்கமும் ஏற்படும் போது வடக்கிற்கு வெளியில் (தெற்கில்) முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் பிளவையும் முரண்பாட்டையும் உருவாக்கி சிங்கள மக்களை முஸ்லிம்களுக்கு எதிராக தூண்டிவிடும் நிலைமைகளை இன்றைய சில பௌத்த தீவிர போக்குடைய அமைப்புக்கள் முன்னெடுத்து வருகின்றன. மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆட்சி இல்லாமல் போனதால் இழந்த ஆட்சியை மீண்டும் எப்படியாவது அடைவதற்கும் மஹிந்த குடும்பத்திற்கு அதிகாரத்தை பெற்றுக்கொடுப்பதற்குமாக ஒருசில மதவாதிகள் திரைமறைவில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த செயற்பாடு நல்லிணக்க முன்னெடுப்பை பாதிப்பதாகவே அமைகின்றது. 1990 ஆம் ஆண்டு வட மாகாணத்தில் வாழ்ந்த 73000 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் இரண்டு மணித்தியால அவகாசத்தில் பிரயாணச் செலவிற்காக மாத்திரம் ரூபா 500 பணத்துடன் வெறுங்கையோடு வெளியேற்றப்பட்டனர்.

வடக்கில் சுமார் 1000 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்டிருந்த முஸ்லிம்கள் அன்றைய காலகட்டத்தில் ஏன் புலிகளின் கோரிக்கைக்கு அடிபணிந்து வெளியேறினார்கள் என்று கேட்டால் இந்நாட்டின் இறைமை, தன்னாதிக்கம், ஐக்கியம் என்ற ஒரே காரணத்திற்காகவே சொந்த மண்ணை விட்டு வெளியேறினர் என்பது ஒரே பதிலாகும். இன்றேல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தனித் தமிழ் ஈழம் என்ற எண்ணப்பாட்டிற்கு ஆதரவு வழங்கி ஒத்துழைத்திருந்தால் வடக்கில் வாழ்ந்த முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டிருக்க மாட்டார்கள். இவ்வாறு வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் இலங்கையின் பல பிரதேசங்களில் சிதறி வாழ்ந்த நிலையில் 1994 ஆம் ஆண்டு அன்றைய முஸ்லிம் சமூகத்தின் ஆளுமை மிக்க தலைவராக இருந்த ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான எம்.எச்.எம். அஷ்ரபின் தலையீட்டால் புத்தளம், தீகவாபி, பொலன்னறுவை, வில்பத்து போன்ற பிரதேசங்களில் காணிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டு குடியமர்த்தப்பட்டனர்.

ஆனால் இன்று சிங்கள தீவிரபோக்குடைய அமைப்புக்கள் இந்த மக்களை இலங்கையின் இயற்கை வளத்தை அழிக்கும் நாசகார கூட்டமாக சித்தரித்து காட்டி வருகின்றனர். இந்த மக்கள் இந்நாட்டில் இறைமைக்காகவும் தன்னாதிக்கத்தைப் பாதுகாப்பதற்காகவும் தமது பிறந்த மண்ணை விட்டு வெளியேறியவர்கள் என்பதை சிங்கள மக்களுக்கு சரியாக புரிந்து கொள்ள அல்லது புரிய வைக்க முடியாத நிலை இருந்து வருகின்றது. இன்று தமிழருக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் நல்லிணக்கம் பற்றி சிந்திக்கின்ற ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன சிங்கள, முஸ்லிம் ஒற்றுமையை பேணிப்பாதுகாத்து பலப்படுத்துவும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டியிருக்கின்றது. சிங்கள மற்றும் முஸ்லிம்களுக்கிடையிலான உறவை சீர்குழைக்க எடுக்கும் நடவடிக்கைகளை கண்டும் காணாத நிலையில் செயற்படுவதானது மஹிந்த ஆட்சியில் செய்த அதே தவறை மைத்திரி மற்றும் ரணில் ஆகியோரும் செய்தாகவே அமையும்.

இலங்கையின் 69ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்படுகின்ற இன்றைய நிலையில் இந்நாட்டில் வாழும் முஸ்லிம்களாகிய நாமும் இந்நாட்டின் பிரஜைகளே என்பதை சிங்கள மக்கள் அனைவரும் சரியாக புரிந்துகொள்ளச் செய்வதற்காக அரச மட்ட நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. அதேபோன்று முஸ்லிம் சமூகத்தில் இருந்தும் சிங்கள மற்றும் தமிழ் மக்களுடனான புரிந்துணர்வு நடவடிகக்கைகள் பலமான முறையில் முன்னெடுக்கப்பட வேண்டியிருக்கின்றது. அத்துடன் முஸ்லிம் சமூகமும் உரிமைகளையும் சலுகைகளையும் அனுபவிப்பதற்கான சமூகம் என்ற உணர்வில் மாத்திரம் செயற்படாது நாமும் இந்நாட்டின் பிரஜைகள்தான், இந்நாட்டின் மீது அன்பும் கரிசனையும் மிக்கவர்கள் என்பதை வெளிப்படையாக உணர்த்தும் செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டிய தேவை இருந்து வருகின்றது.









# சுதந்திரப் போராட்டத்தில் முஸ்லிம்களின் பங்கு

அஷ்ஷெய்க் ஆலிப் அலி (இஸ்லாஹி)

இலங்கை வரலாறு நெடுகிலும் மேற்குலக நாடுகளின் காலனியாதிக்கத்திற்கு உட்பட்டே வந்துள்ளது. 1505 முதல் 1658 வரை போர்த்துக்கேயரும் 1658 முதல் 1796 வரை ஒல்லாந்தர்களும் 1796 முதல் 1948 பெப்ரவரி 04 ஆம் திகதி வரை ஆங்கிலேயர்களும் இலங்கையை ஆண்டு வந்துள்ளனர். இவ்வாறு இலங்கை பல்வேறு ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட போதிலும் அதில் பல அனுகூலங்களும் சேர்ந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இம்மண்ணை ஆக்கிரமித்த ஆதிக்க நாடுகள் இங்கிருந்த கனியங்களையும் செல்வ வளங்களையும் கொள்ளையடித்து தமது நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததோடு அவர்கள் பின்பற்றிவந்த மத சிந்தனைகளையும், கலாசாரத்தையும் இந்நாட்டு மக்கள்மீது திணிக்கவும் முயன்றுள்ளனர். அதேபோன்று அவர்களது செயற்பாடுகளால் நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதாரத் துறைகளில் பாரிய மாற்றங்களும் அபிவிருத்திகளும் ஏற்பட்டுள்ளதையும் மறுக்க முடியாது. இதில் ஆங்கிலேயரது செல்வாக்கு அலாதியானது.

வியாபார நோக்கில் இலங்கையை வந்தடைந்த அரேபிய முஸ்லிம்கள் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் குடியேறி தமது குடியிருப்புகளை அமைத்துக்கொண்டனர். ஏனெனில் அது அவர்களது வியாபார ஏற்றுமதி இறக்குமதிகளுக்கு ஏதுவாய் அமைந்ததனாலாகும். பிற்பட்ட காலங்களில் நாட்டில் உட்பிரவேசித்த அவர்கள் இலங்கைச் சமூகத்துடனும் நாட்டு மன்னர்களுடனும் நெருங்கிய ஆரோக்கியமான உறவை ஏற்படுத்திக் கொண்டனர். இதற்கு அம் முஸ்லிம்களிடம் இருந்த விசுவாச மனப்பான்மையும் நாணயமுமே காரணமாகும்.

இதனால் முஸ்லிம்கள் பல உயர்பதவிகளிலிருந்து நாட்டுக்காக பல சேவைகளையும் செய்திருக்கின்றார்கள். பிற நாடுகளுடன் இந்த அரேபிய முஸ்லிம்களுக்கிருந்த தொடர்பால் ஏற்றுமதி இறக்குமதியில் இலங்கை அபிவிருத்தியடைந்து வந்தது என்பது வரலாற்று உண்மை. இன, மத பேதங்கள் பாராது இலங்கை வாழ் மக்களுடன் சுமுகமான உறவைப் பேணிவந்தமை முக்கியமானதாகும்.

எனினும் ஆங்கிலேயர் இலங்கையை கையகப்படுத்தியதும் பல்கிப்பெருகியிருந்த முஸ்லிம்கள் பல்வேறு இன்னல்களுக்கும் முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. முஸ்லிம்களது உடைமைகளும் செல்வங்களும் அவர்களால் சூறையாடப்பட்டன. அரச உயர்பதவிகளில் இருந்த முஸ்லிம்கள் தூக்கி வீசப்பட்டனர். இதற்கெதிராக முஸ்லிம்கள் அன்றைய அரசர்களுடன் சேர்ந்து போரிட முயன்றபோது படுகொலை செய்யப்பட்டனர். முஸ்லிம்களோடு சிங்களவர்களும் தமிழர்களும் இந்த இன்னல்களை எதிர்கொண்டமையால் இயல்பாகவே அவர்களது உணர்வுகளில் சுதந்திரத்தாகம் ஏற்பட்டது. இதன்போது பல நாடுகள் பிரித்தானியாவின் ஆளுகைக்குட்பட்டிருந்தது. அங்கெல்லாம் ஆதிக்கவர்க்கத்திற்கெதிராக புரட்சிகள் வெடிக்கலாயின.

இந்திய சுதந்திரத்திற்கெதிராக மகாத்மா காந்தியின் தலைமையில் திரண்ட மக்கள் கூட்டம் பெரும் போராட்டத்தையே நடத்திக்கொண்டிருந்தது. ஆனால், சொல்லும் தரத்திற்கு இலங்கையில் அப்படியொரு பெரும்போராட்டம் வெடிக்கவில்லை. 1815 இல் பிரித்தானியப்படை கண்டியையும் தமது முழு ஆதிக்கத்திற்குள் கொண்டுவந்தது. கிறிஸ்தவ மிஷனரிகளூடாக மதப்பிரசாரத்தை முடுக்கிவிட்டது. எனவே முஸ்லிம், தமிழ், சிங்கள சமூகங்கள் தமது மதத்தையும் சமூகத்தையும் பாதுகாக்க வேண்டிய நிர்பந்த நிலைக்குள்ளாகின.

இதன் விளைவாக 1910 ஆம் ஆண்டளவில் மதப்புனருத்தாரண இயக்கங்கள் தோற்றம்பெற்றன. இதில் முஸ்லிம்கள் தமது தனித்துவத்தைப் பேணவேண்டுமென்பது மட்டுமன்றி இந்த நாட்டின் சுதந்திரத்தை நோக்காகக்கொண்டும் இயங்கத் துவங்கினர். பல்லாண்டுகளாக இலங்கையின் பூர்வ குடிகள் என்ற வகையில் முஸ்லிம்களுக்கும் இந்த சுதந்திரப் போராட்டத்தில் நாட்டம் வருவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லையே! எனவே ஆங்கிலேய ஆட்சியில் ஏற்பட்ட பொருளாதார சமூக மாற்றங்களால் முஸ்லிம்கள் மத்தியிலும் செல்வாக்குப்பெற்ற ஒரு குழு உருவானது. இவர்களில் வர்த்தகர்களும் கல்விமான்களும் செல்வந்தர்களும் அடங்கினர். இவர்கள் சமூகத்தின் இழிநிலைபற்றியும் இந்நாடு அடைந்திருக்கும் அவலநிலை பற்றியும் சிந்தித்து இந்நாட்டின் சுதந்திரத்தின்பால் ஏனைய சமூகங்களுடன் கைகோர்த்துச் செல்வதோடு தமது தனித்துவத்தைத் தற்காத்துக்கொள்ளவும் களத்தில் நின்று செயற்பட்டனர். இவர்களுள் அறிஞர் எம். சி. சித்திலெப்பை, வாப்புச்சி மரைக்கார் என்போர் முக்கியமானவர்கள்.

இவர்களது செயற்பாடுகளுக்கு உரமூட்டும் விதமாக எகிப்திலிருந்து ஆங்கிலேயரால் நாடுகடத்தப்பட்டு இலங்கை வந்துசேர்ந்த ஒராபி பாஷாவும் இந்தியாவிலிருந்து வந்த மாப்பிள்ளை லெப்பை ஆலிமும் மற்றும் யெமனைச் சேர்ந்த அப்துல்லாஹ் பின் உமர் அல்பரீப் அல்யமனியும் இணைந்துகொண்டனர். இத்தலைவர்கள் முஸ்லிம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி நாட்டின் சுதந்திரத்தின்பால் அவர்களை வழிநடாத்தினர்.

இந்தியாவில் அஹ்மத்கான், எகிப்தில் ஜமாலுத்தீன் ஆப்கானி மற்றும் இதுபோன்று ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் முஸ்லிம்கள் ஆங்கிலேயருக்கு எதிராக எடுத்த முயற்சிகளும் போராட்டங்களும் பல்வேறு அரபு மற்றும் ஆங்கில பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவரவே அறிஞர் சித்திலெப்பை அவற்றை இலங்கை முஸ்லிம்கள் படித்து உணர்வு பெறும் வகையில் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். இதற்காகவே அவர் 'ஞான தீபம்', 'முஸ்லிம் நேசன்' போன்ற பத்திரிகைகளையும் ஆரம்பித்தார்.

இதன் பின்பகுதியில் முஸ்லிம்களின் கல்விச்சீர்த்திருத்தத்திலும் சிந்தனை மாற்றத்திலும் செல்வாக்குச் செலுத்தி அவர்களை சுதந்திர தேசத்தின்பால் வழிநடாத்தியதில் T.P. ஜாயா, Sir. ராசிக் பரீத் மற்றும் டாக்டர் கலீல் ஆகியோர் முக்கியமானவர்கள். 1915 ஆண்டு கம்பளைக் கலவரத்தின் பின்னர் அரசியல் இயக்கங்கள் தோற்றம் பெற ஆரம்பித்தன. அந்த வகையில் 1922 இல் Sir ராசிக் பரீதின் தலைமையில் 'இலங்கை சோனகர் சங்கம்' ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 1924 இல் 'முஸ்லிம் இளைஞர் லீக்' நிறுவப்பட்டு இயங்கியது. இவ் இயக்கங்கள் இலங்கை மக்களால் ஆளப்படக்கூடிய ஒரு சுய ஆட்சியை உடைய சுதந்திர அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்பதனை நோக்காகக் கொண்டே அமைந்திருந்தன. 1927 இல் இவர்களோடு பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் இணைந்து செயற்பட்டார்.

அதுமட்டுமன்றி 'சுதந்திர இலங்கை' என்ற மசோதா முன்வைக்கப்பட்டபோது முஸ்லிம்கள் அதற்கு கூடுதல் ஆதரவு வழங்கியிருப்பது இங்கு ஈன்று குறிப்பிடத்தக்கது. இம்மசோதாவின் அறிமுக உரையில் D.S.சேனாநாயக்க கூறிய கருத்தை இங்கு ஞாபகப்படுத்துவது சாலச் சிறந்தது என நினைக்கின்றேன்.

தமிழ் நண்பர்களாகிய உங்களிடம் ஒரே ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். நீங்கள் லண்டனிலிருந்து ஆட்சி செய்யப்பட விரும்புகிறீர்களா? அல்லது இலங்கையராலேயே ஆளப்படுவதற்கு உதவுவீர்களா? முஸ்லிம் சகோதரர்களைப் பற்றிக் கூறுவதாயின் அவர்களது நிதானமான போக்கைக் கண்டு நாம் அனைவரும் பாராட்டுகின்றோம். சிங்கள அடக்குமுறை என்ற ஒரு கட்டுக்கதையை அவர்கள் கூறவில்லை. அவர்களது தேவையைப் பூர்த்தி செய்ய நாம் முனைகின்றோம் என்று முஸ்லிம்களை விளித்துப் பேசினார். அம்மசோதாவை சபையிலிருந்த T.P.ஜாயா, Sir ராசிக் பரீத் மற்றுமொருவரும் ஆதரவளித்தனர்.

இதுபற்றி T.P.ஜாயா அவர்கள் ஆற்றிய உரை முஸ்லிம்கள் எந்தளவு இந்நாட்டின் சுதந்திரத்திற்கு பங்காற்றி உள்ளார்கள் என்பதைப் படம்போட்டுக் காட்டுகின்றது. அவர் தனது உரையில் நான் இங்கு சிறுபான்மை சமூகத்திற்கு இழைக்கப்பட்ட அநீதி பற்றியோ அல்லது பெரும்பான்மை இனத்தின் வெற்றிபற்றியோ கூற முன்வரவில்லை. இச்சபையிலுள்ள முஸ்லிம் அங்கத்தவர்கள் மசோதாவை ஆதரிப்பதற்கான ஒரே காரணத்தைக்கூற விரும்புகின்றேன். இந்த நாடு சுதந்திரமடைய எமது சமூகத்திற்குக் கிடைக்கவிருக்கும் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் நாம் தியாகம் செய்யத் தயாராயுள்ளோம். நான் இதனை முழு முஸ்லிம் சமூகத்தின் ஆதரவுடன் அவர்கள் சார்பாக நின்று கூறுகின்றேன்'' என்றார். பின்பு இதனையே ஆதரித்து Sir ராசிக் பரீதும் உரையாற்றினார்.

இதன்பின்பு 1948 ஆம் ஆண்டு இலங்கை மண் பூரண சுதந்திரம் பெறும் வரை ஏற்பட்ட ஒவ்வொரு அரசியல் மாற்றத்திலும் பேச்சுவார்த்தைகளிலும் ஒப்பந்தங்களிலும் யாப்புச் சீர்த்திருத்தங்களிலும் முஸ்லிம்களின் பங்களிப்பும் குவிந்து காணப்படுகின்றது. வரலாற்றை ஆராயும்போது இதுவே நிதர்சனமாகவும் விளங்குகின்றது.

# இலங்கையின் தேசிய கீதம்

## சில வரலாற்றுக் குறிப்புக்கள்

ஒரு நாட்டின் தேசிய உணர்வை பிரதிபலிக்கும் வகையிலேயே தேசிய கீதங்கள் அமைகின்றன. தேசிய கீதம் என்பது ஒரு நாட்டுக்கு மிகவும் முக்கியமானதாகும்.

இலங்கையின் தேசிய கீதம் பற்றித் தேடிப்பார்க்கையில், இலங்கையில் பல தேசிய கீதங்கள் பயன்பாட்டில் இருந்து வந்துள்ளதை அவதானிக்கலாம்.

இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி நிலவிய காலத்தில், பிரித்தானியாவுக்காகப் பாடப்பட்ட ஒரு பாடலும் தேசிய கீதமாகப் பாடப்பட்டு வந்துள்ளது. 1745 இல் இலங்கை பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு பாடலும் தேசிய கீதமாகப் பாடப்பட்டு வந்துள்ளது.

அத்தோடு, பௌத்த பிக்குகளும் தேசப்பற்றுள்ளோரும் எழுதிய பல பாடல்களும் தேசிய கீதமாகப் பாடப்பட்டு வந்துள்ளன. இந்த வகையில், திபெத் இனத்தவரான எஸ். மஹிந்த தேரர் எழுதிய 'தின தினே தினே சிரிலக ஜாதிக ஆலே' என்ற பாடல் முக்கியமானதாகும்.

இலங்கை பிரித்தானியர் ஆட்சியின் கீழ் இருந்தபோது, பிரித்தானிய தேசிய கீதத்தின் தாளத்திற்கேற்ப ஜே.பீ. வெலிவிட என்பவர் 1937 இல் எழுதிய பாடலொன்றும் தேசிய கீதமாகப் பாடப்பட்டுள்ளது. எம்.ஜி. பெரேரா என்பவர் எழுதிய பாடலொன்றும் இக்காலப் பகுதியில் தேசிய கீதமாகப் பாடப்பட்டு வந்துள்ளது.

டி.எஸ். முனசிங்க என்பவர் எழுதி டி. சூரியசேன என்பவர் இசையமைத்த பாடலொன்றும் 1943 இல் இலங்கையின் தேசிய ஒன்றுகூடல்களில் தேசிய கீதமாகப் பாடப்பட்டு வந்துள்ளது. 1946 இல் ஆனந்த சமரகோன் எழுதிய 'நமோ நமோ மாதா...' என்ற பாடலும் தேசிய கீதமாகப் பாடப்பட்டுள்ளது.

இலங்கையின் தேசிய கீதம் குறித்த வரலாற்றை நோக்குகையில், 1948 க்கு முற்பட்ட காலப் பகுதியில் தேசிய உணர்வை ஊற்றெடுக்கச் செய்யும் பல பாடல்கள் தேசிய கீதமாகப் பாடப்பட்டு வந்துள்ளதை அவதானிக்கலாம்.

இலங்கைக்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக உழைத்த தேசத் தலைவர்கள் நாட்டுக்கு நிலையான ஒரு தேசிய கீதத்தின் தேவையை உணர்ந்து 1948 ஜனவரி 31 இல் தேசிய கீதத்துக்கான ஒரு போட்டியை ஏற்பாடு செய்தனர்.

இந்தப் போட்டியின் இறுதியில், பி.பீ. இலங்கசிங்க எழுதிய 'லங்கா மாதா... யஸ மஹிமா', ஆனந்த சமரகோன் எழுதிய 'நமோ நமோ மாதா' ஆகிய பாடல்களுக்கிடையில் பலத்த போட்டியொன்று நிலவியது. இறுதியில், பி.பீ. இலங்கசிங்க எழுதிய பாடல்தான் வெற்றி பெற்ற பாடலாகத் தெரிவு செய்யப்பட்டது.

இந்தப் பாடலுக்கு லயனல் எதிரிசிங்க என்பவர் இசையமைத்திருந்தார். வெற்றி பெற்ற இந்த பாடலுக்காக பணப் பரிசும் வழங்கப்பட்டது. பின்னர், 1948 பெப்ரவி 4 ஆம் திகதி நிகழ்ந்த முதலாவது சுதந்திர தினத்தில் இந்தப் பாடல் பாடப்பட்டது.

தேசிய கீதத்துக்காக பாடல்களை தெரிவு செய்யும் குழுவில், இந்தப் பாடலை எழுதியவரும் அதற்கு இசையமைத்தவரும் உள்ளடக்கப்பட்டிருந்ததால், இந்தத் தெரிவு பக்கச்சார்பானது என்ற குற்றச்சாட்டு அக்காலத்தில் எழுந்தது.

இந்தக் குற்றச்சாட்டுக்கமைய, இந்தப் பாடலை தேசிய கீதமாகப் பாடுவதில் சிக்கல்கள் ஏற்பட்டன. பின்னர், 1949 இல் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வில் ஆனந்த சமரகோன் எழுதிய 'நமோ நமோ மாதா...' பாடல் பாடப்பட்டது. ஆயினும், இந்தப் பாடலுக்கும் எதிர்ப்புக்கள் கிளம்பின.

1950 இல் தேசிய கொடி உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டபோதும், தேசிய கீதம் குறித்து எந்தவொரு உத்தியோகபூர்வ நிலைப்பாடுகளும் எடுக்கப்படவில்லை. எனவே, இந்தப் பாடலை தேசிய கீதமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஜே.ஆர். ஜயவர்தன அமைச்சரவையில் ஒரு பிரேரணையை முன்வைத்தார்.

இந்தப் பாடலிலுள்ள சில வரிகளை நீக்கி மீண்டும் செம்மைப்படுத்தித் தருமாறு, ஆனந்த சமரகோனிடம் ஒலிவர் குணதிலக 1951 இல் வேண்டிக் கொண்டார். அதன்படி, சில வரிகள் நீக்கப்பட்டு மீண்டும் தேசிய கீதம் செம்மைப்படுத்தப்பட்டது. பின்னர், 1951 நவம்பர் 22 இல் அமைச்சரவை இந்தப் பாடலை தேசிய கீதமாக ஏற்றுக் கொண்டது.

'நமோ நமோ மாதா...' என்ற இந்தப் பாடல் தேசிய கீதமாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாக 1952 மார்ச் 12ஆம் திகதி பத்திரிகை விளம்பரம் மூலம் அறிவிக்கப்பட்டது. இந்தப் பாடலையும் தேசிய கீதமாகப் பாடுவதில் பல்வேறு சிக்கல்கள் எழுந்தன.

எவ்வாறாயினும், 1961 பெப்ரவரி மாதம் ஆனந்த சமரகோனுக்கு தெரியாமலேயே இந்தத் தேசிய கீதத்தில் 'சிறீ லங்கா மாதா அப சிறீ லங்கா...' என்ற வரிகள் இணைக்கப்பட்டன. இன்று வரை இந்தப் பாடலே தேசிய கீதமாகப் பாடப்பட்டு வருகின்றது.

நன்றி: மவ்பிம

தமிழில்: அஷ்கர் தஸ்லீம்





நவமணி






# நான் ஒரு பறவையானால்



- நான் ஒரு பறவையானால் கீச்சிட்டுக் கொண்டு வானில் பறப்பேன்
- நான் எழிலான கூடுகட்டி சுகமாக வாழ்வேன்
- நான் என் நண்பர்களோடு சந்தோசமாக அலைந்து திரிவேன்
- முட்டை இட்டு அடைகாத்து குஞ்சு பொரித்து சந்தோசமாக வாழ்வேன்.
- காலையில் எழும்பி இரை தேடச் சென்று மாலையில் கூட்டிற்குச் செல்வேன்.
- நான் சோம்பல் இல்லாமல் எறும்புகளைப் போன்று சுறுசுறுப் பாக இருப்பேன்.

**எம்.எம். சிபா தரம் - 05**
**கஹட்டோவிட்ட முஸ்லிம் பாலிகா வித்தியாலயம்**

# சுதந்திர திருநாள்!



நமது சுதந்திரத்திருநாள் இது
நவிலுரும் இன்பப் பெருநாள்
அறமது வழியிலே சுதந்திரம் நாம்
அடைந்த தெனும் பெரும் ஒளிநாள்!

அடிமைத் தளையைப் போக்கி ஆண்ட
அந்நிய ஆட்சியை நீக்கி
குடிமை சமைத்த நிலையில் இன்று
கூடி உழைத்தே உயர்வோம்

அடைந்த சுதந்திரம் அதனை நாம்
ஆருயிர் போன்றே காப்போம்
இடைவெளி என்பதை அகற்றிநாம்
இணைந்தே புகழைக் காப்போம்!

- அஸ்மா பாரிஸ்

# தெரிந்து கொள்வோம்

- ஐக்கிய நாடுகள் சபை 1945 அக்டோபர் 24ல் தொடங்கப்பட்டது.
- விமானம் பறக்கும் உயரத்தை அள்க்க உதவும் கருவியின் பெயர் ஆல்டி மீட்டர்.
- உலகிலேயே அதிக வயதில் பிரதமர் ஆனவர், மொகரார்ஜி தேசாய். இவர் 1977ல் மார்ச் 24ல் பதவி ஏற்றபோது வயது 81.
- பூனையின் கண்பார்வை மனிதனைவிட எட்டு மடங்கு கூர்மையானது.

# நம்பிக்கை தரும் வரிகள்



★ உருக்கப்படும் தங்கம்தான் உரு மாறி நகையாகிறது!

★ அறுக்கப்படும் மரம்தான் அழகான ஜன்னலாகிறது!

★ இடிக்கப்படும் நெல்தான் உமி நீங்கி அரிசியாகிறது!

★ ஏற்றப்படும் விளக்குதான் இருள் நீக்கி ஒளி தருகிறது!

★ தட்டப்படும் தந்திதான் தம்புராவில் இசை தருகிறது!

★ செதுக்கப்படும் பளிங்குதான் செம்மை பெற்றுச் சிலையாகிறது!

★ பதப்படுத்தப்படும் தோல் தான் பயனுள்ள காலணியாகிறது!

★ மிதிக்கப்படும் மண் தான் மிருதுவான பானையாகிறது!

★ புதைக்கப்படும் விதை தான் மண்ணை விட்டு மரமாக எழுகிறது!

# மலரும் மொட்டு



ா , ர , பா
ச் ர் . ா , பா ா
ா ா ம்ப ப் பு
முஹம்மது ரஷீத் ா
27. 1.2 17
ா
ா டா ார். ர ம் ா,
ாப்பா, பாட்ட , பாட் ற் ம் ற் ார்
ர் ம்
பற் ா ா ர்.
(தகவல் - ரிழ்வான்)

# கல்விச் செல்வம்

வெள்ளத்தால் அழியாத
வெண்தனலால் எரியாத
காற்றில் பறக்காத
கள்வரால் கவரப்படாத
எதிரியால் அழியாத
கொடுத்தாலும் குறையாத
வழங்க வழங்க வளர்ந்திடும்
கற்கக் கற்க பெருகிடும்
பெரும் செல்வம் கல்வியே!

**மொஹமட் உமர்**
**தரம் - 07 ஹூடா கல்லூரி**



# தண்டனை



தன் பேரன் சிறு சிறு தவறுகள் செய்யும் போதெல்லாம் ஒருவர் கடுமையான தண்டனைகள் கொடுத்து வந்தார். சிறுவனின் தகப்பனாரால் தன் தகப்பனாரை கண்டிக்க முடியவில்லை. சிறுவனின் நன்மைக்காகத்தான் தண்டனைகள் கொடுப்பதாக பெரியவர் கூறிவிடுவார்.

ஒரு நாள் பெரியவர், சிறுவனுக்கு பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். சிறுவன் சரியாகக் கவனிக்கவில்லை என்று கோபம் கொண்டு சிறுவனை கடும் பனியில் நிறுத்தி விட்டார். சிறுவன் நடுங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்த தகப்பனால் தாங்க முடியவில்லை.பெரியவரையும் ஒன்றும் கேட்கவும் முடியாத சூழ் நிலையில் சடசடவென தன் சட்டையைக் கழட்டினார். வெளியே சென்று பனியில் தன் பையனுடன் சேர்ந்து நின்றார். பெரியவர், ''நீ ஏன் குளிரில் நிற்கிறாய்?'' என்று கேட்டார். அவர் உடனே பதில் சொன்னார், ''தந்தையே!நீங்கள் என் மகனை குளிரில் நடுங்க வைத்து சிரமப்படுத்துகிறீர்கள். பதிலுக்கு நான் என்ன செய்ய முடியும்? உங்கள் மகனைக் குளிரில் நடுங்க வைத்து சிரமப்படுத்துகிறேன்.''

இருவரையும் உள்ளே வரச் சொன்ன பெரியவர் அதன் பின் பேரனைக் கண்டிப்பதை நிறுத்தி விட்டார்.

பூக்களாக இருக்காதே
உதிர்ந்து விடுவாய்
செடிகளாக இரு
அப்போதுதான்
பூத்து கொண்டே இருப்பாய்
- விவேகானந்தர்

சுங்காவில் முஸ்லிம் மகா வித்தியாலய பழைய மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பரிசளிப்பு வைபவம் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் என்.ஏ.ஏ. நாஸர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. மீலாத் விழாவில் வெற்றி பெற்ற எஸ். ரசீதா 1ஆம் இடம், ஆர்.எப். ரீமா 2ஆம் இடம் ஏ.எச்.எம். தன்ஸீம் 3ஆம் இடம் பெற்ற மாணவர்களை படத்தில் காணலாம்.

**பொலன்னறுவை நிருபர்**
**ஏ. றபீக்**



# ஒரு கடிதம்

'கனடாவில் தமிழ் மாதம்' என்ற 'கலை'யின் பத்தியைப் படித்த போது முன்னாள் இந்து கலாசார பண்பாட்டலுவல்கள் அமைச்சராக விருந்த சொல்லின் செல்வர் செ. இராஜதுரையின் கூற்று ஒன்று ஞாபகத்துக்கு வந்தது.

கனடாவில் தமிழ் மாதம் என்ற பத்தியில் சிரித்திரன் பத்திரிகையில் மகுடியின் கேள்வி - பதில் ஒன்றும் பிரசுரமாகியிருந்தது. படித்த தமிழனுக்கும் படித்த சிங்களவருக்கும் என்ன வித்தியாசம் என்ற அந்தக் கேள்விக்கு மகுடி சுந்தர் இவ்வாறு பதில் அளித்தார்.

படித்த தமிழரின் கையில் ஆங்கிலப் பத்திரிகை இருக்கும் படித்த சிங்களவர் கையில் சிங்களப் பத்திரிகை இருக்கும்.

இக்கருத்தையே சற்று வித்தியாசமாக கால் நூற்றாண்டுக்கு முன்னர் செல்லையா ராஜதுரை மேடையில் வைத்துக் கூறினார்.

கொழும்பில் பிரபல ஹோட்டலொன்றில் ஒரு விழா! பிரபல வர்த்தகர், தமிழ்த் தொண்டாளர், பி.ரி. தெய்வ நாயகம் பிள்ளைக்கு சமாதான நீதவான் பதவி கிடைத்ததையொட்டி ஒரு பாராட்டு விழா. இந்து கலாசார அமைச்சின் ஏற்பாடு இது. விழாத்தலைவர் அமைச்சர் சொல்லின் செல்வர் செ. இராசதுரை. இன்று 'உலக அறிவிப்பாளர்' என்று அழைக்கப்படும் 'மதுரக்குரல் மன்னன்' பி.எச். அப்துல் ஹமீத்தான் நிகழ்ச்சித் தொகுப்பாளர்.

இந்த விழாவில் பேசிய அமைச்சர் செ. இராஜதுரை இவ்வாறு கூறினார்.

தமிழரெல்லாம் தமிழ்ப் பத்திரிகையை கையில் வைத்துக் கொள்ள அஞ்சும் ஒரு கால கட்டத்திலும் முஸ்லிம் மக்களின் கைகளில் தமிழ்ப்பத்திரிகைதான் காணப்படும்.

தமிழர்களின் கைகளில் (ஒரு குறிப்பிட்ட) ஆங்கிலப் பத்திரிகைதான் காணப்படும்.

தமிழை உயிர் கொடுத்து வளர்ப்பவர்கள் முஸ்லிம்களே!'

**வானொலிக் கலைஞர்**
**எம்.எஸ்.எம். ஜின்னா**
**கொழும்பு**




# ஜீவ நதி 100ஆம் இதழ்

ஞானத்தின் 200ஆவது இதழை(மலர்) பற்றி எழுதிய பேனா மை உலருமுன்னரே மற்றொரு மலரும் வெளிவந்திருக்கிறது. இம்மலர் 100ஆவது மலர் யாழ். நகரிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் ஜீவநதி என்ற கலை, இலக்கிய மாசிகைதான் அது.

பரணீதரனின் அயராத(விடா) முயற்சியின் காரணமாகவே ஜீவநதி நூறாவது மலரை எட்டியிருக்கிறது. இது ஒரு சாதனை எனில் அதில் ஐயமில்லை!

இவ் இதழ் ஈழத்துப் பெண் எழுத்தாளர்களின் சிறப்பிதழாக வெளிவந்திருக்கிறது.

கனதியான இம்மலரில் கிட்டத்தட்ட 100 பெண் எழுத்தாளர்கள் இடம் பெற்றுள்ளார்கள். எப்படித்தான் தேடிப் பிடித்தாரோ ஆசிரியர் தெரியாது.



பெண் ஆளுமைகள் பற்றிய கட்டுரைகளில் பெண் எழுத்தாளர்கள் 90 பேர் இடம் பெற்றுள்ளார்கள்.

ஒன்று மட்டும் உண்மை. முன்னரைப் போல் தமிழ் இதழ்கள், சஞ்சிகைகள் குறைப்பிரசவத்தில், இளம் வயதில் இனி நின்றுவிடப்போவதில்லை. நீண்ட காலம் தொடரும். உதாரணம் ஞானம், ஜீவநதி

# கல்யாணச் சாப்பாடும் கரும் பசியும்



'கல்யாண சமையல் சாதம் காய்கறிகளும் பிரமாதம் அந்த கௌரவப் பிரசாதம் இதுவே எனக்குப் போதும்'

மாயா பஜார் என்ற மகோன்னத திரப்படத்தில் கடோத்கஜன் ரங்கராவ் (குரல்: திருச்சிலோக நாதன்) பாடும் இப்பாடல்தான் ஞாபத்துக்கு வரும் திருமண வைபவங்களுக்குச் செல்லும் போது. ஆனால் பாடலோ சைவம் நான் சொல்வதோ பெரும்பாலும் அசைவச் சாப்பாடு! முஸ்லிம்களின் திருமணம்!

ஒரு திருமண வைபவத்துக்குச் சென்றிருந்தேன். அழைப்பிதழில் குறிப்பிட்டிருந்தது போல் பி.ப. 7.00 மணிக்கே சென்று விட்டேன். ஆறுபேர் அமர்ந்திருக்கக் கூடிய வட்ட மேசை அருகிலேயே என்னை அமர்த்திவிட்டார்கள். எட்டு மணி... எட்டரை மணி... கொஞ்சம் கொஞ்சமாக மண்டபம் நிறைந்துவிட்டது. ஆனால்... ஆனால் பிரதான உணவு (சோறு) தவிர்ந்த ஏனைய உப உணவு வகையறாக்கள் அனைத்தும் கொஞ்சம் கொஞ்சமாக மேசையை ஆக்கிரமித்துக் கொண்டன. இறைச்சிக்கறியும் இன்னும் வந்தபாடில்லை. பசி வயிற்றைக் கிள்ளியது. மேசையில் இருந்த குளிர்பானத்தைப் பருகினேன். வட்டிலாப்பம் எனைப் பார்த்து பல்லை இளித்தது. நாக்கில் ஜலம் ஊற 'ஏ வட்டிலாப்பமே! அவசரப்படாதே... கொஞ்சம் பொறுமையாக இரு' என்று போலியாகக் கூறிவிட்டு அருகிலிருந்த நண்பர்களுடன் அரட்டையடிக்க ஆரம்பித்தேன். ஏனைய மேசைகளைச் சுற்றி நோட்டமிட்டேன். சில மேசைகளில் சிலர் உப உணவுகளைக் கொறித்துக் கொண்டிருந்தார்கள். பாவம்!

என் அருகில் இந்த நாட்டின் பிரபல அரசியல் கட்சியொன்றின் 'போலிட்பீரோ' உறுப்பினர் ஒருவர் அமர்ந்திருந்தார். இவ்வாறு மேசையைச் சுற்றி முக்கிய பிரமுகர்கள்தான் பெரும்பாலானோர் கறுப்பு கோட் சூட்டுடன்தான்... நான் வெறும் லோங்ஸும் ஷேட்டும்தான்!

நேரம் 9.20...

அரட்டை தொடர்கிறது. அது கவலை தோய்ந்த அரட்டை. ஆனால் ஹாஸ்ய வடிவில் எதிரொலிக்கிறது.

ஒருவர் கூறுகிறார்.

'எம்மவர் திருமணங்கள் ஏன் தான் இந்தக்கேடோ இரவுச் சாப்பாடு பத்து மணிக்கு, பகல் சாப்பாடு இரண்டரை மணிக்கு ஆனால் அழைப்பிதழில் 12.30 அல்லது பி.ப. 7.00 மணி என்று போட்டுவிடுகிறார்கள்'

மற்றொருவர் தொடர்ந்தார்.

'சீனிநோய்க்காரன் வர்ரான். பில்ஸ் பாவிக்கிறவன் வர்ரான். நேரத்தோட சாப்பிட்டு பழக்கப் பட்டவன் வர்ரான். இன்ஸுலின் இஞ்செக்ஷன் போடுறவன் வர்ரான். அவனையெல்லாம் கூப்பிட்டுவிட்டு பத்து மணிக்கு சாப்பாடு வைச்சா எப்படி...'

இடது கைக் கதிரை நண்பர் இவ்வாறு கூறினார்.

'சீனிக்காரனுக்கென்று தனி ரூம் தனி மேசை ஒதுக்கினால் என்ன? அவர்கள் நேர காலத்துடன் சாப்பிட்டுச் செல்லலாம்தானே!

அரசில்வாதியின் மகன் குறுக்கிட்டார். 'அதெல்லாம் தப்பு. அப்படியெல்லாம் ஒதுக்கக்கூடாது...'

'ஏனாம்???'

'வாரவனெல்லாம் சீனி வியாதின்னு சொல்லிக் கொண்டு அந்த மேசைக்கே போயிருவான்'

கல்யாண மண்டபம் 'கலகல' வென்று குலுங்குகிறது.

இடையில் என் குறுக்கீடு 'சோறெல்லாம் நேரகாலத்தோட சமைத்து இருப்பாங்க தானே...'

'அதிலென்ன சந்தேகம்?'

'அப்ப ஏன் லேட்டாக்கிறாங்க... கடைசியாகக் கொண்டு வர்ராங்க. தோசைன்னாத்தான் சுடச்சுடப் போட்டு கொடுக்க வேணும். இது சோறுதானே!'

மீண்டும் கல்யாண மண்டபம் கலகலப்புக் கட்டுகிறது.

ஏனைய விருந்தாளிகள் அமர்ந்திருந்த சில மேசைகளை நோட்டமிடுகிறேன். சிலர் பிரதான கறியை (கோழி) எடுத்து தங்களது பீங்கானில் வைத்துக் கொண்டு சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இதே மேசையில் அமர்ந்திருக்கும் வேறு சிலர், அந்தக் கறியையும் தொடாமல் மௌனமாக அமர்ந்திருந்தனர். ஒரு கறி பிளேட்டில் ஆறு பீஸ் கோழித் துண்டுகள் வைக்கப்பட்டிருக்கும்.

சிலர் கோழிக்கறியை ருசித்துச் சாப்பிடுவதையும் சிலர் பேசாது வாய் மூடி மௌனியாக அமர்ந்திருப்பதையும் பார்க்கும் போது தர்மசங்கடமாகவும் வெட்கமாகவும் இருந்தது.

தங்கள் தங்கள் வீடுகளில் ஏழு மணிக்கும் எட்டு மணிக்கும் எட்டரை மணிக்கும் சாப்பிடுபவர்களெல்லாம் கல்யாண மண்டபத்தில் வாயைச் சப்புக் கொட்டியபடி அமர்ந்திருந்தனர். குஞ்சுக் குறுமான்களுக்கும் இதேநிலைதான்.

வயிற்று நெருப்பு(படகினி) பொசுக்கியது. இன்னும் சாதம் வந்த பாடில்லை. கைக்கடிகாரத்தைப் பார்க்கின்றேன்.

9.23...

இன்னும் ஏழு நிமிடங்களுக்குள் பஸ்ஸைப்பிடித்து மருதானை செல்ல வேண்டும். ஏனென்றால், அளுத்கமையை நோக்கிச் செல்லும் இரவு கடைசிப் புகைவண்டி மருதானையிலிருந்து மிகச் சரியாக 9.30க்குப் பறப்பட்டு விடும். அதை விட்டால் அதேகதிதான். தையாத்தக்கதான். அப்புகைவண்டி சரியாக ஒரு மணித்தியாலத்தில் பாணந்துறையைச் சென்றடைந்துவிடும். காலி வீதியில் ஓடுகின்ற பஸ்களில் ஏறினாலோ சரியாக இரண்டு மணித்தியாலம் தேவை. பாணந்துறையைச் சென்றடைய. பதினொரு மணிக்குப் பின்னர் பாணந்துறையிலிருந்து உள்ளூர்களுக்கு பஸ்ஸில்லை. ஒரு 'திரீவீலர்' தான் பிடிக்க வேண்டும். அதற்கு 150 ரூபாய். அழ வேண்டும். இவையெல்லாம் என் சிந்தனையில் புகுந்து என்னை சின்னா பின்னப்படுத்தின.

நான் இருந்த மேசையிலிருந்து ஓர் ஐயக்குரல்... 'இந்த ஹோல் பிரமாதமாக இருக்கே! யாருடையது?' இவ்வேளையில் இக்கேள்வி அவசியமா? பதிலொன்று வெடிக்கிறது.

'நம்ம ஆள்டதானாம்'

'பயங்கர ரேட்டாக இருக்குமே! சாப்பாட்டுக்கு எவ்வளவாம்...'

'ஒரு தலைக்கு 3000 மோ 3500 ஓ என்று கேள்விப்பட்டேன்'

'அட ஆண்டவா...?'

இனியென்னால் பொறுக்க முடியவில்லை. நான் வீடு போய்ச் சேர வேண்டும்.

எனக்கு அருகிலிருந்த அரசியல்வாதியிடம் கூறுகிறேன். ரகசியமாக...

'கல்யாண வீட்டுக்காரர் அருகில் வந்தால் சொல்லிவிடாதீர்கள். நான் இங்கிருந்து வெளியேறுகிறேன்'

'சாப்பாடு...'

'தேவையில்லை.' சாப்பாட்டுக்காக நின்றால் நான் வீடு போய்ச் சேர்ந்த மாதிரித்தான். அப்படி வீடு போவதென்றாலும் நிறையப்பணம் தேவையாகும். அதெல்லாம் கட்டுப்படியாகாது. நான் வர்ரேன். பிளீஸ்... சொல்லிடாதேங்கோ...'

அவரது பதிலுக்குக் கூடக்காத்திராமல் மண்டபத்தை விட்டு வேகம் வேகமாக வெளியேறினேன். பஸ் கிடைக்காததால் நடந்து பஞ்சிகாவத்தை சந்தியை அடைந்தேன். புறக்கோட்டையை நோக்கிச் செல்லும் பஸ்ஸில் ஏறினேன். காலி பஸ்ஸொன்று தயாராய் நின்றது. ஏறினேன். பாணந்துறையை வந்தடைந்தேன். நேரம் 11.45 . எனதூரை நோக்கிட பஸ் ஏதுமில்லை. 'திரீவீலர்' ஒன்றில் ஏறினேன். வீட்டை அடைந்து முன் கதவைத் தட்டினேன். புன்னகையுடன் மனைவி திறந்தாள்

'கல்யாணச் சாப்பாடெல்லாம் எப்படி?'

நான் 'பிரமாதம்' என்று தலையாட்டினேன்.

**- மன்னிநகர் கலீல்**

# நிகழ்வுகள்

## விழிப்புணர்வுக் கூட்டம்

(குருநாகல் இக்பால் அலி)

ராயிதது அஹ்லிஸ் சுன்னாவின் ஏற்பாட்டில் ஐ.எஸ் தீவிரவாதிகள் பற்றிய விழிப்புணர்வு மாநாடு வெள்ளிக்கிழமை(03) பி.ப. 6.00 மணி முதல் 10.00 மணி வரை காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் கலாசார மண்டத்தில் இடம்பெறவுள்ளது.

ஐ.எஸ். தோற்றமும் வளர்ச்சியும், இஸ்லாமும் தீவிர வாதமும், இஸ்லாத்தின் பார்வையில் ஐ.எஸ். தொடர்பான சந்தேகங்களும் பதில்களும் என்னும் நான்கு தலைப்புகளில் இலங்கையிலுள்ள தலைசிறந்த உலமாக்கள் உரையாற்றவுள்ளனர்.

## விளையாட்டுப்போட்டி

(வத்துகாமம் நிருபர்)

வத்துகாமம் கல்வி வலயத்திலுள்ள பல்லேகலை வாணி தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி 5ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பல்லேகலை கம்உதாவ மைதானத்தில் காலை 10 மணிக்கு வித்தியாலய அதிபர் கே. சந்திரமோகன் தலைமையில் இடம்பெறும் இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக கண்டி மாவட்டப்பாராளுமன்ற அங்கத்தவர் வேலு குமார் கலந்துகொள்வார். கௌரவ அதிதியாக மத்திய மாகாண அவைத்தலைவர் து.மதியுகராஜாவும் விசேட அதிதியாக வத்துகாமம் வலய கல்விப் பணிப்பாளர் ஹேமாகுமாரி விஜேரத்னவும் கலந்துகொள்வர். வத்துகாமம் தமிழ் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ் நிதிராஜாவும் இதில் கலந்து சிறப்பிக்க உள்ளதாக அதிபர் தெரிவித்தார்.

## சுதந்திர தின விழா

கொழும்பு கிரேண்ட்பாஸில் இயங்கும் ஐ.ஆர்.எஸ் அமைப்பு ஏற்பாடு செய்துள்ள சுதந்திர தின விழா, 4 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு கொழும்பு 14, ஸ்டேஸ் வீதி விஜயபா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பன்னிரெண்டு வருடங்களுக்கும் மேலாக கொழும்பு பிரதேசத்தில் வாழும் வறிய குடும்பங்களின் பிள்ளைகளுக்கு பாட சாலை அப்பியாசப் புத்தகங்கள், உபகரணங்களை மேற்படி அமைப்பு வழங்கி வருவதோடு கல்வித்துறையிலே திறமைகளைக் காட்டிவரும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் திட்டங்களையும் செயற்படுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவிலே கல்வி மேம்பாட்டுக்காக அரும் சேவையாற்றிய பல ஆசிரியர்களும் கலைத்துறையிலே திறமைகளைக் காட்டிய பல கலைஞர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

## பரிசளிப்பு விழா

(மினுவாங்கொடை நிருபர்)

வெல்லம்பிட்டிய - தாருஸ்ஸலாம் அஹதிய்யாப் பாடசாலையின் 16 ஆவது வருட பரிசளிப்பு விழா வைபவம், (05) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு, கொழும்பு - மருதானை, டவர் மண்டபத்தில் அஹதிய்யாப் பாடசாலை அதிபர் மௌலவி ஸனீர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா மற்றும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்ளும் இந் நிகழ்வில், புரவலர் ஹாஷிம் உமர் கௌரவ அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளதுடன், வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கான சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

## சுதந்திரதின விழா

(எம்.எல்.எஸ். முஹம்மத் இரத்தினபுரி)

சுதந்திர தின விழாவினை முன்னிட்டு இரத்தினபுரி மாவட்டசெயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இரத்தினபுரி மாவட்ட சுதந்திரதினவிழா இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலனிலோகு போதாகம தலைமையில் சப்ரகமுவ மாகாண சபையின் ஒத்துழைப்புடன் 4ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இரத்தினபுரி ஸீவெலி விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

மேற்படி சுதந்திரதின விழாவில் சப்ரகமுவமாகாண சபைஆளுநர் ஜனாதிபதி சட்டத்தரணி மாஷல் பெரேரா பிரதம அதிதியாகவும் இரத்தினபுரி பிரதேச சர்வமதத் தலைவர்கள் மற்றும் சப்ரகமுவ மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரும் விஷேட அதிதிகளாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இலங்கை பாதுகாப்புப் படையினரின் அணிவகுப்புமரியாதை நிகழ்ச்சிகள் உட்பட இரத்தினபுரி பிரதேச பாடசாலை மாணவர்களின் கலாசார நிகழ்ச்சிகளும் இவ்விழாவில் இடம்பெறவுள்ளன.

## சொற்பொழிவு

(பேருவளை நிருபர்)

பேருவளை சீனன் கோட்டை கங்கானங்கொடை நூராணியா ஸாவியா மஸ்ஜிதுல் இஸ்லாமிய மார்க்கச்சொற்பொழிவு வெள்ளியன்று (03) இரவு இஷாத் தொழுகையின் பின்னர் நடைபெறும்.

வெலிகாமம் கப்புவத்தை ரிபாயிய்யா மகளிர் அரபுக்கல்லூரி அதிபரும் மார்க்க அறிஞருமான மௌலவி எம்.எஸ்.எம். அப்துல்லாஹ் விசேட சொற்பொழிவாற்றுவார். சீனன்கோட்டை வாலிபர் ஹழரா ஜமாஅத் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளது. மஃரிப் தொழுகையின் பின்னர் திக்ர் மஜ்லிஸ் இடம்பெறும்.

# சம்பந்தன் ஆட்சி காலத்திலேயே இனப்பிரச்சினைக்கு தீர்வு

## கிழக்கு முதலமைச்சர் நஸீர் அஹமட்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் காலத்திலேயே இனப்பிரச்சினைக்கான தீர்வு கிட்ட வேண்டும் என்பதே முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் அபிலாஷையாகும் என கிழக்கு முதலமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

புதனன்று ஏறாவூரில் ஜனாதிபதி தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட பல்வேறு நிகழ்வுகளில் பங்குகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெறுமனே அபிவிருத்தி மாத்திரம் எமது நோக்கமல்ல, அதற்குச் சமாந்தரமாக என்பதை விட எல்லாவற்றுக்கும் மேலாக நல்லாட்சியினூடாக நாட்டில் நிரந்தர அமைதி ஏற்பட வேண்டும் என்பதையே நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

சிறுபான்மை இனங்களின் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பேசப்பட்டாலும் இன்று வரை இலவு காத்த கிளிகள் போல் நாங்கள் ஏங்கித் தவிக்கின்றோம்.

நல்லாட்சியின் தூண்களாக இருக்கின்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடைய தலைவர் இரா. சம்பந்தன், மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் றவூப் ஹக்கீம் ஆகியோரின் பங்களிப்புடன் கிழக்கு மாகாண சபையிலும் நல்லாட்சி கோலோச்சுகிறது.

அதற்குச் சான்றாக இன பேதமில்லாது மக்கள் நன்மையடைந்து கொண்டிருக்கின்றனர்.கிழக்கு மாகாணத்தில் அனைவருக்கும் சுபீட்சமான வாழ்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதில் நாமெல்லோரும் திடசங்கற்பம் பூண்டிருக்கின்றோம்.

என்னதான் இடம்பெற்றாலும் இந்த நாட்டில் நல்லாட்சியைக் கொண்டு வருவதற்காக சிறுபான்மைச் சமூகங்கள் அளப்பரிய பங்களிப்பைச் செய்திருக்கின்றன.அதே சிறுபான்மைச் சமூகங்கள்தான் கடந்த 30 வருட காலம் இந்த நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக அதிக இழப்புக்களையும் சந்தித்தன.

இன்று வரை புரையோடிப்போய் இருக்கின்ற, இந்த நாட்டு மக்களைச் சீழித்த இனப்பிரச்சினைக்குரிய சரியான, நீதியான, நிரந்தரமான தீர்வு எட்டப்பட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் நாட்டின் பெரும்பான்மையினக் கட்சிகள் இரண்டும் இணைந்துள்ள இந்த நல்லாட்சியிலே இனிமேலும் மக்கள் போராடித்தான் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற துரதிருஷ்ட நிலைமைக்கு இனிமேலும் வழி சமைத்து விடக் கூடாது.

உண்மையான விடுதலையும், உரிமையும் பெற்று கௌரவத்துடனும் சம அந்தஸ்துடனும் வாழுகின்ற சிறுபான்மைச் சமூகமாக தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்து பங்காற்ற வேண்டும் என்று ஸ்ரீ.ல.மு.கா தலைவரிடம் நான் கருத்துத் தெரிவித்தபோது நிச்சயமாக தானும் அதனையே விரும்புவதாகவும் அத்தகையதொரு இணைவும் இணக்கப்பாடும் சிறுபான்மைச் சமூகங்களுக்கான அரசியல் தீர்வும் இரா. சம்பந்தன் காலத்திலே கிடைத்துவிட வேண்டும் என்பதில் தானும் அவாக் கொண்டுள்ளதாக அமைச்சர் ஹக்கீம் என்னிடம் மனமுவந்து சொன்னபோது அதனுடைய யதார்த்தத்தை நாங்கள் புரிந்து கொண்டோம்.

எனவே, இத்தகைய மன ஒருமைப்பாடு ஓர் ஆக்கபூர்வ அமைதிக்கும் சமாதானத்துக்கும் முரண்பாட்டுத் தீர்வுக்கும் வழி வகுக்கும் என்றார். அங்கு 1762 காணி அனுமதிப் பத்திரங்களும், 962 வீடுகளும், 10 ஆயிரம் மரக்கன்றுகளும், வீடுகள் திருத்தத்திற்கான பண உதவி, மற்றும் போதையொழிப்பு நிகழ்வு என்பன ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

## சொற்பொழிவு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அறிஞர் சித்திலெப்பையின் 120ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு சித்திலெப்பை ஆராய்ச்சி மன்றம் ஏற்பாடு செய்துள்ள பகிரங்கச் சொற்பொழிவு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு இடம்பெறும்.

தெஹிவளை களுபோவில எஸ்.டி. எஸ். ஜயசிங்க மாவத்தையில் 31/2ஆம் இலக்க இலங்கை முஸ்லிம் மாதர் மாநாட்டு மண்டபத்தில் களனிப்பல்கலைக்கழக மக்கள் தொடர்பாடல் பிரிவைச் சேர்ந்த பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாஸ உரையாற்றுவார்.

இலங்கையின் சுதந்திரப் போராட்டமும் சித்தி லெப்பையும் என்ற தலைப்பில் இவர் உரையாற்றவுள்ளார்.

## மாணவியின் சாதனை



பம்பலப்பிட்டி மகளிர் பெண்கள் கல்லூரியில் வர்த்தகப்பிரிவில் கல்வி பயின்ற மாணவி பாத்திமா அமானி அசாத் இம்முறை நடை பெற்ற ஜீ.சீ.ஈ. உயர்தரப்பரீட்சையில் பொருளாதாரம், வர்த்தக கற்கை, கணக்கியல் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில 4ஏ சித்தி பெற்று சாதனை படைத்துள்ளார்.

இவர், மஹரகம அசாத் பிளேஸில் வசிக்கும் முஹம்மது அசாத் பாத்திமா சிஹானா ஆகியோரின் மகளும் கட்டட நிர்மாணத்துறையில் தீன் பாஸ் மாமா என்றழைக்கப்படும் மர்ஹூம் ஏ.எல். ஜெய்னுல் ஆப்தீனின் பேத்தியும் முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் மற்றும் லண்டனில் வசிக்கும் டாக்டர் எம். ஹாரிஸ்டீன் ஆகியோரின் மருமகளுமாவார்.

# அபிலாசைகளை நிறைவேற்றும் ஆண்டாக மலரட்டும்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம்



நல்லாட்சி மலர்ந்துள்ள இலங்கைத் திருநாட்டில் சமாதானம், பன்மைத்துவம் மற்றும் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் ஆண்டாக இந்த வருடம் திகழவேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

சனிக்கிழமை கொண்டாடப்படும் இலங்கையின் 69ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் நல்லாட்சி மலர்வதற்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். அதிலும் குறிப்பாக சிறுபான்மை மக்களின் பங்களிப்பு கனதியானது. பிரதான இரு கட்சிகளினால் நடாத்தப்படும் நல்லாட்சியில் முஸ்லிம்களின் ஏகபிரதிநிதிக் கட்சியான முஸ்லிம் காங்கிரஸ் அங்கம் வகித்து வருகின்றது. இந்நிலையில் கடந்த ஆட்சி போலன்றி முஸ்லிம்கள் நல்லாட்சியில் நிம்மதிப் பெருமூச்சு விட்டுள்ளனர்.

நாட்டிலுள்ள சகல மக்களுக்கும் சம அந்தஸ்து வழங்கும் வகையிலும், மதங்களிடையே இணக்கப்பாட்டை எற்படுத்தும் வகையிலும், மக்களிடையே பரஸ்பரம், புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையிலும், சிறுபான்மை மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையிலும் நல்லாட்சி அரசாங்கம் தொடர்ந்தும் செயற்பட வேண்டும்.

இந்த நல்லாட்சி மீதான நம்பிக்கை சிறுபான்மையின மக்களுக்கு இன்னும் இருக்கிறது. அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்துவது இந்த அரசாங்கத்தின் தார்மீகப் பொறுப்பாகும். இலங்கையில் சகல பிரதேசங்களிலும் வாழ்கின்ற பல்லின சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இந்த நல்லாட்சியில் அனுபவிக்கின்ற உண்மையான சுதந்திரம் தொடர வேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

# பெரும்பான்மையுடன் இணைந்து சுதந்திர தினத்தைக் கொண்டாடுவோம்

## அமைச்சர் பைஸர் முஸ்தபா



இலங்கையின் 69 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாட்டு மக்கள் அனைவருக்கும் நல்லாசியை வேண்டிக்கொள்வதோடு, இந்த சுதந்திர தினத்தை சகல இனங்களுக்கு இடையிலும் தேசிய ஒற்றுமை என்ற ரீதியில் புரிந்துணர்வுடனும் பரஸ்பர நல்லெண்ணங்களுடனும் பயன்படுத்துமாறு வேண்டிக் கொள்கின்றேன் என, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா, இலங்கையின் 69 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இயங்கும் நல்லாட்சியில் சுதந்திர தினத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இலங்கைப் பிரஜைகளாகிய நாம், நமது தேசப்பற்றை வெளிப்படுத்துவதற்கான நாளாக இந்த சுதந்திர தினத்தைப் பயன்படுத்திக்கொள்ள முன்வர வேண்டும். நமது முஸ்லிம் சமூகமும் இந்த தேசப்பற்றை உணர்ந்து செயற்பட வேண்டும். சுதந்திர தினத்தைப் பெற்றெடுப்பதில் நமது முஸ்லிம் சமூகம் பாரிய பங்களிப்புக்களைச் செய்துள்ளது என்பதை யாரும் மறந்து விட முடியாது. இந்த பின்னணியில் இன்றும் கூட நமது முஸ்லிம் சமூகம் நாட்டுப்பற்றோடும் தேசிய உணர்வோடும் செயற்பட்டு வருகின்றனர்.

இன்று ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் தலைமையில் நாட்டில் பாரிய அபிவிருத்திப் பணிகள் இடம் பெற்று வருவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம் இதனை நமக்குக் கிடைத்துள்ள மற்றுமொரு வரப்பிரசாதமாகக் கருத முடியும்.

எங்களுக்கு இருக்கின்ற பிரதான பலம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் இரு கட்சிகளையும் இணைத்து, தேசிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தியதாகும். இது எமக்கு இன்றைய சுதந்திர தினத்தில் மற்றுமொரு பெரும் சக்தியாகும். என, அமைச்சர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.

# நிம்மதியாக வாழும் சூழ் நிலை தோன்றட்டும்

## அமைச்சர் றிஷாத் பதியுதீன்



நல்லாட்சி ஏற்பட்டு நாட்டிலே சமாதானமும், சகஜ வாழ்வும் தழைத்தோங்கியிருக்கும் சந்தர்ப்பத்தில் தொடர்ந்தும் அனைத்து இனங்களும் நிம்மதியாக வாழக்கூடிய நிரந்தரமான சூழல் ஏற்பட வேண்டும். அவ்வாறான முயற்சிகளுக்கு அனைத்து சாராரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அமைச்சர் றிஷாத் பதியுதீன் தனது சுதந்திர தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள சுதந்திர தினச்செய்தியில் கூறியுள்ளதாவது,

சிறுபான்மை மக்கள் இந்த ஆட்சி மாற்றத்தை கொண்டு வந்ததன் நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டும். எந்தவொரு தீர்வு முயற்சியிலும் எவருமே பாதிக்கப்படக்கூடாது. அதே போன்று எந்தவொரு மாற்றத்திலும் எவருக்குமே அநீதியிழைக்கப்படக்கூடாது. கடந்த காலங்களில் இடம்பெற்ற இனவாத நடவடிக்கைகள் போல எதிர்வரும் காலங்களிலும் நடைபெறுவதற்கும் இடமளிக்கக் கூடாது.

வேற்றுமை உணர்வுகளை வேரோடு களைந்து சமத்துவம் காண சகலரும் உதவ வேண்டியது காலத்தின் தேவையாகும். வெளிநாடுகளின் அழுத்தங்களுக்கு அடி பணியாமல் சுதந்திரமுள்ள இறைமை உள்ள நாடாக நமது நாட்டை கட்டியெழுப்புவதற்கு இனமத பேதமின்றி அனைவரும் பாடுபடுவோம். இவ்வாறு அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# இன, மத, மொழி பேதங்களை மறந்து சுதந்திர தினத்தை கொண்டாடுவோம்

## இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்



இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் 69 ஆவது சுதந்திர தினத்தை இன, மத, மொழி பேதங்கள் மறந்து அனைவரும் ஒற்றுமையோடு கொண்டாட வேண்டும் எனத்தெரிவித்த புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், தாய் நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு கொண்டு செல்லவேண்டுமாயின் இனங்களுக்கிடையில் நம்பிக்கை, ஒற்றுமை, சுதந்திரம், விட்டுக்கொடுப்பை மேலும் வலுப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

இலங்கை திருநாட்டின் 69ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

ஒரு நாட்டில் குழப்பமான சூழ்நிலைகளை ஏற்படுத்துவதன் ஊடாகவே வெளிச்சக்திகள் அங்கு ஊடுருவுகின்றன. அப்போது தேசத்துக்கு ஏற்படும் முதல் இழப்பு சுதந்திரம் பறிக்கப்படுவதாகும். மூன்று தசாப்தங்களாக நாட்டிலிருந்த பயங்கரவாத சூழ்நிலையை எத்தனை வெளிச்சக்திகள் பயன்படுத்தி இலாபம் பெற முயற்சித்தன என்பது இந்நாட்டு மக்களுக்குத் தெரியாத ஒரு விடயமல்ல. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது அரசு எடுத்த உறுதியான தீர்மானங்கள் மூலம் நாடு பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்கப்பட்டு இரண்டாவது முறை சுதந்திரம் அடைந்தது. அந்த சுதந்திரம் எமது மானுசிகத்தையும், இராணுவ பலத்தையும், அரசியல் ஸ்திரத்தன்மையையும் உறுதிசெய்தது.

எனினும், அதன் பின்னர் துரதிஷ்ட வசமாக வலுப்பெற்ற இனங்களுக்கு இடையிலான விரிசல் நிலை நல்லாட்சி அரசில் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு சிறுபான்மை மக்களது இருப்பு பாதுகாக்கப்பட்டது.

69ஆவது சுதந்திர தினத்தினையே இன, மத, மொழி பேதங்களை மறந்து அனைத்து தரப்பினரும் ஒன்றாக சுதந்திரக் காற்றை சுவாசித்தவர்களாக கொண்டாடுகின்றோம். இந்நிலை தொடர பிரார்திக்கின்றேன்- என்றார்.

## சுதந்திர தின நிகழ்வு

(பாணந்துறைஎம்.கே.எம்.அஸ்வர்)

பாணந்துறை ஹேனமுல்ல கெசல்வத்தை மக்கள் ஒன்றியம் நல்ல பிரஜைகள் கொண்ட சுதந்திரதேசத்தை நோக்கி எனும் தொனிப்பொருளில் நமது நாட்டின் 69 ஆவது சுதந்திரதின வைபவம் 4ஆம் திகதி காலை 8 மணிக்கு கெசல்வத்தை பொதுச்சந்தை முன்றலில் நடைபெறவுள்ளது.

பாணந்துறை வடக்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரீ.டபிள்யூ. பல்லியகுரு தலைமையில் நடைபெறவுள்ள இவ்வைபவத்தில் ஐ.பி.குணவர்த்தன பிரதம அதிதியாகவும் பாணந்துறை பொலிஸ் அத்தியட்சகர் எம்.என். எஸ்.மெண்டிஸ் பாணந்துறை பிரதேச சபையின் செயலாளர் ஜெயலத் ஹெட்டியாராச்சி ஆகியோர் விசேட அதிதியாகவும் மதகுருமார்கள், பாணந்துறை பிரதேச செயலாளர் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# இலவச வைத்திய முகாம்

இலங்கையின் 69 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு உடுநுவரை அபிவிருத்தி நிதியம் இவ் வருடமும் மாபெரும் இலவச வைத்திய முகாம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 முதல் மாலை 4.00 மணி வரை உடுநுவரை அபிவிருத்தி நிதிய வளாகத்தில் இவ் வைத்திய முகாம் நடைபெறவுள்ளது. கடந்த வருடம் போல இவ்வருடமும் பிரதேசத்திலுள்ள சகல இனத்தவருக்கும்இந் நிகழ்விற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வைத்திய முகாமில் சிறுநீரகப் பரிசோதனை,கண் பரிசோதனை,மார்பகப் புற்று நோய் பரிசோதனை, நீரிழிவு பரிசோதனை என பலவகையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட இருப்பதோடு பல்வேறு வைத்திய ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளன.

சிரேஷ்ட மனநல ஆலோசகர்
துணைத்தலைவர், இலங்கை
உளவள ஆலோசக நிபுணர்கள்
சங்கம், இலங்கை மன்றம்
பிரதித் தலைவர் போதைப்பழக்
கத்துக்குட்பட்டோருக்கான தேசிய
மனவள ஆலோசனை சபை
**அஸ்ஹர் அன்ஸார்**
M.S Psych (Ind), A.D.Psycho.C (SL),
D.Psy.C (SL), D.Y.T (Ind), FRSPH (UK)



# மனநலமும் ஆலோசனையும்

## பிறந்திருக்கவே கூடாது?

தொடர் 169

- ★ என்னால் எதையும் முடியாது.
- ★ எந்த ஆசையும் இல்லை.
- ★ வாழ்க்கை என்றால் வெறுப் பாகத்தான் உள்ளது.
- ★ உண்ணவும் முடியாது, உறக்கம் வருவதே இல்லை.
- ★ மனதில் எப்பவும் ஏதோ பாரமாகவே இருக்கிறது.
- ★ எந்தவிதமான சந்தோசமும் எனக்கு இல்லை.
- ★ உடம்பெல்லாம் வலியும் நோவுமாக இருக்கிறது.
- ★ யோசிக்கவும் முடியாது.
- ★ என்ன செய்வது என்று தீர்மானிக்கவும் முடியாது.
- ★ யாரும் என்னைப் புரிந்து கொள்வதும் இல்லை.
- ★ எனக்கு சுதந்திரமாக இருக்கவும் இயலாது.
- ★ நண்பர்கள் எல்லோரும் சந்தோசமாக இருக்கிறார் கள், நான் மட்டும் கவலைப்பட்டுக்கொண்டு இருக்கிறேன்.
- ★ ஏன் எனக்கு மட்டும் இப்படி மோசமாக நடக்கிறது.
- ★ ஏன் எனது ஆசையும் விருப்ப மும் நிறைவேறுவதில்லை.
- ★ நான் பிறந்திருக்கவே கூடாது.
- ★ நான் பிறந்ததால் தானே என் பெற்றோருக்கு பாரமாக இருக்கிறேன்.
- ★ நான் செத்துப்போவது நல்லது.

இப்படி ஏலாது.. முடியாது.. போன்ற மனதில் அடைத்துவைத்தி ருந்த பல எதிர்மறையான உணர்வு களை கண்கள் கண்ணீரைக் கொட்டக் கொட்ட, விம்மலும் பெருமூச்சுகளும் விட்டு விட்டு ஒருவர் வெளிப்படுத் தியதை மௌனமாக செவிமடுத்துக் கொண்டிருந்தேன். மனநல ஆலோச னைக்கு அவருக்கு நெருங்கியவர்கள் அவரை அழைத்துவந்திருந்தார்கள். அவர் சொல்லும் விடயத்தை விட வும் சொல்லும் விதத்திற்கே எனது அவதானம் அதிகமாகத் திரும்பியது. ஒன்றன்பின் ஒன்றாக கண்கள் நிரம்பி வழியும் கண்ணீர் துளிகள், தடுமாற்றம் நிறைந்து வெளிப்படும் வார்த்தைகள், யாராவது கேட்டுவிடுவாரோ என்று மூடியிருந்த கதவை திரும்பத்திரும்பப் பார்த்தல். வார்த்தைகள் வெளிவராமல் இடைக்கிடையே வழுக்கி விழு தல். தலையைக் குனித்தவாறு ஏங்கி அழுதல். இப்படி பல உடல் மொழி களுடன் அவர் உள்ளத்தில் இருந்த ஊனமுற்ற உணர்வுகள் வெளிவந்து கொண்டிருந்தன. அவற்றை சொல்லி முடிக்கும் வரை பொறுமையாக காது கொடுத்துக் கொண்டிருந்தேன்.

இதை வாசிக்கும் போது உங்க ளுக்கும் கவலை ஏற்படலாம். பாவம், பரிதாபம் போன்ற உள உணர்வுகளும் ஏற்படலாம். காரணம் என்னவாக இருக்கும் என்று அவசரமாகத் தெரிந்து கொள்ளவும் மனம் துடிக்கலாம். ஆம்! இந்த நபர் யார் என்பதை முதலாவது தெரிந்துகொள்வோம். இவர் ஒரு ஆணாக இருக்கலாமா? அல்லது பெண்ணாக இருக்கலாமா? இப்படி யெல்லாம் பெரிய உணர்வுகளையும் மனக்காயங்களையும் வெளிப்படுத்தக் கூடியவர் பெரும்பாலும் ஒரு வளர்ந் தவராகத்தானே இருக்கவேண்டும். நீங்கள் நினைப் பது போன்று அவர் பெரிய வயதுக்கு வந்த ஒருவரல்ல. மிக அண்மையில் பருவவயதை அடைந்த ஓர் இளம் பெண். பெண் பிள்ளை என்றே சொல்லலாம். வயது எத்தனையாக இருக்கும் என்று இப்போது இலகு வாக தீர்மானித்துக்கொள்ள முடியும் அல்லவா. இந்நேரத்தில் உங்களது கவ லையும் அனுதாபமும் கூடியிருக்குமே தவிர குறைந்திருக்காது.

இந்த வயதில் இப்படியெல்லாம் பிரச்சினைகளா? எவ்வளவு பாதிப் புக்கு உள்ளாகியிருக்கிறாள்? அவ ளுக்கு என்னதான் நடந்திருக்குமோ? யார் என்ன செய்தார்களோ? என்ற கேள்விகள் கூட உங்கள் உள்ளங்களில் உருவாகலாம். மனிதர்கள் அப்படித் தான். இப்படியான உள உணர்வுகளின் தாக்கங்களால் ஒருவர் அவதிப்படு வதை கேள்விப்படும் போது யாருக் குத்தான் கவலை வராது. யாருடைய உள்ளம் தான் கலக்கம் அடையாது.

அவளுக்கு ஓர் ஆசை இருந்தது. அந்த ஆசை நிறைவேறாமல் போகும் என்பதால் தான் இப்படியெல்லாம் கவலைப்பட்டு, தாங்க முடியாத நேரங்களில் தற்கொலை முயற்சி யில் ஈடுபட்ட சந்தர்ப்பங்களும் ஏற்பட்டிருந்தது. அப்படியானால் உயிரை மாய்த்துக்கொள்கிற அளவு அவளது நிறைவேறாத ஆசை எது வாக இருக்கும்? அந்த ஆசை நிறை வேறாததுதான் அவள் இவ்வளவு அவதிப்பட்டு மனஅழுத்தத்திற்கு உள்ளாவதற்கு காரணமாகவும் அமைந் திருந்ததா?

அவள் ஒருவனை ஒருவருட கால மாக விரும்பிவந்தாள். அவன் மீது அவளுக்கு ஓர் ஆழமான நேசம் இருந்தது. வீட்டுக்குத் தெரியாமல் பல முறைகளில் அவனை சந்திப்பதும் வழக்கமாக இருந்தது. ஒரு நாள் அது தன் பெற்றோருக்கு தெரியவந்தபொ ழுது பெற்றோர் அந்த உறவை விரும் பவே இல்லை. அவனிடமும் தேவை யில்லாத பழக்கங்கள் இருந்தன. குறிப்பாக ஏதோ போதைப்பொருள் பாவனைக்கு பழக்கப்பட்டவனாக அவன் இருந்தான். அவனும் படிக்கும் வயதிலுள்ள ஒரு பள்ளி மாணவன். இந்த வயதில் இப்படியான உறவுகள் கூடாது என்றும் அதேநேரம் அவன் ஒரு நல்ல பிள்ளையும் அல்ல என் பதை பெற்றோர் பல முறை சொல் லிப்பார்த்து அந்த உறவை நிறுத் திவிடுமாறு தயவாய்க் கேட்டனர். பெற்றாரின் தயவான வேண்டுகோளை விட 'அவனை என்னால் மாற்றி எடுக்க முடியும். அவனது கெட்ட பழக்கங்களை என்னால் அகற்றிவிட முடியும்' என்ற எண்ணமே அவள் மனதில் ஓடிக்கொண்டிருந்தது. பெற் றோரிடம் இதை சொல்லாவிட்டாலும் பெற்றார் என்னைப் புரிகிறார்கள் இல்லை என்றே வருத்தப்பட்டாள்.

இருந்தபோதிலும் இந்த உறவை பெற்றோர் முழுமையாக விரும் பவில்லை. எந்தப் பெற்றார்தான் விரும்புவார்கள்? தன் பெற்றோரின் அதிருப்தியைக்கண்ட அவள் 'பெற் றோர் என்னைப் புரிந்துகொள்கிறார் கள் இல்லை, எனது விருப்பத்தை நிறைவேற்ற விடுவதில்லை என்று எண்ணியதால் ஏற்பட்ட வெறுப்புதான் அவள் வாழ்க்கையை வெறுக்க காரண மாக இருந்திருக்கிறது. இந்த வெறுப்பு டன் வாழ்வதை விட இறந்துவிடுவது நல்லது என்ற எண்ணம் உருவாகவும் காரணமாக ஆகியது.

மனஅழுத்தம் அடைவதற்கும் வாழ்க்கையை மாய்த்துக்கொள்வ தற்கும் இதுவும் ஒரு காரணமா என்று எல்லோரும் நினைக்க லாம். இந்தப்பள்ளிப்பருவத் தில் இப்படியும் ஒரு காதல் தேவைதானா? என்றும் எண்ணலாம். படிக்க வேண் டிய பருவத்தில் கலியாண ஆசையா? என்றும் எமது உதடுகள் உச்சரிக்கலாம். இப்படி எத்தனையோ வியப்பு நிறைந்த கேள்விகள் எங்கள் சிந்தனையில் வந்துபோகலாம். பூப்பெ ய்து ஓரிரு வருடத்திற்குள்ளேயே இப்படி பொருந்தாத ஆசைகளை எதிர்பார்ப்புகளாக ஆக்கி அநாவசிய மாக அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் இவளைப்போன்ற இன்னும் பல பிள்ளைகள் மனநல ஆலேசனைக்கு அழைத்துவருவது அண்மைக்காலமாக அதிகரித்துக்கொண்டே வருகிறது.

★ காதலில் சிக்குண்டு அழகான வாழ்க்கைக்கு ஆரம்பத்திலேயே அசி ங்கத்தைப் பூசிக்கொள்கின்ற இவ்வா றான பிள்ளைகளை என்னவென்று சொல்வது?

★ பள்ளிப்பருவத்தில் படித்து வாழ்க்கையை அழகானதாகவும் அர்த்தமுள்ளதாகவும் ஆக்கிக்கொள்ள வேண்டியதை நோக்கமாக கொள்ள வேண்டிய நேரத்தில் இப்படி காதல் உறவில் சிக்குண்டால் எப்படி அந்த நோக்கத்தை அடைவது?

★ எப்படி வாழ்க்கையின் அர்த் தத்தைப் புரிவது?

★ பாடசாலையில் படிக்க வேண்டிய பருவத்தில் காதலிப்பது பெற்றோரின் காதுகளில் விழுந்தால் அதை எப்படி அவர்கள் தாங்கிக்கொள் வார்கள்?

படித்தபிறகு காதலிப்பது நல்லது என்று நாம் சொல்ல வரவில்லை. பருவ மாற்றங்கள் வரும்போது காதல் உணர்வுகள் வெளிப்படலாம். அது இயல்பானது. ஆனால் அந்த உணர்வு களை கட்டுப்படுத்தக்கூடியவர்களாக நாம் ஆகாவிட்டால் அந்த உணர்வுக ளின் கட்டுப்பாட்டிற்கு நாம் உள்ளாகி விடுவோம்.

அந்த உணர்வுகளின் ஆக்கிரமிப் பிற்கு இவள் இடம் கொடுத்ததால்

- ★ பெற்றோரின் புனிதம் அவளுக்குப் புரியவில்லை.
- ★ காதலுக்கு கொடுக்கின்ற மரியாதையை தனது பெற்றோருக்கு கொடுக்க முடியவில்லை.
- ★ நான் படிக்கிற மாணவி என்று கூட அவளுக்கு தெரிய வில்லை.
- ★ பெற்றோர் வேண்டாம் என்பது கூட அவளுக்கு வெறுப்பாய்ப் போனது.

அவள் பெற்றோர் அவளுக்கு எந் தக்குற்றமும் செய்ததாக அவளுக்கு சரியாக சொல்ல முடியவுமில்லை. ஏனென்றால் அவர்கள் அப்படி அவ ளுக்கு ஏதும் செய்ததும் இல்லை. வீணாக தன் பெற்றோரையே பழி சுமத்துகிற அளவுக்கு அவளது அந்த உணர்வெழுச்சி காரணமாக அமைந்து விட்டது.

இந்த இடத்தில் நாம்;


- ★ யாரை குறைசொல்வது?
- ★ பிள்ளையை குறை சொல்வதா?
- ★ பெற்றோரை குறை சொல்வதா?
- ★ சமூகத்தைச் சாடுவதா?
- ★ நாடகங்களையும் சினிமாக் களையும் ஏசுவதா?
- ★ கையடக்கத் தொலைபேசி, சமூக வலைத்தளங்கள்தான் காரணம் என்று சொல்லிக் கொண்டிருப்பதா?
- ★ இன்றைய பிள்ளைகள் இப்படித்தான் என்று சொல்லி விட்டு விட்டுவிடுவதா?

இந்தக்காதல் உணர்வுகளில் இருந்து எமது பிள்ளைகளை கட்டுப்படுத்திக் கொள்ளவும்,

அவர்களில் இயல்பாகவே தோன்றும் மனஉணர்வுகளை, மன எழுச்சிகளை அழகாக வெளிப்படுத் தவும்,

சரியையும் பிழையையும் மிகச்சரி யாக இணங்கண்டு கொள்ளக்கூடிய அற்புதமான உளஆற்றலை விருத்தி செய்துகொள்ளவும்,

அவர்களுக்கு வழிகாட்டவேண் டியவர்களாக பெற்றோர்கள் மட்டுமல்ல, உறவினர்கள், ஆசிரியர்கள், சமூக உறுப்பி னர்கள் போன்ற ஒவ்வொ ருவரினதும் மிகமுக்கிய பொறுப்பாக இருக்கிறது என்பதை இந்த இடத் தில் ஞாபகப்படுத்திக் கொள்கிறோம்.





# சமூகஜோதியின் சங்கமம்

தொடர் 123

## இந்தவார வெற்றியாளர்



★ என்.எம். முனவ்வர். கல்முனை.

கேள்வி - ஏமாற்றத்தின் அடிப்படை என்ன?

பதில் - அறிவீனமும், அதிக ஆசையும் தான்.

**வெற்றியாளர் தனது பரிசை பெற்றுக்கொள்ள 0773153618 எனும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்**

**★ என்.ஏ. பஸீர். திஹாரிய.**
கேள்வி - தாய்க்கு முன் தாரம் என்கிறேன். தவறா?
பதில் - இல்லை. தாரமாகிய பின் தாயாகுவதுதான் தர்மம்.

**★ ஏ.எம். நிஸார். கடுகண்ணாவ.**
கேள்வி - ஆறடி நிலம்தானே எவருக்கும் மிச்சம்?
பதில் - அதுவும் நிரந்தரமில்லை. தற்காலி கமானதுதான்.

**★ எஸ்.எம். ஜாபிர். பாணந்துறை.**
கேள்வி - புகழ்ச்சி - திட்டுதல் வித்தியாசம் என்ன?
பதில் - புகழ்ச்சி மட்டம் தட்டும். திட்டுதல் பட்டை தீட்டும் .

**★ கே.ஏ. சுபைர். குருநாகல்.**
கேள்வி - அச்சம் என்பது மடமையடா சரியா? தவறா?
பதில் - இறை அச்சம் மடமையல்ல. கட்டாயக் கடமை.

**★ எம்.எல். முனாஸ். நீர்கொழும்பு.**
கேள்வி - மன்னிப்பது சிறந்ததுதானே..?
பதில் - பிறரை நாம் மன்னிப்பதே சிறந்தது. பிறர் நம்மை மன்னிப்பது நமக்குச் சிறப்பல்ல.

**★ கே.எம். மிஹ்லார். கண்டி.**
கேள்வி - அன்பின் பெறுமதி என்ன?
பதில் - அன்பு விற்பனைப் பொருளல்ல, அன்புக்குக் கைமாறு அன்புதான்.

**★ பி. உதயகுமார். பன்வில.**
கேள்வி - ஒருவனை நல்லவனா? கெட்டவனா? என்பதை அறிவது எப்படி?
பதில் - பிறரைப் பற்றி என்ன சொல் கிறாரோ அதைவைத்து புரிந்து கொள்ளலாம்.

**★ எஸ்.எஸ். ஜுனைட். வெலிகம.**
கேள்வி - காதல் என்பது என்ன?
பதில் - அறிவாளிகளின் முட்டாள்தனம், முட்டாள்களின் அறிவாற்றல்.

**★ எம்.வை.எம். மஹ்ரூப்.ஹாலிஎல.**
கேள்வி - அதிகமாகப் பொய் சொல்வது ஆளுங் கட்சியா? எதிர்க் கட்சியா?
பதில் - ஆளுங் கட்சிதான். எதிர்கட்சி சொல்வதெல்லாம் அபாண்டம்.

**★ எம். பாரிஸ். மக்கொன.**
கேள்வி - சிறப்பானவர்கள் எல்லாம் நல்லவர்களா?
பதில் - இல்லை. நல்லவர்கள் எல்லாம் சிறப்பானவர்கள்தான்.

**★ ஏ.ஏ. அஸீஸ். மாவனெல்ல.**
கேள்வி - வேதனைப்படாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?
பதில் - விபரீதமான எண்ணங்களை விட்டொழிக்க வேண்டும்.

**★ எம்.எம். சித்தீக். அக்கரைப்பற்று.**
கேள்வி - கிராமத்தில் உள்ளவர்கள் அனைவரும் நல்லவர்களா?
பதில் - மிக மிக நல்லவர்கள், மிக மிகக் கெட்டவர்களும் உள்ளனர்.

**★ பி.எம். மொஹிடீன். பதுளை.**
கேள்வி - ஆட்சி மாறுமா?
பதில் - ஆட்சி மாறியும் காட்சி மாற வில்லையே.

★ஒவ்வொரு வாரமும் பிரசுரிக்கப்படும் கேள்விகளில் சிறந்த கேள்விக்கு, இலக்கியப் புரவலர் ஹாஸிம் உமர் வழங்கும் 1000/- ரூபா பணப்பரிசு காத்திருக்கிறது.

★ கேள்விகளை சுருக்கமாக தபாலட்டையில் மாத்திரம் எழுதி பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு அனுப்புங்கள்.

★ முகவரி வெட்டி ஒட்டப்படாத தபாலட்டை கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

NAVAMANI Newspaper
Samookajothiyin Sangamam
# 156, Hospital Road,
Kalubowila, Dehiwala

# சன்மார்க்க அறிஞர் தொட்டவத்தை முஸம்மில் ஆலிம்

**எம்.எஸ்.எம். முந்தஸிர்**
**நிர்வாகக் குழுவின் நிரந்தர உறுப்பினர், தொட்டவத்தை பள்ளிவாசல்கள் பரிபாலனச் சங்கம்**

தென்னிலங்கையின் பாணந்துறையைச் சேர்ந்த பிரபல சன்மார்க்க அறிஞரும் கல்விமானும் முன்னாள் வக்பு சபை உறுப் பினரும் ஓய்வுபெற்ற கல்வி அதிகாரியும் தமிழ், ஆங்கிலம், சிங்களம், அரபு ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்று விளங் கியவருமான மர்ஹூம் மௌலவி கலீபதுஷ் ஷாதுலி எஸ்.எம்.ஏ.எம். முஸம்மில் (கபூரி) ஆலிம் அவர்களின் இருபத்துநான்காவது நினைவுதினம் 04.02.2017 சனிக்கிழமை ஆகும்.

மர்ஹூம் மௌலவி கலீபதுஷ்ஷாதுலி எஸ்.எம்.ஏ.எம். முஸம்மில் அவர்கள் 1926 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி தொட்டவத்தையைச் சேர்ந்த சேகு மதார் ஆலிம், ஹாஜியானி அஸீஸா உம்மா தம் பதியின் சிரேஷ்ட புதல்வராக இவ்வுலகில் பிறந்தார்.

பாணந்துறை, தொட்டவத்தை அல்பஹ் றியா முஸ்லிம் வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியை மேற்கொண்ட இவர், சிறுபராயத்திலேயே கல்வியில் ஆர்வம் கொண்டவராக விளங்கியுள்ளார். அன்று இலங்கையின் கொழும்பு மாவட்டத்தில் பிரபல அரபுக் கலாசாலையாக விளங்கிய மஹரகம கபூரிய்யா அரபுக் கல்லூரியில் 1939 - 47 வரை சன்மார்க்கக் கல்வி கற்று மௌலவிப் பட்டம் பெற்று வெளியேறினார். அன்னாரின் திறமையையும் ஆற்றலையும் அறிந்துகொண்ட கல்லூரியின் நிர்வாகம் இவரை அக்கல்லூரியின் ஆசிரியராகச் சேர்த் துக்கொண்டது. அங்கு 1947 - 49 வரை கடமையாற்றி, 1949 - 55வரை கொழும்பு சாஹிராக் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்து ஆசிரியப்பணி புரிந்த அன்னார், பேராத னைப் பல்கலைக்கழகத்தில் 1955-58 வரை தனது பல்கலைக்கழகக் கல்வியைக் கற்று பட்டதாரியாக வெளியேறி, 1958-59 வரை தர்ஹாநகர் சாஹிராக் கல்லூரியிலும் 1959-60 வரை கொழும்பு சாஹிராக் கல்லூரியி லும் ஆசிரியராகப் பணியாற்றினார்.

ஆற்றலும் திறமையும் மிக்க அன்னார், தனது பாதையைத் திசை திருப்பி 1960-61 ஒக்டோபர் மாதம் வரை இலங்கை தொழில் திணைக்களத்தில் தொழில் உத்தியோகத் தராகவும் பணியாற்றியுள்ளார். மீண்டும் கல்வித்துறைக்குள் பிரவேசித்த இவர், 1961 ஒக்டோபர் முதல் 1965 ஜூன் வரை பாணந் துறை தொட்டவத்தை அல்பஹ்றியா முஸ் லிம் வித்தியாலயத் தில் பதில் அதிபராகக் கடமை புரிந்துள்ளார். இதனையடுத்து, 1965 செப்ரெம்பர் 05ஆம் திகதி வரை கல்வி அமைச்சின் பாடநூல் தயாரிப்புக் குழுவில் இணைத்துக் கொள்ளப்பட்டார். அதன்பின்னர் கொழும்பு ஹமீத் அல்ஹுசெய்னி மகாவித்தியாலயத் தில் கடமையாற்றிய காலத்தில் கடமை லீவு பெற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1965-66 வரை கல்வி டிப்ளோமா பட்டப்ப டிப்பை மேற்கொண்டார். பின்னர் 1966-68 வரை வெலிகம அரபா மகா வித்தியால யத்தில் பதில் அதிபராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் நிரந்தர அதிபராக நியமனம் பெற்று 1970 இறுதிப்பகுதி வரை அங்கு கடமை புரிந்தார். 1970 டிசம்பர் - 72 மார்ச் வரை பாணந்துறை ஹேனமுல்லை ஜீலான் முஸ்லிம் வித்தியாலயத்திலும் அதிப ராகக் கடமையாற்றியுள்ளார்.



பாடசாலைக் கல்விச் சேவையின் பின்னர் கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்ற இவர், களுத்துறை, பெல்மதுளை கல்விப் பிரிவுகளின் தமிழ் கல்வி அதிகாரியாகப் பல வருட காலம் சேவை புரிந்த பின்னர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்ற பின்னரும் அன்னார் தனது சமய, சமூக, கல்வி நடவடிக்கைகளைக் கைவி டவில்லை. பல்வேறு அமைப்புகளிலும் சேர்ந்து சமூக வளர்ச்சிக்காகப் பாடுபட்டார். குறிப்பாக, சுன்னத் வல் ஜமாஅத் கொள் கைகளை நிலைநாட்டுவதிலும் ஆன்மீகப் பணிகளைத் திறம்பட முன்னெடுப்பதிலும் சாதுலியா தரீக்காப் பணிகளிலும் முன்னின்று உழைத்தார்.

இவர் ஒரு சிறந்த அறிவாளியாகவும் மார்க்க அறிஞராகவும் சிறப்புற்று விளங் கியதுடன், குறைந்த வயதில் அல்ஆலிம் பட்டத்தை பெற்றுக்கொண்ட ஒருவராவார். அன்னார் சாதுலியா தரீக்காவின் வளர்ச்சி க்கும் அதன் மேம்பாட்டுக்கும் தன்னாலான பெரும் சேவைகளை ஆற்றியதுடன் பள்ளி வாசல், இஸ்லாம் ஒரு சட்டம் (ஆங்கில நூல்) உட்பட பல்வேறு நூல்களையும் எழுதி யுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க >>>




# வர்த்தக சலுகைக்காக மீண்டும் சாத்தானியத் திணிப்பு



**எம்.ஐ.எம்.அப்துல் லத்தீப்**
முன்னாள் ஆசிரிய ஆலோசகர்

ஐரோப்பாக் கண்டத்தின் நாடுகளின் கூட்டணியான ''ஐரோப்பிய ஒன்றியம்'' வளர்ந்து வரும் நாடுகள் மற்றும் வறுமைப்பட்ட நாடுகளுக்கும் பொருளாதார ரீதியான சலுகையுடன் கூடிய ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை வழங்க முன்வந்தநிலையில் அவற்றைப் பெறும் நாடுகள் தங்களது நிபந்தனைகள் பலவற்றுக்கு இணங்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டையும் விதிக்கின்றனர். இவற்றுள் பொருளாதார, வர்த்தக நடவடிக்கைகளுக்கு எவ்வித சம்பந்தமுமில்லாத ஏனையோரின் சமய, கலாசார நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கின்ற நிபந்தனைகளும் இடம்பெற்றுள்ளமை பாரிய கண்டனத்திற்குரியதாகும். உதாரணமாக பிறமதத்தவரின் தனியார் சட்டத்தில் திருத்தங்கள், ஒருபால் திருமணத்தை அங்கீகரித்தல், தன்னினச் சேர்க்கைக்கான அங்கிகாரம் முதலானவைகள்.

கேவலமான மார்க்க விரோத இறை சாபங்களுக்குள்ளான இந்த நிபந்தனைகளுக்கு நாம் இணங்கினால் கேவலம் இவர்களின் அற்ப சலுகைக்காக இறைத் தண்டனைக்கு நாம் உள்ளாவதோடு 4000 ஆண்டுகளுக்கு முன்னர் இதே பாவத்துக்காக இறங்கிய அதே தண்டனை இந்த மேற்கத்திய நாட்டவரையும் வந்தடையும் காலம் வெகு தூரத்தில் இருக்க முடியாது.

கிருஸ்தவர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட ஐரோப்பிய, அமெரிக்க, அவுஸ்திரேலியக் கண்டங்களைச் சேர்ந்த சமூகத்தவர்களுள் அதிகமானோர் தமது வேதாகமக் கட்டளைகளுக்கும், எச்சரிக்கைகளுக்கும் மேலாக வழங்கப்பட்ட தண்டனைகளையும் கணக்கில் கொள்ளாது, தன்னினச் சேர்க்கை எமது மனித உரிமை என்ற கோஷத்தில் தாங்களும் இம் மகா பாவத்தில் ஈடுபடுவது மட்டுமல்லாமல், உலகத்திலுள்ள ஏனைய முஸ்லிம், பௌத்த, இந்து சமயத்தவர்களுக்கும் இதனைச்செய்ய தூண்டும்முகமாக, செல்வந்தர்களான அவர்கள் தமது செல்வங்கள் சலுகைகள் வேண்டுமானால் இந்த செயல்களைத் தங்கள் நாடுகளிலும் சட்டபூர்வமாக்க வேண்மென இந்த ஐரோப்பிய ஒன்றியம் வற்புறுத்தி வருவதானது கேவலம்.

மனிதனின் ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கும் ஓர் ஆரம்பமும், யாரால், எங்கே, எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்பதற்கான சரித்திர சான்றுகளும் இருப்பது போல தன்னினச் சேர்க்கைக்கும் உள்ளன. எனது முந்திய கட்டுரையில் குறிப்பிட்டதைப் போல புனித வேதாகமத்திலும், புனித அல்குர்ஆனின் விளக்கவுரைகளிலும் இச்சம்பவங்கள் விளக்கப்பட்டுள்ளன. அதன்படி மனிதர்களைக் கெடுப்பதற்கென்றே தோற்றம் பெற்ற சாத்தான் அல்லது ஷெய்த்தான் இற்றைக்கு 4000 ஆண்டுகளுக்கு முன்னர் பாலஸ்தீனப் பிரதேசத்தில் இப்பாதகத்தை ஆரம்பித்தான். அங்கே வேதாகமத்தில் குறிப்பிட்டதுபோன்று சோதோம், கொமோரோ எனவும் குர்ஆன் விளக்க உரையில் போன்று முஸ்தபிகா பிரதேசம் உள்ளன. (இரண்டும் ஒரே பிரதேசமே) முஸ்தபிகா பிரதேசத்தில் ஸதர்பான், ஆமுரா, தாவமா, ஸபாபூதா, ஸஊதா என்னும் பெயர்களிலான ஐந்து நகரங்கள் இருந்தன. இப்பிரதேசம் கனிவர்க்கங்களும், விவசாயமும் நிறைந்த செழிப்பான பூமி. இந்நகர்களில் மொத்தம் ஐந்து இலட்சம் பேர் வசித்தனர். இங்குதான் ஷெய்தான் தனது துர்ச்செயலை ஆரம்பித்தான். ஏற்கனவே இம்மக்களிடம் புறாக்களைப் பந்தயம் கட்டிப்பறக்கவிடுவது, சீட்டியடிப்பது. முச்சந்தியில் உட்கார்ந்து மக்களைக் கேலி பண்ணுவது முதலான தீய பழக்கங்களும் இருந்தன.

ஒரு சமயம் ஷெய்தான் அழகிய சிறுவன் தோற்றத்தில் ஒருவருடைய தோட்டத்தில் புகுந்து காய்த்திருந்த பழங்களைச் சேதப்படுத்தி விட்டான். வழமையாக நடைபெற்ற இச்சேதங்களைச் செய்த சிறுவனைத் தோட்டக்காரன் ஒருமுறை பிடித்துவிட்டான். அவனை மரத்தில் கட்டிவைத்துத் தண்டிக்க ஆயத்தமானான். தண்டனையிலிருந்து தப்புவதற்காகச் சிறுவன் தோட்டக்காரனிடம் தன்னோடு ஓரினச்சேர்க்கை செய்தால் இனிமேல் இத்தோட்டத்தில் நுழைய மாட்டேன் என்று ஆசை வார்த்தை கூறி சத்தியம் பண்ணினான். அதனை எப்படிச் செய்வது என்று கேட்ட தோட்டக்காரனுக்கு லாவகமாகச் சொல்லிக் கொடுத்தான். அதன்படி செயற்பட்ட தோட்டக்காரன் புதிய இன்பம் அடைந்தான். சிறுவனான ஷெய்தான் விடுவிக்கப்பட்டான் இப்படியாக அடுத்தடுத்த தோட்டங்களிலும் புகுந்து விளையாடிய ஷெய்த்தான் ஐந்து நகர மக்களுக்கும் இக் கொடிய பழக்கத்தைப் பழக்கிவிட்டான். இப்படியே உலகத்தில் முதல் தடவையாக ஓரினச் சேர்கை இப் பிரதேசத்தில்தான் ஆரம்பித்தது என வேதங்கள் கூறுகின்றன.

ஒருமுறை இப்பகுதியைச் சூழ மழை பெய்யாது கோடை நிலவியது. வறட்சி நிலவிய அப்பகுதி மக்கள் செழிப்பான முஸ்தபிக்கா பிரதேச மக்களிடம் உதவி தேடிவர ஆரம்பித்தனர். இதனைப் பயன்படுத்திக் கொள்ள எண்ணிய ஷெய்தான் தன்னை ஒரு பொருளாதார நிபுணனாக ஏற்படுத்திக் கொண்டு ஐந்து நகர மக்களிடமும் வந்து, இன்னும் இரண்டு வருடங்களுக்கு மழை பெய்யாது. எனவே தானிய இருப்பை பாதுகாத்துக் கொள்ளுங்கள். யாரும் விலை கொடுத்துக் கேட்டாலும் கொடுக்காதீர்கள். மீறி வற்புறுத்தினால் அவர்களிடம் ஓரினச் சேர்க்கைக்கு ஒப்புக்கொள்பவர்களுக்கு மட்டும் விற்பனை செய்யுங்கள் என்று நிபந்தனை விதிக்கச் சொன்னான். இந்த ஆலோசனையை ஏற்றுக் கொண்ட வர்த்தகர்கள் நகர எல்லைகளில் உட்கார்ந்து கொண்டு தானியம் வாங்கவரும் அயல் பகுதி மக்களைக் கட்டாயப்படுத்தி அவர்களோடு தன்னினச் சேர்க்கை என்னும் கொடிய பாவத்தினை செய்து அழிக்கப்பட்டார்கள்.

இறை சாபம் அவர்களைப் பிடித்தது. இதே நிபந்தனையைத்தான் தற்போது ஐரோப்பிய யூனியனும் ஜி.எஸ்.பி. வரிச்சலுகைக்காக நம்மிடமும் வற்புறுத்துகின்றது. மேற்கத்திய நாட்டவர்களின் மனித உரிமைக் கோஷத்தின் முன் மதக் கட்டளைகள் தோற்றுப்போயுள்ளன.


அப்பொழுது லோத்து வாசலுக்கு வெளியே வந்து தனக்குப் பின்னாலே கதவைப் பூட்டி அவர்களிடத்தே போய், சகோதரரே இந்த அக்கிரமம் செய்ய வேண்டாம். இதோ புருஷரை அறியாத இரண்டு குமாரத்திகள் எனக்குண்டு. அவர்களை உங்களிடத்துக்கு வெளியே கொண்டு வருகிறேன். அவர்களுக்கு உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள், இந்த புருஷர் என் கூரையின் நிழலிலே வந்தபடியால் இவர்களுக்கு மாத்திரம் ஒன்றும் செய்யவேண்டாம் என்றார். அதற்கு அவர்கள் அப்பால் போ, பரதேசியாய் வந்த இவனா நியாயம் பேசுவது என்று கூறி லோத்துவை நெருங்கிக் கதவை உடைக்கப் போனார்கள். அப்பொழுது அந்தப் புருஷர்கள் லோத்துவை உள்ளிழுத்து வெளியிலிருந்தோரைக் குருட்டாட்டம் ஆக்கவே கதவைத்தேடி அலுத்துப் போனார்கள். பின்பு லோத்துவும் அவரைச் சேர்ந்தோரும் இரவோடிரவாகப் பாதுகாப்பான இடத்துக்கு அனுப்பப்பட்டனர். பூமியின் மீது சூரியன் உதித்ததும் கர்த்தர் சோதோம் மேலும், கொமோரோ மேலும் வானத்திலிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்கப்பண்ணி அந்த பட்டணங்களை அழித்துப்போட்டார் லோத்து குடியிருந்த பட்டணங்களைத் தாம் கவிழ்த்துப் போடுகையில் லோத்தை அந்த அழிவிலிருந்துத் தப்பிப்போக அனுப்பிவிட்டார். (ஆதியாகமம் 19 வசனங்கள் 6 - 12, 23 - 29)

(லூத் நபி அவர்களை நோக்கி) என்னுடைய மக்களே, இதோ என்னுடைய குமாரத்திகள் இருக்கிறார்கள் (அவர்களைத் திருமணஞ்செய்து கொள்வது) உங்களுக்கு மிகப் பரிசுத்தமானதாகும் அல்லாஹ்வுக்கு நீங்கள் பயந்து கொள்ளுங்கள். என் விருந்தினர் விஷயத்தில் என்னை நீங்கள் அவமானப்படுத்தாதீர்கள்,(உங்களுக்கு நல்லபதேசம் செய்யும்) நல்ல மனிதன் ஒருவரும் இல்லையா? என்று கூறினார். அதற்கவர்கள், உம்முடைய குமாரத்திகளிடம் எங்களுக்கு எத்தகைய உரிமைகளும் இல்லை என்பதை நீர் நன்கறிவீர், நாங்கள் விரும்புவது என்ன என்பதையும் நிச்சயம் நன்கறிவீர் என்றும் கூறினார்கள். (அல்குர்ஆன்-11-78,79)

லூத்தையும் (நம்முடைய தூதராக அவருடைய மக்களுக்கு நாம் அனுப்பி வைத்தோம்) அவர் தம் மக்களை நோக்கி உங்களுக்கு முன்னர் உலகத்தில் எவருமே செய்திராத மானக்கேடானதொரு காரியத்தையா நீங்கள் செய்கிறீர்கள்? நிச்சயமாக நீங்கள் பெண்களை விட்டு (விட்டு) ஆண்களிடம் காம இச்சையைத் தணித்துக் கொள்ளச் செல்கிறீர்கள், என்னே! நீங்கள் வரம்பு மீறிய மக்களாக இருக்கிறீர்கள் என்று சொன்னார். அதற்கு அவருடைய சமூகத்தினர் லூத் நபியையும் அவரைச் சார்ந்தோரையும் சுட்டிக்காண்பித்து) அவர்களை உங்கள் ஊரை விட்டே அப்புறப்படத்திவிடுங்கள். என்றுதான் பதில் கூறினர். ஆகவே அவருடைய மனைவியைத் தவிர,அவரையும் (மற்ற) அவரது குடும்பத்தையும் இரட்சித்துக் கொண்டேதம்! (அவருடைய மனைவியாகிய அவள் (அவரைப்பின் பற்றாது) பின் தங்கியவர்களுடன் சேர்ந்து விட்டாள். அவர்கள் மீது நாம்(கல்)மாரியைப் பொழிவித்து (அவர்களை அழித்து) விட்டோம். ஆகவே (இக்)குற்றவாளிகளின் முடிவு என்னவாயிற்று? என்பதை நீர் கவனிப்பீராக. (அல்குர்ஆன் -07:80-84)

எனவே நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் விதிக்கப்பட்ட வர்த்தக நிபந்தனையையொத்ததா இதுவும்? நாமும் பாவங்களின் பாரதூரங்களை அறிந்து, தவிர்ந்து நடந்துகொள்ளவேண்டும். பிறரையும் பாவத்திலிருந்து பாதுகாக்க வேண்டும்.

★★★



# தலைமைத்துவமும் இளைஞர்களும்

**✱ ஆஷிகா, கொழும்பு**

'இளங்கன்று பயமறியாது' என்று ஒரு பழமொழி உண்டு. அது முற்றிலும் உண்மையானது. பலவித சாகசங்களையும் புரிய எத்தணிக்கும் இந்த இளம் வயது அதன் பின்விளைவுகளை உணர்வதில்லை. எட்டி நிற்கும் ஆபத்தும் இவர்களின் கண்களுக்கு அழகாகத்தான் தெரியும். இவ்வாறான இளம் தலைமுறையினரை ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்பது எமது சமுதாயத்தின் பொறுப்பாகும்.

அண்மையில் மூதூரில் நடந்த துயரச் சம்பவம் இந்த பயமறியா இளங்கன்றுகளுக்கு சிறந்த உதாரணம். காலம் காலமாக விபத்துக்கள் நிகழ்ந்தாலும், நீரில் மூழ்கி மரணங்கள் சம்பவித்தாலும் எமது இளந்தலைமுறையினர் கிஞ்சித்தளவும் அச்சமடையாது ஆபத்தை நோக்கியே செல்கின்றனர். மார்க்க அழைப்புப் பணிக்காக திஹாரியிலிருந்து மூதூருக்குச் சென்ற 20,19,18 வயதுடைய மூன்று இளைஞர்களே கடலில் குளிக்கச் சென்று மூழ்கி மரணமடைந்துள்ளனர். இவர்களது மரணமானது இவர்களது குடும்பத்தினரை மட்டுமல்ல திஹாரி, மூதூர் உட்பட நாட்டின் அனைத்துப் பிரதேச மக்களையும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

இவர்கள் என்ன நோக்கத்திற்காக மூதூர் சென்றனர்? மார்க்க அழைப்புப் பணிக்காக. அப்படியாயின் ஏன் பாதுகாப்பற்ற நிலையில் இவர்கள் கடலில் குளிக்க வேண்டும்? சிறந்த நீச்சல் வீரனாக இருந்தாலும் கூட தகுந்தப் பாதுகாப்பின்றி, முன்பின் அறிமுகமில்லாத பழக்கமற்ற ஊரில், ஆழம் அறியாது காலை விடுவது மிகவும் ஆபத்தானதே. அவ்வாறிருக்கையில் அம்மூன்று இளைஞர்களும் கடலில் இறங்கியது மாபெரும் தவறாகும். நடந்து முடிந்ததையிட்டு கதைப்பதில் பிரயோசனம் இல்லையென அனைவரும் நினைக்கலாம். ஆனால் இச்சம்பவத்திலிருந்து நாம் அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் ஒன்று உள்ளது.

ஒரு தலைமைத்துவத்தின் கீழ் பயணித்தாலோ அல்லது இயங்கினாலோ அதற்குக் கட்டுப்பட்டே நாம் இயங்க வேண்டும். அவர்களை மீறி நாம் செல்வதும் கூடாது. இயங்கவும் கூடாது. மாறாக தலைமையின் அனுமதி கிடைத்தாலும் முடிவு சாதகமா அல்லது பாதகமா என சிந்தித்தே நாம் செயற்படவேண்டும். அதேபோன்றே அழைப்புப் பணிக்காகச் சென்றவர்கள் பள்ளிவாயிலோடு இருந்திருக்க வேண்டும். திடீர் திடீரென காலநிலை மாற்றங்கள் ஏற்படுகின்றன. அதனையும் கருத்திற்கொண்டே நாம் நமது காரியங்களில் இறங்குதல் சாலச்சிறந்தது. அழைப்புப் பணி மாத்திரமல்ல, சுற்றுலாப் பயணம், சாரணர் இயக்கப் பயணங்கள், தனிப்பட்ட இயக்கங்கள் குழுக்கள் மற்றும் குடும்பங்கள் போன்றன வேறு ஊர்களுக்கு இடங்களுக்கு பயணங்கள் மேற்கொள்ளும்போது நீர் நிலைகளுக்கு அருகில் செல்கையில் மிகவும் அவதானமாக இருத்தல் அவசியம்.

ஒரு ஊருக்கு பிற ஊரிலிருந்து (ஜமாஅத்) அழைப்புப் பணிக்காக வருபவர்களை அந்த பள்ளிவாசல் நிர்வாகம் பொறுப்பெடுக்க வேண்டும். உங்களது பாதுகாப்பில் நாம் கவனம் செலுத்துகின்றோம். எனவே ஆற்றிலோ அல்லது குளத்திலோ அல்லது கடலிலோ குளிக்கச் செல்ல வேண்டாம் என கட்டளையிட வேண்டும். பள்ளிவாசல் வளவில் உள்ள கிணற்றிலோ அல்லது ஏனைய வழிகளிலோ அவர்களது குளியல் தேவைகளைப் பூர்த்தி செய்யலாம். அதேவேளை அழைத்துச் செல்லும் குழுவுக்குத் தலைமை வகிப்பவர்கள் இளந்தலைமுறையினரில் அதிகளவில் கண்காணிப்பு செலுத்த வேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.

மரணத்தை யாராலும் தடுக்க முடியாது தான். அதற்கு காரணமும் தேட முடியாதுதான். என்றாலும் அதன் பின்னர் ஏற்படும் அவப்பெயரையும் அந்நிய மதத்தவர்களின் விமர்சனங்களையும் விட்டு நாம் விலகிக் கொள்ளலாம் அல்லவா?.

★★★

# இஸ்லாத்தில் இணைந்தவர்கள் பெயரை மாற்றுவது கட்டாயமா?

**✱ அபூ ஹுபைப்- களுபோவில**

ஒவ்வொருவரும் பிள்ளைப் பாக்கியம் பெறவேண்டுமென விரும்புவது இயற்கையாகும். பிள்ளை கிடைத்துவிட்ட சமயத்தில் ஏற்படுகின்ற மகிழ்ச்சி மட்டற்றது. கிடைக்கப்பெற்ற பிள்ளைக்கு நல்ல அர்த்தமுள்ள பெயரிடுவது பெற்றோர்கள் மீதுள்ள தலையாய பொறுப்பாகும். அவ்வாறன்றி பிள்ளைகளுக்கு பொருத்தமற்ற பெயரிடப்பட்டு, பிள்ளை வளர்ந்த பின்னர் கவலைப்படுவதை பார்க்கின்றோம்.

பொதுவாக பிழையான கருத்துக் கொண்ட பெயருடையவர்கள் தம் பெயரை நல்ல அர்த்தமுள்ள பெயராக மாற்றிக்கொள்ளவேண்டும் என்பதில் கருத்துவேறுபாடில்லை. இப்னு உமர் (ரழியல்லாஹுஅன்ஹு) அவர்களுக்கு ஆஸியா என்ற பெயரில் பெண் பிள்ளையொன்று இருந்தது. (அரபியில் ஸாத் என்ற உச்சரிப்பில் இருந்ததால்) அதன் அர்த்தம் பாவி என்று பொருள்படும்.

ஆதனால் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அப் பெண் பிள்ளைக்கு ஜமீலா ( அழகி ) என்று பெயர்மாற்றம் செய்தார்கள். (முஸ்லிம் 2139). இவ்வாறு அர்த்தமுள்ள பெயர்களை நாம் நமது பிள்ளைகளுக்கு வைக்க வேண்டும்.

இஸ்லாத்தை ஏற்கும், இஸ்லாத்தில் புதிதாக நுழையும் பலரும் பெயர்விடயத்தில் தடுமாற்றம் கொள்கின்றார்கள். தம் பெயரை மாற்றிக்கொள்ள வேண்டும் என பலவிதமான முயற்சிகளை மேற்கொள்கின்றனர். அப்துல்லாஹ், அப்துர்ரஹ்மான் என்ற பெயர்கள் சிறப்பான பெயர்களாகும்.

அதேநேரம் உண்மையில் மாற்று மொழிகளிலும் அர்த்தமுள்ள பெயர்கள் இருக்கவே செய்கின்றன. உதாரணமாக அழகன் என்ற பெயருக்கு அரபியில் ஹஸன் என்பாதாகும் அழகப்பன் என்றாள் அரபியில் அபுல்ஹஸன் என்பதாகும்.

ஆகவே அர்த்தமுள்ள பெயர்களை நாம் நம் பிள்ளைகளுக்கு வைப்பதோடு தம் பெயரை மாற்றிக்கொள்ள வேண்டியவர்கள் அதன் அவசியத்தை அறிந்து செயல்படுவது நல்லதாகும். பிறமொழிகளில் நல்ல அர்த்தங்களுடன் அமையப் பெற்றிருக்கும் பெயர்களை மாற்றிக் கொள்ள தடுமாறுவதில் அர்த்தமில்லை.

ஐரோப்பா மற்றும் சீனாவின் பல தலைசிறந்த உலமாக்கள் மற்றும் மார்க்க மேதைகள் அவர்கள் இஸ்லாத்திற்கு முற்பட்ட காலங்களில் இருந்த பெயருடனேயே மார்க்கப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். பெயர் மாற்றங்களின் போது பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. அவசியம் மாற்றப்படவேண்டியவர்கள் மாத்திரம் மாற்றிக்கொள்வதோடு, இவ்விடயத்தில் அதிக கவனம் செலுத்துவோம்.

★★★



# தேச நிர்மாணமும் இலங்கை முஸ்லிம்களும்

## பகுதி-02

■ றவூப் ஸெய்ன்

**மருத்துவத்துறை**

பண்டைய இலங்கையில் பல முஸ்லிம் வைத்தியக் குடும்பங்கள் ஆங்கிலேய கண்டிராஜ்ய ஆட்சியின் கீழ் கௌரவிக் கப்பட்டுள்ளனர். காலியில் வாழ்ந்த காலி வெதராலகே என்றழைக்கப் பட்ட சுல்தான் குட்டியார் எனும் யூனானி வைத்தியரை கண்டி ராஜ்யத்தில் வந்து குடியேறுமாறு சிங்கள மன்னர்கள் அழைப்பு விடுத்தனர். புராதன இலங்கையின் மருத்துவத் துறையில் கேகாலை மாவட்டத்தி லுள்ள கெடபெரிய எனும் கிராமத் தைச் சேர்ந்த கோபால சோனர்கள் மிக வும் பிரபல்யமானவர்கள். இவர்களின் பரம்பரையில் வந்தவர்களே ஹகீம் என அழைக்கப்பட்டனர்.

அரண்மனை அமைச்சர்கள், ராஜபுத்திரர்கள், நோயுறும்போது ஹகீம் எனப்படும் முஸ்லிம் வைத்தியர்களே அழைக்கப்பட்ட னர். கோபால் சோனகர்கள் என அழைக்கப்பட்ட இந்த வைத்தியப் பரம் பரையினர் சிங்கள ராஜதானி களின் பிரதான வைத்தியர்களாக மட்டு மன்றி வெளிநாட்டு ராஜதந்திரிகளாகவும் பணியாற்றியுள்ளனர்.

இரண்டாம் பராக்கிமபாகு முதல் சிறிவிக்கிரம ராஜசிங்ஹ வரையான காலப்ப குதியில் மன்னர்களின் மருத்துவத் திணைக் களத்தின் பிரதான பொறுப்பதிகாரிகளாக கோபால முஸ்லிம்களே இருந்து வந்துள்ள னர். இவர்களது குடும்பங்கள் இன்றும் 'வெ தகே உடையார் நிலமே' என்றே அழைக்கப் படுகின்றன.

அரண்மனை வைத்தியருக்கு வெதகே முகாந்திரம் எனப் பெயர் சூட்டுவது வழக்கம். பெரும்பாலும் இப்பதவிகளை முஸ்லிம் வைத்தியர்களே பெற்றிருந்தனர். ராஜபக்ஷ வைத்திய திலக கோபால எனும் பட்டப் பெயரைப் பெற்றிருந்த முஸ்லிம் குடும்பத்தைச்சேர்ந்த வைத்தியர்கள் பலர் தலைமுறை தலைமுறையாக அரண் மனை வைத்தியர்களாகப் பணியாற்றியுள்ளனர்.

ராஜபக்ஷ வைத்திய திலக கோபால முதலியாருக்கு உடுநுவரவில் உள்ள சிதுரு வனத்தில் மன்னன் 1747 இல் நிலம் அன் பளிப்பாக வழங்கிய சாசனக் குறிப்பொன்று உள்ளது. 1778 இல் பூவலிக் கடை வெதரா லகே அபூபக்கர் பிள்ளை என்பவர் அரண் மனை வைத்தியராகப் பணியாற்றினார். இவரது சேவையைப் பாராட்டி தஸ்கர எனும் கிராமம் அவருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

ராஜபக்ஷ வைத்திய திலக கோபால முதலியாருக்கு மன்னனால் வழங்கப்பட்ட கௌரவப் பட்டயம் இன்றும் பாதுகாப் பாக உள்ளது. கடபெரிய வளவ்வ எனும் கிராமமும் இன்னும் அதே பெயரிலேயே உள்ளது. ராஜபக்ஷ முதலியாரின் பரம்பரை யில் பல வைத்தியர்கள் தோன்றி அரண்ம னையில் பணி செய்துள்ளனர் அவர்களுள் கடபெரியாவைச் சார்ந்த மதார் உடையார் குறிப்பிடத்த க்கவர்.

வெளிநாட்டுத் தூதுவர்களாக ஆரம்பகாலம் முதற்கொண்டே சிங்கள மன்னர்கள் வெளி நாடுகளுடன் உறவு பூண்டிருந்தனர். குறிப்



பாக பொருளாதார, இராணுவ, படைப் பலம் சார்ந்த இருதரப்பு தொடர்புகளைப் பேணி வந்தனர். எனினும் மன்னர்களின் முக்கிய செய்திகளை வெளிநாட்டு ஆட்சி யாளர்களிடம் கொண்டு செல்லும் முக்கிய பொறுப்பை பல முஸ்லிம் ராஜதந்திரிகள் வகித்துள்ளதை வரலாற்றிலிருந்து அறிகி றோம்.

முஸ்லிம்கள் மீது சிங்கள மன்னர்கள் கொண்டிருந்த ஆழமான நம்பிக் கையே இப்பதவிகளில் முஸ்லிம் கள் அமர்த்தப்பட்டதற்கான பிரதான காரணமாகும். அரேபிய ஆட்சியாளர் களுடன் தொடர்பு களைப் பேணுவதற்கு முஸ்லிம் ராஜதந்தி ரிகள் தவிர்க்க முடியாத வர்களாக இருந்தனர்.

யாப்பகுவ அரசன் முதலாம் புவனேகபாகு (1272-1284) அபூ உஸ்மான் என்பவரைத் தலைவராகக் கொண்ட ஒரு தூதுக் குழுவை எகிப்திய சுல்தானிடம் அனுப்பி வைத் தான்.

அரண்மனை சேவை

கண்டி ராஜ்ய அரண்மனைச் சேவையில் அரச குளியல் முக் கிய இடத்தை வகிக்கின்றது. இச்சேவையில் சுமார் 500 குடும்பங்கள் ஈடுபடுத்தப்பட் டிருந்தன. இதற்கு உல்பங்கே எனப் பெயர். இப்பணியில் ஈடுபட்டவர்களுக்கு அரச காணிகள் இனாமாக வழங்கப் பட்டன. சிங்கள சமூகத்தில் உயர் சாதியினருக்கு வழங் கப்பட்ட இப்பதவிகளில் முஸ்லிம்களும் அமர்த்தப்பட் டனர். 'உல்பங்கே' சேவையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்கள் அரச குளியலுக் குத் தேவையான விறகுகளை விநியோகம் செய்தனர்.

அரண்மனைப் பணிகளுக்கு அடுத்து முக்கியத்துவம் பெறுவது சமையலறைச் சேவையாகும். இது முல்தங்கே என வழங்கப் பட்டது. அரசனின் விசுவாசத்திற் குரியவர்களே அரச சமையலில் ஈடுபடுத் தப்பட்டனர். ஒரு நாட்டை ஆளும் அரசன் தன்னுடன் இருப்பவர்களை சந்தேகக் கண்கொண்டே பார்ப்பான். அதிலும் கண் டியை ஆண்ட நாயக்க மன்னர்கள் சிங்களப் பிரதானிகளை முழுமையாக நம் பவில்லை. சிங்களப் பிரதா னிகள் தமக்கெதிரான சதி முயற்சிகளில் ஈடுபடுகின்றார்கள் எனும் சந்தேகம் அவர்களை விரட்டியபடியே இருந்தது.

எனவே, ருசியான உணவு வகைகளைச் ச மைப்பதில் தனக்கு மிகவும் விசுவாசமா னவர்களையே மன்னர்கள் வைத்திருக்க விரும்பினர். இதன் மூலம் முஸ்லிம்கள் மேல் நாயக்க மன்னர்கள் வைத்திருந்த விசு வாசம் புலனாகின்றது.

சிங்கள சமூகத்தின் விகாரை அமைப்பி லும் முஸ்லிம்கள் முக்கிய இடம்பிடித்தனர். தமது சமய தனித்துவமும் சிந்தனைகளும் பாதிக்காத வகையில் முஸ்லிம்கள் விகாரை முறையில் இணைந்திருந்தனர். சிங்கள மன்னர்களால் விகாரைக்கு வழங்கப்பட்ட காணிகள் விகாரகம் என அழைக்கப்பட் டன. விகாரைக்கு நன்கொடையாக அளிக் கப்பட்ட கிராமத்தின் நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பங்குதான் விகாரையின் நேரடி பரிபால னத்தின் கீழ் இருந்தது. இதை 'முதட்டுவ' என அழைப்பர். முதட்டுவ எனும் நிலத்தில் அடங்காத ஏனைய காணிகள் விவசாயத் திற்குரியனவாகப் பிரிக்கப்பட்டு விவசாயி களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன. அது பங்குகாரயா எனப்பட்டது. இதனைப் பெற்றவர்கள் தமது சாதியமைப்புக்கு ஏற்ற வகையில் விகாரைக்கு வேலை செய்தனர். சமாதானமாக வாழ்வதற்கு இவ்விகாரை அமைப்பு உதவியது.

முஸ்லிம்கள் காணிகளில் குடியமர அனுமதிக்கப்பட்டனர். ஹிங்குல கிராமத் திலுள்ள உடமாகடவ விகாரையின் பிரதம பிக்கு மொரகொட ராஜகுரு தம்மானந்த தேரர் (1784-1813) முஸ்லிம்கள் விகா ரைக்குச் செய்த சேவைகள் குறித்து தனது நாட்குறிப்பேட்டில் எழுதியுள்ளார்.

1870 இல் இலங்கைக்கு வந்த பிரித்தானிய பெரும்பான்மைக் குழு, முஸ்லிம்களுக்கும் பௌத்தர்களுக்கும் மத்தியில் நிலவிய இத்தகைய சகவாழ் வைக் கண்டு வியப்படைந்தது. ரொபர்ட் நொக்ஸ் எனும் ஆங்கிலேயர் இது குறித்து விரிவாக எழு தியுள்ளார். பேராதனைப் பல்கலைக்கழக வரலாற் றுத் துறைப் பேராசிரியர் ஹங்குரங்கெத்த திராணந்த ஹிமி 2008 இல் இலங்கை மன்றக் கல்லூரியில் ஆற்றிய உரையொன்றிலும் முஸ்லிம் களின் தேச உருவாக்கப் பணி மற்றும் சகவாழ்வு குறித்து நினை வுகூர்ந்தார்.

வர்த்தக நோக்கில் இலங்கை வந்த அரேபிய ரின் சந்ததிகளான இலங்கை முஸ்லிம்கள் ஆளும் வர்க்கத்தின் நன்மதிப்பைப் பெற்றதோடு பிற்காலத்தில் கரையோர, உள்நாட்டு வணி கத்திலும் ஈடுபட்டனர். இதன் மூலம் பண்டைய இலங்கை யின் பொருளாதார மேம்பாட் டிற்கு வழி செய்தனர். தம்பதெனிய, கம்ப ளை, கோட்டை போன்ற இராஜதானிகளில் சிங்கள மக்களுடன் இணைந்து வாசனைத் திரவியங்கள் மற்றும் இயற்கை வளங்களை சர்வதேச சந்தைக்கு கொண்டு சென்றவர்கள் முஸ்லிம்களே. வரலாற்று நெடுகிலும் சி ங்கள சமூகத்துடன் இணைந்து இலங்கை முஸ்லிம்கள் ஆற்றிய பங்கும் பணியும் மகத்தானது என அவர் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு கடந்த கால இலங்கையைக் கட்டியெழுப்புவதில் அதன் அடையாளத் தைப் பாதுகாப்பதில் முஸ்லிம்கள் ஆற்றிய பணி பாரியது.

சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் 1000 ஆண்டுகளுக்கு மேலாக நிலவிய சமாதான வாழ்வும், இன நல்லு றவும் அந்நிய ஆக்கிரமிப்பு சக்திகளுக்கு வியப்பூட்டியது. பிரமிக்கச் செய்யும் இந்த வரலாற்று உறவுகளுக்கு இடைக்காலத்தில் என்ன நடந்தது? இன்றைய இலங்கைச் சூழலில் முஸ்லிம்-சிங்கள-தமிழ் உறவு கள் எந்த நிலையில் உள்ளன? இலங்கைத் தேசியத்தைக் கட்டியெழுப்புதலில் இருந்து முஸ்லிம்கள் ஏன் அந்நியப்பட்டு நிற்கின் றார்கள்? இது இன்றைய கொதிப்பான சூழலில் எழுப்பப்பட வேண்டிய முக்கிய வினாவாகிறது. இன்றைய இலங்கைச் சூழ லில் தேசத்தைக் கட்டியெழுப்பல் பாரிய பல சவால்களை எதிர்நோக்கியுள்ளது.

இந்தக் களயதார்த்தத்தை நாம் மறுதலிக்க முடியாவிடினும் அவற்றைத் தாண்டிச் செல்ல வேண்டிய கடப்பாடு நமக்குள்ளது. இன்று பெரும் பான்மைச் சமூகத்திலுள்ள ஒரு சிலர் முஸ்லிம் சமூகத்தை நோக்கி பல குற்றச் சாட்டுக்களை முன்வைத்து வருகின் றனர்.

(அடுத்த வாரம் தொடரும்)

# குழந்தைகள் W வடிவில் அமர்கிறார்களா...

குழந்தைகள் விளையாடும் போது, அவர்களுக்கு எது சரி, எது தவறு என்பது தெரியாமல் குறும்புத்தனமாகவும், சந்தோஷமாகவும் விளையாடிக் கொண்டிருப்பார்கள்.

குழந்தைகள் உட்காரும் போது, அவர்கள் உட்காரும் நிலையை சரியாக கவனிக்க வேண்டும். ஏனெனில் சில குழந்தைகள் தவறான நிலையில் அமர்வதால், பல்வேறு பிரச்சி னைகள் ஏற்படும்.

குழந்தைகள் அமரும் போது, அடிக்கடி W வடிவில் பல மணி நேரம் வரை உட்கார்ந்து விளையாடிக் கொண்டு இருப்பார்கள். அதை உடனே மாற்ற வேண்டும். ஏனெனில் இந்த நிலை குழந்தையின் ஆரோக்கியத்தை மோசமாக பாதிக்கிறது.

சிறுவயதில் குழந்தைகள் எப்போதும் W வடிவில் உட்கார்ந்திருப்பதால், அது குழந்தையின் இடுப்புச் சுழற்சியில், தீவிர எலும்பியல் பிரச்சி னைகளை ஏற்படுத்துகிறது.



குழந்தைகளின் இந்த மாதிரியாக அமரும் பழக்கத்தினால், அவர்களின் தசைகள் சிதைவுற்று, சுருங்கி, எலும்புகளின் வளர்ச்சியை கடுமையாக பாதிப்படையச் செய்கிறது. குழந்தைகளின் உடல், அதிகப்படியான புவி ஈர்ப்பு விசையின் விளைவால், அவர்களின் உடற்பகுதியில் உள்ள தசைகளால் உடலை சமநிலையில் பராமரிக்க முடியாத நிலைக்கு தள்ளப்படுகிறது.

குழந்தைகள் W வடிவில் அமரும் பழக்கத்தைத் தடுக்க வேண்டும். அதற்கு அவர்கள் அமரும் போது, கால்களை நீட்டியோ அல்லது மடக்கியோ அமர்த்த முயற்சி செய்ய வேண்டும்.

# சோமாஸ்

**தேவையான பொருட்கள்**

கோதுமை மா - 500 கிராம் ,உப்பு - தேவை யான அளவு,நெய் - 1 மேசைக்கரண்டி,ரவை - 2 மேசைக்கரண்டி,தண்ணீர் - தேவையான அளவு, பூரணம் செய்ய ,ரவை - 250 கிராம்,தேங்காய் துறு வியது - 250 கிராம்,சீனி - 250 கிராம்,ஏலக்காய் பொடி - சிறிதளவு

**செய்முறை**

முதலில் கோதுமை மா, உப்பு, ரவை, நெய் ஆகி யவற்றை கலந்துகொண்டு, சிறிது சிறிதாக தண் ணீர் தெளித்து மிருதுவாக பிசைந்துகொள்ளவும். அரை மணிநேரம் மூடி வைக்கவும். அதன் பின்னர், ரவையை வெறுமனே வறுத்து ஒரு பாத்திரத்தில் ரவை, வறுத்த தேங்காய், சீனி, ஏலக் காய்ப்பொடி எல்லாவற்றையும் கலந்து கொள்ளவும்.

பிசைந்த மாவிலிருந்து சிறிது எடுத்து பூரி போடுவதுபோல் போடவும் ஆனால் மெல்லிய தாக இருக்க வேண்டும் தடிப்பாக இல்லாமல் பார்த் துக்கொள்ளவும். அதன் பின் பூரணம் வைத்து ஓரத்தில் சிறிது தண்ணீர் வைத்து ஒட்டி மூடவும் முள் கரண்டி கொண்டு அழுத்தி விடவும் பின்பு எண்ணெய்யில் இட்டு மிதமான தீயில் பொரித்தெடுத்தால் சோமாஸ் ரெடி!!!!





பா.மலரம்பிகை

# மகளிர் மட்டும்

# அன்பு மனைவிக்கு அருமையான உபதேசங்கள்!!!



நீங்கள் தான் உங்கள் வீட்டின் வாசனை. கணவன் வீட்டினுள் நுழைந்த உடன் நீங்கள்தான் முதல் வாசனை என்பதை கணவருக்கு உணரச் செய்யுங்கள். நல்ல மணத்துடன் எப்போதும் இருங்கள்.

கணவன் ஓய்வு எடுக்க கூடிய இடங்களை தயார் செய்து வையுங்கள். எப்பொழுதும் அழகிய தோற்றத்தில் சுறுசுறுப்பானவராக செயல்படுங்கள்.

கணவ னுட னான தொடர்ச் சியான கலந்துரை யாடலை பேணிக்கொள் ளுங்கள். வாதாட்டம், தங்களது கருத் தில் பிடிவாதம் போன்றவற்றை தவிர்த்து கொள்ளுங்கள்.

உங்கள் சத்தத்தை அவருக்கு முன் உயர்த் தாதீர்கள். குறிப்பாக கணவன் இருக்கும் பொழுது.

கணவன் கோபத்திலிருக்கும் போது, நீங்கள் அமைதியாக இருங்கள். கணவனின் திருப்தியின்றி, இரவில் உறங்க செல்ல வேண்டாம்.

கணவனுக்கு ஆடைகளை தேர்ந்தெ டுப்பதில் உதவி செய்யுங்கள். அவருக்கு பொருத்தமான ஆடைகளை தேர்ந்தெடுத்து வழங்குங்கள்.

கணவனின் தேவைகளை விளங்கி கொள் வதற்கும், அவருடன் அழகிய முறையில் பழகுவதற்கும் நேரத்தை ஒதுக்குங்கள்.

உங்களுடைய தோற்றத்திலும் உடையி லும் கவனம் செலுத்துங்கள்.

எப்போதும் புன்னகையுடனும், அன்பை வெளிப்படுத்தும் உணர்வுகளுடனும் கண வன் பயணித்திலிருந்து திரும்பும் போது வரவேற்பளியுங்கள்.

(அடுத்த வாரம் தொடரும்...)

## முடி வளர்ச்சிக்கு....

பட்டை, ஒலிவ் எண்ணெய், தேன் இம் மூன்றையும் எடுத்துகொள்ளவேண்டும். முதலில் ஒலிவ் எண்ணெயை சூடேற்றி பட்டை மற்றும் ஒரு தேக்கரண்டி தேனை யும் அதில் கலந்துகொள்ளவேண்டும்.

பின்னர், மண்டையோட்டில் நன்றாக படும்படி மசாஜ் செய் யவேண்டும். அதன் பின்னர் 15 நிமிடம் ஊறவைத்து தலையை அலசவேண்டும்.

இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால் மண்டை யோட்டில் உள்ள பாதி க்கப்பட்ட செல்கள் புதுபிக்கப்பட்டு தலை முடியின் வளர்ச்சி விரை வில் தூண்டப் படும்.



# ஓய்வு நாளிலும் ஓய்வெடுக்காத பெண்கள்...

பெண்கள் என்றாலே வேலை, பராமரிப் பு, பொறுப்பு என்று கூறிக்கொண்டே போகலாம். அந்தவகையில், தொழிலுக்கு செல்லும் பெண்கள் 6 நாளும் வேலைசெய்து விட்டு ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமைக் காக காத்திருப்பார் கள். அந்த நாளி லும் அவர்களுக்கு வேலை வந்துவிட் டால் அதோ கதி தான். அவ்வாறாக ஏற்படும் பெண் களுக்கு சில குறிப் புக்கள்.

விருந்தினர் யாராவது ஞாயிற்றுக்கிழமைகளில் உங்கள் வீட்டிற்கு வர விரும்பினால் அவர்களிடம், போன் செய் துவிட்டு வாருங்கள் என்று கூறுங்கள். அதன் மூலம் அவர் களை வரவேற்கவும், உபசரிக் கவும் உங்களால் முடியும்.



சமையல், துணிதுவைத்தல், வீட்டை சுத்தம் செய்தல் போன்ற அனைத்து வேலை களையும் பெண்களே தனி யாக செய்யும் நிலை ஏற்படகூடாது. எல் லோரும் பகிர்ந்து செய்ய வேண்டும். பத்திரிகை, புத்தகங்களை அடுக்கி வைப்பது, செடிக்கு தண் ணீர் விடுவது, துணி மடிப்பது, குளிர்சாதனப்பெட் டியில் காய்கறிகளை அடுக்கிவைப்பது போன்ற வேலைகளை பிள்ளைகளிடம் ஒப்படைத்துவிடுங்கள். இதனால் வீட்டில் குழந்தைகளின் தேவை யற்ற அரட்டைகள் குறையும். அதிகமான வேலைகள் இருந் தாலும் மாலையில் இரண்டு மணி நேரமாவது குடும்பத் தோடு வெளியே சென்று பேசி, சிரித்து விளையாடி மனதையும், உடலையும் இலகுவாக்கிக் கொள்ளுங்கள். குடும்பத்தில் இருக்கும் கணவரும், குழந் தைகளும் ஞாயிற்றுக்கிழமைக ளில் தாயின் வேலைப்பளுவை நினைத்துப்பாருங்கள்.

தாயும் நம்மைபோன்ற உடல் கொண்ட ஒரு ஜீவன்தான், அவருக்கும் ஓய்வு தேவை என்பதை உணர்ந்து வீடுகளில் வேலைகளை பகிர்ந்து அன்பை பெருக்குங்கள்.

## அநுரவின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தினத்தில் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனாநாயக்க மேற்கொண்ட அழைப்புகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வசீம் தாஜுதீனின் மரணம் இடம்பெற்ற தினத்தன்று மற்றும் அதற்கு அண்மித்த தினங்களில் அனுர சேனாநாயக்கவின் தொலைபேசியில் இருந்து ஜனாதிபதி செயலகத்தின் எந்தப் பிரிவுக்கு அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டன என கண்டறிய விசாரணைகள் நடத்தப்படுவதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் டிலான் ரத்நாயக்க நீதிமன்றுக்கு அறிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பு அதிகாரிகள் இருவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பிரதி சொலிஸ்டர் ஜெனரல் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

குறித்த வழக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இதுதொடர்பாக நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டது.

மேலும், வசீம் தாஜூதீனின் உடல் பாகங்களை வைத்து மேற்கொள்ளப்பட்ட டி.என்.ஏ பரிசோதனைஅறிக்கைகள் சைட்டம் ஆய்வுக் கூடத்திலிருந்து மீட்கப்படவில்லை எனகுற்றப்புலனாய்வு பிரிவினர் அறிவித்துள்ளனர்.

குறித்த விவகாரம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனாநாயக்க மற்றும் நாரஹேன்பிட்ட பொலிஸ் குற்றவியல் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி சுமித் பெரேரா ஆகியோரை தொடர்ந்தும் பெப்ரவரி 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு இதன் போது உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இனிப்பும் கசப்பும்...

( 04 பக்கத் தொடர்ச்சி...)

இஸ்லாத்துக்கு ஒருவரை மதம் மாற்றுவது பாரிய நன்மை தரும் விடயம் என்று நாங்கள் நினைக்கிறோம். ஆனால் அதன் பின் அவர்கள் இஸ்லாத்தில் வாழ்கிறார்களா என்பதை நாம் பார்ப்பதில்லை. அதற்கான முறைகளோ அமைப்போ எம்மிடமில்லை. கலிமா சொல்லிக் கொடுத்துவிட்டால் சரி கடமை முடிந்தது என்றே நம்மில் அநேகர் நினைக்கிறோம்.

கிறிஸ்தவ மதகுருக்களைப் பாருங்கள். எவராவது அவர்களது மதத்தை சார்ந்துவிட்டால் தொடர்பை அதிகரித்துக் கொள்வர். அந்த வீடுகளுக்கு அடிக்கடி விஜயம் செய்வர். அறிவுரை வழங்குவர். அவர்களது பிரச்சினைகளை கேட்டறிவர். பரிகாரம் வழங்குவர். பொருளாதார உதவி செய்வர். ஆலயங்களுடனான தொடர்பை அதிகரிக்கச் செய்வர். வாரம் தோறும் வரச் செய்வர்.

இந்த முறை எமது பள்ளிவாசல்களிலோ தஃவா அமைப்புக்களிடமோ இல்லை. கலிமா சொல்லிக் கொடுப்பது, விருத்தசேசனம் செய்து வைப்பது அவ்வளவுதான் அதன்பின் எட்டிப்பார்ப்பதில்லை.

முன் குறிப்பிட்ட அந்த ஏழு வயதுச் சிறுவன் பௌத்த மதத்திற்கு மாறியது மட்டுமல்ல, பௌத்த பிக்குவாக காவியுடை தரித்துக் கொண்டான். இதன் பின் அவன் பௌத்த மக்களால் மதிக்கப்படுவான். அவனது தாய், தந்தை உட்பட பெரிய சிறிய அனைவருமே வயது வித்தியாசம் பார்க்காது அவனது காலில் விழுந்த வணங்குவர்.

அந்த சிறுவனின் தகப்பனே சிறுவனை பன்சலையில் ஒப்படைத்துள்ளார். சில வேளை, அந்த தகப்பன் ஒரு பௌத்தராக இருக்கலாம். அவர் பௌத்தர் என்றால் தாய் முஸ்லிமாக இருக்க வேண்டும். இருவரும் முஸ்லிம் அல்லாதவராக இருக்க முடியாது. அவ்வாறு இருவரும் முஸ்லிம் அல்லாது இருந்தால் சிறுவன் முஸ்லிமாக இருக்க முடியாது.

தாய் வெளிநாட்டில் வேலை செய்கிறார் என்று கூறப்படுகிறது. அநேகமாக தாய் இங்கு இருந்திருந்தாலோ சிறுவன் பௌத்த மதகுருவாக மாறாது இருந்திருக்கலாம். அவர் இல்லாத நிலையிலே சிறுவன் ஒப்படைக்கப்பட்டுள்ளான். தாய் இங்கிருந்து முஸ்லிமாகவும் இருந்திருந்தால் இடமளித்திருக்கமாட்டார். பராமரிக்க முடியாது சில வேளை தகப்பன் ஒப்படைத்திருக்கலாம். எனவே முஸ்லிம் பெண்கள் தொழிலுக்கு வெளிநாடு செல்வதை மீண்டும் சிந்திக்க வேண்டும்.

எமது அமைச்சர்களும் தஃவா அமைப்புக்களும் இவ்வாறான கலப்புக்குடும்பங்கள் வேறு இனத்தவர் மத்தியில் தனித்துவாழும் குடும்பங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டும். இவர்களுடன் தொடர்புகளை அதிகரித்துக் கொள்ள வேண்டும். பள்ளித் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

## சன்மார்க்க அறிஞர்...

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இவர் அகில இலங்கை ஜம்மிய்யத்துல் உலமா சபையின் உப தலைவராக இருந்ததுடன், பல அமைப்புகளுடன் ஒன்றிணைந்து அமைதியான முறையில் பல்வேறு பணிகளையும் மேற்கொண்டிருந்தார். அரபு, ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்த இவரை முன்னாள் முஸ்லிம் சமய. கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் வக்பு சபை உறுப்பினராக நியமித்து கௌரவப்படுத்தியதுடன், அவரின் சேவைகளையும் பெற்றுக்கொண்டார்.

முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத் திருத்தம் மற்றும் வக்பு சபை சட்டத் திருத்தம் தொடர்பாக ஆராய்வதற்கு அமைச்சர் அஸ்வரினால் நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினராகவும் அன்னார் நற்பணி புரிந்துள்ளார். கருத்துக்களைத் துணிந்து சொல்லும் ஒருவராக விளங்கிய அவர், காலி பஹ்ஜதுல் இப்ராஹிமிய்யா அரபுக் கல்லூரியிலும் பணிப்பாளராகக் கடமை புரிந்துள்ளார். இவர் வயோதிப வயதிலும் சிறந்த மார்க்கப்பணி புரிந்ததுடன் நின்றுவிடாது, தனது கிராமத்தின் கல்வி, கலாசார வளர்ச்சிக்காகவும் அயராது உழைத்தார்.

பாணந்துறை, தொட்டவத்தை அல்பஹ்றியா முஸ்லிம் வித்தியாலயத்தை மகா வித்தியாலயமாகவும் மத்திய கல்லூரியாகவும் தரமுயர்த்துவதற்கு முன்னின்று உழைத்தவர்களில் இவரும் ஒருவராவார். இலங்கைச் சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட இப்பூவுலகைத் தவிர்ந்த பிரபஞ்சத்தில் உயிரினங்கள் வாழ்கின்றனவா? என்ற தலைப்பிலான ஆராய்ச்சிக் கட்டுரைப் போட்டியில் அவர் முதலாம் இடத்தைப் பெற்றமையானது, அவரது சன்மார்க்க ஆய்வுப்பணியை எடுத்துக்காட்டுகின்ற மிகவும் பெருமைப்படக்கூடிய விடயமாகும்.

பாணந்துறை, தொட்டவத்தை பள்ளிவாசல்களின் பரிபாலன அமைப்பான அந்நத்வதுல் பாஸிய்யதுஷ் ஷாதுலியாச் சங்கத்தின் தலைவராக இவர் சுமார் முப்பதாண்டு காலம் தொடர்ந்து பணியாற்றி, பள்ளிவாசல்களின் பரிபாலனம் மற்றும் சமய, சமூக விடயங்களில் பெரும் பங்காற்றியுள்ளார். தற்போது அவரின் சிரேஷ்ட புதல்வரான முஸ்லிம் விவாகப் பதிவாளரும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினருமான எம். இம்தியாஸ் முஸம்மில் தொட்டவத்தைப் பள்ளிவாசல்கள் பரிபாலனச் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சுதந்திரத்தின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

எமக்கு கிட்ட வேண்டும். அறியாமையை அறிவினாலும், பொய்மையை வாய்மையினாலும், பழிதீர்க்கும் எண்ணத்தை கருணையினாலும் இம்சையை அகிம்சையினாலும் வெற்றி கொள்ளக் கூடிய மனிதத்தை மதிக்கும் சுதந்திரத்தின் சுவர்ண பூமியாக எமது தாய்நாடு உருவாக வேண்டுமென பிரார்த்திக்கிறேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்துள்ள சுதந்திர தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மனிதர்கள் தமது சுதந்திரத்துக்காக மேற்கொண்ட போராட்டங்களினால் மானுட வரலாறு அழகு பெற்றுள்ளது. இலங்கையரான நாமும் அவ்வாறான பெருமை மிகு சுதந்திரப் போராட்ட வரலாற்றுக்கு உரித்தானவர்களே. பல் நூற்றாண்டுகளாக நீடித்த மன்னராட்சிக் காலத்திலிருந்து நவீன ஜனநாயகம் வரை நாம் கடந்து வந்த பயணத்தில் அவ்வாறான போராட்டங்கள் பற்றி இதமான நினைவுகளுடன் கசப்பான நினைவுகளும் பதிவாகி இருக்கின்றன. சுதந்திரத்துக்காக பாடுபட்ட எம் முன்னோர்களினதும் மக்களினதும் தியாகத்துக்கு என்றும் நாம் கடன்பட்டவர்களாவோம். உண்மையிலேயே அவர்கள் சிந்திய வியர்வையும், இரத்தமும், சுவாசமும் கலந்த தியாகத்தையே வரலாறு எமக்கு உணர்த்துகின்றது.

69 ஆவது சுதந்திரதின விழா நடைபெறும் இவ்வேளையானது, எமது நாட்டிற்கு மிகவும் தீர்க்கமாக சவால்மிக்கதொரு சந்தர்ப்பமாகும்.

அண்மைய வரலாற்றில் நாம் அடைந்த ஜனநாயக சுதந்திரதைப் பாதுகாத்து, தேசிய சிந்தனையின் ஊடாக அனைத்து இனங்களும் சமாதானத்துடன் வாழக்கூடிய நாட்டை கட்டியெழுப்பும் பொறுப்பு எமது தோள் மீது சுமத்தப்பட்டுள்ளது. ஜனநாயகம், சுதந்திரம் போன்ற வார்த்தைகளைக் கொண்டு வர்ணிக்கப்பட்ட இருண்ட யுகத்திலிருந்து நாம் விடுதலை பெற்றுள்ளோம்.

இருளில் மூழ்கிக்கொண்டிருந்த ஜனநாயகத்தையும், மனிதாபிமானத்தையும் மீண்டும் சுடர்விட வேண்டுமாயின் வறுமையிலிருந்தும், நோய்களிலிருந்தும் விடுபடுவது மட்டுமன்றி இன, மத, சாதி பேதம் போன்ற வரையறைகளுக்குள் சிறைப்பட்டு மோசமான ஆத்மீக மற்றும் பண்பாட்டு வறுமைக்குட்பட்டுள்ள மக்களையும், சமூகத்தையும் அவற்றிலிருந்து விடுவித்து, மனித உரிமைகள் மற்றும் நீதிநெறிகளை மதிக்கும் தேசத்தை உருவாக்க வேண்டும்.

## 69 ஆவது...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பங்குபற்றவுள்ளனர்.

மேலும், இந்நிகழ்வில் பிரதமர், எதிர்கட்சி தலைவர்,

அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர் என பலரும் கலந்தகொள்ளவுள்ளனர்.

சுதந்திர தின நிகழ்வுக்கான ஏற்பாடுகளை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, வெளிவிவகார அமைச்சு, மத அமைச்சுக்கள் இணைந்து முன்னெடுத்துள்ளன.

இதேவேளை, வெளிநாடுகளிலுள்ள சகல இலங்கைத் தூதரங்களிலும் சுதந்திர தினத்தை கொண்டாடுவதற்கான பணிப்புரை வெளிவிவகார அமைச்சின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட மட்டங்களில் நடைபெறும் சுதந்திர தின நிகழ்வுகள் மாவட்ட செயலாளர் அல்லது மாகாண பிரதான செயலாளர்கள் தலைமையில் நடைபெறும்.

இதற்கமைவாக கடந்த முதலாம் திகதி முதல் ஒரு வார காலத்திற்கு அனைத்து வீடுகள், வர்த்தக நிலையங்கள், அரச மற்றும் தனியார் கட்டிடங்கள் மற்றும் வாகனங்களில் தேசிய கொடியை பறக்க விட்டு சுதந்திர தினத்தைக் கொண்டாட தயாராகுமாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## டிரம்பின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அமெரிக்க ஜனாதிபதி பதவி நீக்கம் செய்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை (31) இரவு முஸ்லிம் காங்கிரஸ் தலைமையகமான தாருஸ்ஸலாமில் நடைபெற்ற சன்மார்க்கச் சொற்பொழிவு நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு உரையாற்றும்போது மேலும் கூறியதாவது,

அகதிகள் வருகையை கட்டுப்படுத்துவதற்கு தடை விதித்துள்ளதாக கூறும் அமெரிக்கா மீது, சம்பந்த நாடுகள் தங்களது சக்திக்கேற்றவாறு கவலையையும், கண்டனத்தையும், எதிர்ப்பையும் வெளியிட்டு வருகின்றன. இவ்வாறான தடைகளை எங்களது நாட்டுக்கு செய்துவிட வேண்டாம் என்று கெஞ்சுகின்ற பாணியில் சில நாடுகள் அமெரிக்காவுடன் பேசி வருகின்றன.

உலக வல்லரசாக பார்க்கப்படும் அமெரிக்கா முஸ்லிம்களை ஒடுக்குவதில் முனைப்புக் காட்டிவரும் இவ்வாறானதொரு சூழ்நிலையில், அல்குர்ஆனில் கூறப்படும் சில வசனங்களுக்கு மாற்றுமதத்தினர் தவறான கற்பிதங்களை புரிந்துகொண்டுள்ளனர். இஸ்லாம் அன்பை போதிக்கின்ற, எதிரியாக இருந்தாலும் அடைக்கலம் கொடுக்கின்ற கருணையுள்ள மார்க்கமாகவே இருக்கின்றது.

பிற சமயத்தவர்களால் பிழையாகப் புரிந்துகொள்ளப்பட்ட அல்குர்ஆன் வசனங்களுக்கு சரியான விளக்கத்தையும், தெளிவையும் நாம் கொடுக்கவேண்டும். இங்கு அல்குர்ஆன் விளக்கவுரை நிகழ்த்திய, அஷ்ஷெய்க் அறபாத் (நளீமி) அதுபற்றி போதிய விளக்கத்தை வழங்கினார். இந்த விளக்கங்கள் இஸ்லாத்தைத் தவறாக புரிந்துகொள்கின்ற சமூகத்தினர் மத்தியிலும் கொண்டு செல்லப்பட வேண்டும். இவ்வாறான உரைகள் எதிர்காலத்தில் நூலுருவில் கொண்டுவரப்படும் என்றார்.

## 7 முஸ்லிம்களின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். இதற்கமைய அந்த அறிவிப்பை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

நீதி அமைச்சர் விஜயதாச அதற்கான பணிகளை ஆரம்பித்துள்ளதுடன், இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்விடம் தேசத்துரோகிகளாக பிரகடனம் செய்யப்பட்டுள்ள ஏழு முஸ்லிம்கள் தொடர்பான தகவல்களை வழங்குமாறு கேட்டுள்ளார். அதற்கமைய, இன்று வியாழக்கிமை விஜயதாசவுக்கு அந்தத் தகவல்களை ஹிஸ்புல்லாஹ் எழுத்து மூலம் அனுப்பி வைத்துள்ளார்.

பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக செயற்பட்ட காரணத்தினால் 1804 ஜுன் மாதம் 4ஆம் திகதி தேசத்துரோகிகளாக அறிவிக்கப்பட்ட 7 முஸ்லிம்களையும், நாட்டின் சுதந்திரத்துக்காக போராடிய முஸ்லிம் தலைவர்கள் என வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்துமாறு கோரி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடந்த ஜனவரி 24ஆம் திகதி ஹிஸ்புல்லாஹ் கடிதம் அனுப்பி வைத்திருந்தார்.

## சவால்களை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார். மிகவும் மோசமானஓர் ஆட்சிக் காலத்தைத் தோற்கடித்து, நல்லாட்சி அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்து இரண்டுவருடங்கள் பூர்த்தியானநிலைமையில், காலனித்துவ ஆட்சியிலிருந்தான சுதந்திரத்தின் 69 ஆவது வருடப் பூர்த்தியைக் கொண்டாடுகின்றமை தனிச்சிறப்புமிக்க சந்தர்ப்பம் என நான் நினைக்கிறேன்.

நாடு என்ற வகையில் நாம் பெற்றுக் கொண்ட சுதந்திரத்தை மிகவும் அர்த்தமுள்ளதாய் ஆக்கிக் கொள்வது நம் அனைவரினதும் பொறுப்பு என்பதுடன், தற்போதைய அரசாங்கம் நாட்டினதும், மக்களினதும் பொருளாதார,சமூக,ஆன்மீக சுதந்திரம் தொடர்பாக மிகுந்த பொறுப்புடன் செயற்படுகிறதுஎன்பதை இச்சந்தர்ப்பத்தில் விசேடமாகக் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த இரண்டுவருடகாலப் பகுதியினுள் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தல், நட்புறவான சர்வதேசத் தொடர்புகளை மேம்படுத்தி, பரஸ்பர நம்பிக்கையை வெற்றிகொள்ளுதல், இன,சமயபேதங்களைத் தாண்டிய மனித நேயமிக்க அமைதியான நாடொன்றைக் கட்டியெழுப்புவதற்கான அடிப்படையை உருவாக்கல்,நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற பல வெற்றிகளை எம்மால் பெற்றுக் கொள்ளமுடிந்தது.

## அமெ. பாணியில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அமெரிக்க ஜனாதிபதி டிரம்பின் சமீபத்திய நடவடிக்கையைப் போல, பாகிஸ்தான் உள்ளிட்ட ஐந்து நாடுகளிலிருந்து அகதிகளாக வருவோருக்கு விசாவை நிறுத்தி வைத்து குவைத் அரசு அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

வளைகுடா பகுதியில் முக்கியமான நாடுகளில் ஒன்றான குவைத், எண்ணெய் வளம் மிக்கது. அமெரிக்காவின் 45ஆவது ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ள டிரம்ப், அதிரடி நடவடிக்கையாக சிரியா, ஈரான் உள்ளிட்ட 7 முஸ்லிம் நாடுகளிலிருந்து வருவோருக்கு விசாவை தற்காலிகமாக தடை செய்து உத்தரவிட்டிருந்தார். இந்நடவடிக்கை அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது. அதுமட்டுமன்றி உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் டிரம்புக்கு எதிரான போராட்டங்கள் வலுத்து வருகின்றன.

இந்நிலையில் தற்போது அமெரிக்காவின் நடைமுறையை பின்பற்றியுள்ள குவைத் அரசானது, பாகிஸ்தான், சிரியா, ஈராக், ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளிலிருந்து வருவோருக்கு விசா வழங்குவதை நிறுத்தி வைத்துள்ளது. மேலும், விசாவிற்கு விண்ணப்பிக்க வேண்டாம் எனவும் மேற்கண்ட ஐந்து நாட்டவர்களுக்கு குவைத் அரசு அறிவுறுத்தியுள்ளது.

## கட்சிகளைப் பதிவு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட்டிருப்பதன் காரணமாக 2011 முதல் தேர்தல் கட்சிகளைப் பதிவு செய்வது நிறுத்தப்பட்டிருந்தது.

தேர்தல் செயலகம் இது தொடர்பாக சட்ட ஆலோசனையைப் பதிவு செய்வதற்காக விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

தற்போது நாட்டில் 64 அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஐந்து வருட காலமாக அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்படாமை காரணமாக பெருந்தொகையான புதிய அரசியல் கட்சிகளுக்கு தேர்தல்களில் நேரடியாகப் போட்டியிட முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய இந்த நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக சட்ட வல்லுநர்களில் கருத்துக்களைப் பெற்ற பின்பே குறிப்பிட்ட இருபிரதேச சபைகளில் தேர்தல் நடத்தப்படும் வரை புதிய கட்சிகளைப் பதிவு செய்வதில்லை என விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கியுள்ளார்.

தேர்தல் ஒன்றுக்கு நியமனப் பத்திரம் கோரிய பின் புதிய கட்சிகளைப் பதிவு செய்வது தேர்தல் சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது.

## வரலாற்றில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

திருகோணமலைஸாஹிரா கல்லூரியும் தெரிவுசெயப்பட்டள்ளது

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த.(உ/த) ப் பரீட்சைப் பெறுபேறுகளின் படி திருமலை ஸாஹிராக் கல்லூரி வரலாற்றில் தடம் பதித்துள்ளது. 8 மாணவர்கள் மருத்துவத் துறைக்கும் 2 மாணவர்கள் பொறியியற் துறைக்கும் 1மாணவி முகாமைத்துவத் துறைக்குமாக 11 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டு மாவட்டத்தில் முதல் இடத்தில் இப்பாடசாலை காணப்படும் அதேவேளை தேசிய ரீதியில் உயர்தர விஞ்ஞானப் பிரிவில் முதல் 10 பாடசாலைக்களுக்குள் தெரிவு செய்யப்பட்டு மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளது.

மேலும் போதியளவு கட்டிட,தளபாட வசதிகள் இல்லாத நிலையிலும் திருமலை வலயத்தினதும் பெற்றோர்களினதும்உதவிகளுடன்ஓரளவு தமதுதேவைகளைநிறைவுசெய்துஇந்த சிறப்பானபெறுபேற்றைபெற்றுள்ளது. அகிலஇலங்கைரீதியாகவும்கிழக்கு மாகாணத்திலும்இவ்வாறுமுதல்10 இடங்களுக்குள் தெரிவான ஒரேயொரு முஸ்லிம் பாடசாலைஇதுவாகும். இந்த பெறுபேற்றை பெற உதவிய அதிபர்,ஆசிரியர்கள் மற்றும் இந்த பெறுபேற்றின் நாயகர்களான மாணவர்களுக்கும் பாடசாலை அபிவிருத்தி சங்கம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டது.

## மரண வீட்டுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மாஜிஸ்திரேட் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மரண வீடொன்றுக்கு செல்வதை காரணம் காட்டி ஞானசார தேரர் மற்றும் நான்காம் சந்தேக நபர் நேற்றைய வழக்குக்கு சமுகமளித்திருக்கவில்லை.

4ஆம் சந்தேக நபர் மாலை 4மணிக்கு நீதிமன்றில் ஆஜராவதாக அறிவித்திருந்ததால் பதில் நீதவான் வழக்கை 4மணிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ள முடிவுசெய்திருக்கையில் 4மணிவரை தாமதிக்காது சந்தேக நபர்களுக்கு பிடிவிராந்து விதிக்க வேண்டும் என்று ஆர்.ஆர்.ரி சட்டத்தரணிகள் வாதிட்டிருந்தனர்.

அதனடிப்படையில் நான்காவது சந்தேகநபரை கைதுசெய்ய பிடிவிராந்து பிறப்பிக்கப்பட்டது. கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவினர் சட்ட மா அதிபருக்கு மேற்படி வழக்கை கொண்டுநடத்த ஆலோசனை கேட்டிருந்தும் இதுவரையில் எவ்வித பதிலும் கிடைக்கவில்லை

## அமெரிக்காவில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அமெரிக்க விமான நிலையத்தில் இலங்கையர்கள் உள்ளிட்ட 71 பேர், நிர்க்கதியாகியுள்ளதாக வெளியான தகவல்கள் குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சு பதிலளித்துள்ளது.அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ஸ் சில நாடுகளின் பிரஜைகளை அந்த நாட்டுக்குள் பிரவேசிக்க தடை விதித்து உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்தநிலையில், அந்த நாட்டின் ஜோன் எப் கெனடி விமான நிலையத்தில், அமெரிக்காவுக்குள் நுழைய முடியாது, 71 பேர் தவித்து வருவதாக, வெளிநாட்டு ஊடகச் செய்திகளில் தெரிவிக்கப்பட்டது.

இருப்பினும், இலங்கையர்கள் எவரும், அமெரிக்காவின் எந்தவொரு விமான நிலையத்திலும் நிர்க்கதியான நிலையில் இல்லை என வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் மகேஷினி கொலன்னே சுட்டிக்காட்டியுள்ளார்.தனது டிவிட்டர் பக்கத்திலேயே அவர் இதனை பதிவிட்டுள்ளார். அதேபோல் இலங்கையர்கள் எவரும் இவ்வாறு நிர்க்கதியான அல்லது உதவி தேவையான நிலையில் இருப்பின் அமெரிக்க தூதரகத்தின் 001 917 597 7009 என்ற இலக்கத்திற்கு அழைக்க முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.அத்துடன், அமெரிக்காவின் புதிய உத்தரவில் உள்ளடங்கியுள்ள நாடுகளின் பட்டியில் இலங்கை இல்லை எனவும் மகேஷினி கொலன்னே தனது டுவிட்டர் பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இடை நிறுத்தப்பட்ட ...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பொதுச்செயலாளருமான கபீர் ஹஷீம் மற்றும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் கவுன்சில் மேற்கொண்ட துரித முயற்சிகளுக்கமைய இடைநிறுத்தப்பட்டிருந்த மேற்படி பெறுபேறுகளை வெளியிட பரீட்சைத்திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

பரீட்சைப்பெறுபேறுகள் வெளியிடப்படாமையினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த 2016 ஆம் ஆண்டில் விஞ்ஞானப் பிரிவில் க.பொ.த.உயர் தரப்பரீட்சை எழுதிய இம்மாணவர்களின் பெற்றோர்கள் இவ்விடயத்தை ஸ்ரீ லங்கா முஸ்லிம் கவுன்சிலின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர்.

பரீட்சைப்பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டிருந்த இம்மாணவர்களின் பெற்றோர்களின் பிரதிநிதிகளுடனும் அமைச்சர் கபீர் ஹஷீமுடனும் கவுன்சிலின் தலைவர் என்.எம்.அமீன் பல நாட்களாக உரிய தகவல் மற்றும் ஆவணப்பரிமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்.இறுதியாக கடந்த செவ்வாய்க்கிழமை (31) ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சிலின் ஊடாக பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்களின் பிரதிநிதிகளை தனது அமைச்சுக்காரியாலயத்தில் சந்தித்த அமைச்சர் கபீர் ஹஷீம் ஏற்கனவே நடத்தப்பட்ட புரிந்துணர்வு முயற்சிகளின் விளைவாக எட்டப்பட்டிருந்த முடிவுகளுக்கமைய கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் மற்றும் பரீட்சை ஆணையாளர் டபிள்யூ. எம்.என்.ஜே.புஷ்பகுமார ஆகியோருடன் பெறுபேறுகளை வெளியிடும் விடயமாக இறுதியாக தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக் கொண்ட பின் பெற்றோர் பிரதிநிதிகளுக்கு பெறுபேறுகளை வெளியிடப்படும் அறிவிப்பை உறுதியாக வழங்கினார். இதற்கிணங்க பாதிக்கப்பட்டிருந்த 80 வெளிமாவட்டப் பாடசாலைகளின் மாணவர்களுக்கும் அவர்களுக்குரிய பெறுபேறுகளை வெளியிடுவதற்கான ஏற்பாடுகளை பரீட்சை ஆணையாளர் மேற்கொண்டுள்ளார். பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிட முன் உரிய மாணவர்களுக்கான ஆவணங்களை உறுதிப்படுத்தும் நிகழ்வுகள் எதிர்வரும் பெப்ரவரி 8,9 ஆம் திகதிகளில் ஒரு பகுதியினருக்கும் ஏனையோருக்கு பெப்ரவரி மூன்றாம் வாரத்தில் இடம்பெறவுள்ளதாகவும் பரீட்சை ஆணையாளர் உறுதிப்படுத்தியுள்ளார். மேலும் இம்மாணவர்களுக்கான மாவட்ட வெட்டுப்புள்ளி பரீட்சை எழுதிய மாவட்டத்தின் பட்டியலுக்குட்படுத்தப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைப் பெறுபேறுகள் தாமதமானதால் உடல் உளத்தாக்கங்களுக்கு மட்டுமன்றி பரீட்சைப்பெறுபேறு மீளாய்வு இரண்டாவது முறை பரீட்சை எழுதும் வாய்ப்புக்களுக்கான கால அவகாசம் போன்ற பல பிரச்சினைகளுக்கும் தமது பிள்ளைகளுக்கு உரிய நியாயங்களைப் பெற்றுத்தரப்பட வேண்டுமெனவும் இப்பெற்றார்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

பாதிக்கப்பட்ட சகல முஸ்லிம் தமிழ் மாணவர்களுக்கும் சட்ட வரம்புகளுக்குட்பட்ட விதத்தில் உரிய நியாயங்களைப் பெற்றுக்கொடுக்க எதிர்காலத்திலும் சகல உதவிகளையும் செய்யத்தயாராகவுள்ளதாகவும் அமைச்சர் உறுதியளித்தார்.

இவ்விடயத்தில் நேரடியாகவே களத்தில் இறங்கி செயற்பட்ட அமைச்சர் கபீர் ஹாஷிம் ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சில் தலைவர் என்.எம்.அமீன் உட்பட இவ்விடயத்தில் அக்கறையுடன் செயற்பட்ட பிரதியமைச்சர் ரவீந்திர சமரவீர ஏனைய அமைச்சர்களுக்கும் அரசியல் தரப்புக்களுக்கும் நல்ல உள்ளங்களுக்கும் தமதும் தமது பிள்ளைகளினதும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் பாதிக்கப்பட்ட பெற்றார்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

Red Rose Industries
BEST QUALITY SOCKS
For trade enquires
011 2764690
/GOODFIT.LK

# EDEX 2017 கண்காட்சி; கல்விக் கடன்களை ஊக்குவிக்கும் கொமர்ஷல் வங்கி

இலங்கையில் உயர் கல்வியை மேற்கொள்ள அல்லது தொழிற்சார் கற்கைகளை மேற்கொள்ள அல்லது கடல் கடந்த நாடுகளில் கல்வியை மேற்கொள்ள கொமர்ஷல் வங்கி வழங்கும் கடன் திட்டம் அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற EDEX 2017 கண்காட்சியில் பெரும்பாலானவர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. இந்தக் கண்காட்சியில் இது தொடர்பான தகவலைத் தேடி பெருந்திரளானவர்கள் கொமர்ஷல் வங்கி கூடத்துக்கு வருகை தந்தனர். இங்கு கடன்களுக்கு விண்ணப்பிப்பதற்கான வசதிகள், பாடநெறிகளுக்கான தவணைக் கொடுப்பனவை செலுத்துவதற்கான வசதிகள், பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்துவதற்கான வசதிகள் என பல வசதிகள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டன. ஜனவரி 27 மற்றும் 28 ஆகிய திகதிகளில் கண்டி சிற்றி சென்டரில் இடம்பெற்ற EDEX 2017 கண்காட்சியிலும் கொமர்ஷல் வங்கி பங்கேற்றது.




GOODFIT
BRA · UNDERWEAR SOCKS
Distributors
Pettah - 011 5749657
Maharagama - 011 2089609
/GOODFIT.LK

# முதன் முறையாக பசுமை ஆடைகளை அறிமுகம் செய்யும் ரீஜே




தெற்காசியாவின் மிகப்பெரிய ஆடை உற்பத்தியாளர்களான ரீஜே (TEEJAY) நிறுவனமானது அதன் முக்கியமான வாடிக்கையாளர்கள் சிலருக்காக பசுமை ஆடை உற்பத்தியை ஆரம்பித்துள்ளது.

ஆசியாவிலுள்ள பிரதானமான 200 நிறுவனங்களடங்கிய 2016ஆம் ஆண்டின் போப்ஸ் பட்டியலில் இடம்பெற்று பெருமை பெற்ற ரீஜே நின்று நிலைக்கும் பேண்தகு நிலையை எய்தும் வகையிலான அதன் புதிய பயணத்தின் நீண்ட கால இலக்காக கடந்த மாதத்தில் தமது புதிய அறிமுகத்தை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. தமது வர்த்தக நடவடிக்கையின் அனைத்துப் பிரிவுகளிலும் நின்றுநிலைக்கும் பேண்தகு நிலையை எய்தும் முனைப்புடன் செயற்படும் ரீஜேயின் முதற்கட்ட நடவடிக்கையாக பசுமை ஆடை அறிமுகம் அமைந்துள்ளது. தேர்ந்தெடுக்கப்படும் ஆடைகளில் இருந்து வெளிப்படும் காபனின் அளவைக் கணக்கிடுவதற்காக காபன் ஆலோசனை நிறுவனத்துடன் (CCC) கூட்டுறவை ரீஜே ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. காபன் ஆலோசனை நிறுவனமானது தெரிவுசெய்யப்பட்ட சில ரீஜே ஆடைகளில் இருந்தான வெளியகற்றலை கணக்கிட்டுள்ளது. அதுமாத்திரமன்றி கடந்த ஆறு வருடகாலமாக உலகின் மிகச்சிறந்த ஒவ்செற் ரிடேய்லராக திகழும் அமெரிக்காவைச் சேர்ந்த நசுரல் கபிடெல் பார்ட்னர்ஸ் (NC) உடன் இணைந்து காபன் பாவனையை முற்றுமுழுதாக கட்டுப்படுத்தும் முயற்சியில் வெற்றிகண்டுள்ளது.

அத்தோடு உலகை பசுமை மிக்கதாக்குவதற்கு இந்த பூகோள பங்குதாரர்களுடன் இணைந்து பணியாற்றுவதில் மிகுந்த பெருமை கொள்கின்றேன் என தெரிவித்தார்.

# சஞ்சாரக உதாவ சுற்றுலா சேவைகள் வர்த்தக கண்காட்சி



இலங்கை உள்ளூர் சுற்றுலாத் துறை செயற்பாட்டாளர்கள் சங்கமானது (The Sri Lanka Association of Inbound Tour Operators & SLAITO) பெருமையுடன் சஞ்சாரக உதாவ சுற்றுலா சேவைகள் வர்த்தக கண்காட்சி குறித்து அறியத்தந்துள்ளனர். இந்த கண்காட்சியானது, இலங்கையிலுள்ள அடையாளம் காணப்படாத சிறிய மற்றும் நடுத்தர சுற்றுலா சேவை வழங்குனர்கள் தமது சேவைகள் குறித்து காட்சிப்படுத்தும் ஒரு தளமாக விளங்குவதுடன், சுற்றுலாத்தொழிற் துறையில் உறவாடல் வலையமைப்பினை மேற்கொள்வதற்கும் வழியமைத்துக்கொடுக்கும். NKAR ட்ராவல்ஸ் (பிரைவேற்) லிமிடட் முகாமைத்துவ பணிப்பாளரும், முன்னாள் இலங்கை உள்ளூர் சுற்றுலாத் துறை செயற்பாட்டாளர்கள் சங்கத்தின் (SLAITO) தலைவரும், 2011ம் ஆண்டில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதிலிருந்து, சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதிலும், சுற்றுலாத்துறைக்கு அனுகூலங்களை பெற்றுத்தருவதிலும் பெரும் பங்காற்றும் சஞ்சாரக உதாவ நிகழ்வின் நிறுவனருமான நில்மின் நாணயக்கார அவர்களின் கருத்தாக்கத்தில்இந்த கண்காட்சியானது தோற்றம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டுக்கான சஞ்சாரக உதாவ நிகழ்வானது 2017 மே 5 மற்றும் 6ம் திகதிகளில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி நிலையத்தில் (BMICH) இடம்பெறவுள்ளது

2017ம் ஆண்டுக்கான சஞ்சாரக உதாவ சுற்றுலாத்துறை சேவைகள் வர்த்தக கண்காட்சியானது, சிறிய மற்றும் அதிகம் அறிந்திரான வழங்குனர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு ஒரு கருத்துக்களமாக அமையவுள்ளதுடன், இலங்கையிலுள்ள அனைத்து சமூக மட்டங்களிலும் வருவாயை ஏற்படுத்திக் கொடுக்கும் தாக்கம் ஒன்றினை அளிக்கும் தொடர்நிகழ்வுகளை தேற்கொள்வதற்கான தளமாகவும் விளங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு ஸ்திரத்தன்மையும் ஊக்கமும் அளித்து, சிறப்பான வர்த்தக அனுகூலங்களை பெற்றுக்கொள்வதற்கு இந்த கண்காட்சி வழியமைத்துக்கொடுக்கும் என நாங்கள் உறுதியாக நம்புகின்றோம் என நில்மின் நாணயக்கார தெரிவித்தார்.




# லங்கா ஹொஸ்பிட்டலின் அன்பளிப்பு வவுச்சர்கள்




சுகாதாரத்துக்கு முக்கியத்துவம் வழங்குவோரின் நலன் கருதி அர்த்தமுள்ள மற்றும் பெறுமதி வாய்ந்த அன்பளிப்பாக, ஹெல்த் லிங்க் வவுச்சர்களை லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் அறிமுகம் செய்துள்ளது.

நோய்களை ஆரம்ப நிலையில் கண்டறிவதற்கு உதவும் வகையில், சுகாதார பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக குறித்த வவுச்சர்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. 30 வெவ்வேறு வகையான பக்கேஜ்களை இவை கொண்டுள்ளன.

ரூ.2000.00, ரூ. 5000.00 மற்றும் ரூ.10,000 ஆகிய விலைகளில் ஹெல்த் லிங்க் வவுச்சர்களை கொள்வனவு செய்து கொள்ள முடியும். லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் ஹெல்த் லிங்க் திணைக்களத்திலிருந்தும், வெளிநோயாளர் பார்மசி, கீல்ஸ் சுப்பர், கே-சோன் கட்டுபெத்த மற்றும் ஜா-எல கே-சோன் ஆகியவற்றில் அமைந்துள்ள லங்கா ஹொஸ்பிட்டல் பார்மசிகளிலிருந்தும் கொள்வனவு செய்ய முடியும்.

# இலங்கை புகையிரத கூட்டுத்தாபனத்துடன் கைகோர்த்துள்ள Fashion Bug

சமூகத்துக்கு சிறந்த பங்களிப்பை பெற்றுக் கொடுக்கும் வகையில், நாடு முழுவதும் 16 விற்பனையகங்களைக் கொண்ட இலங்கையின் முன்னணி ஆடை விற்பனையகத் தொடரான Fashion Bug, இலங்கை புகையிரத திணைக்களத்துடன் இணைந்து, கொழும்பு புகையிரத நிலையத்தின் குறியீட்டு அடையாளங்கள் மற்றும் வழிகாட்டல் பலகைகள் போன்றவற்றை புனருத்தாரணம் செய்திருந்தது.

2013ஆம் ஆண்டு முதல் இந்த வருடமும் இச்செயற்பாட்டில் Fashion Bug ஈடுபட்டுள்ளதுடன், எதிர்காலத்திலும் இது போன்ற செயற்திட்டங்களை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளது.

இதன் மூலமாக, தனியார் நிறுவனங்கள், பொதுச் சேவைகளில் எந்தளவில் இயன்ற வளவு பங்களிப்பை வழங்க முன்வந்துள்ளன என்பது புலப்படுகிறது.

ஆடை விற்பனைத்தொடரான Fashion Bug தனது தினசரி செயற்பாடுகளில் சமூக பொறுப்புணர்வு செயற்பாடுகளுக்கு அதிகளவு முக்கியத்துவத்தை வழங்குகிறது.

நிறுவனத்தின் கூட்டாண்மைக் கொள்கையில் முக்கியத்துவம் வாய்ந்த அங்கமாகவும் இது அமைந்துள்ளது.




# யாழ். மண்ணிற்கும் கிரிக்கெட் வசந்தம்

■ பீ.எப்.எம். நிஷாட்

இலங்கையின் பெயரை உலக அளவில் பிரபல்யமடையச் செய்த விளையாட்டாக கிரிக்கெட் விளங்குகின்றது.1996 உலகக்கிண்ண கிரிக்கெட் சம்பியன்களாக இலங்கை அணி தெரிவானதையடுத்து முழு உலகம் பூராகவும் எமது நாட்டின் பெயர் பேசப்பட்டதுடன், கிரிக்கெட்டில் புதிய பரிணாமமும், வளர்ச்சியும் ஏற்பட்டது.இதன்காரணமாக நாட்டில் சர்வதேச தரத்திலான விளையாட்டு மைதானங்களும் உருவாகியதுடன், தற்போது சுமார் 7 சர்வதேச கிரிக்கெட் மைதானங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இலங்கை கிரிக்கெட் சபை பொலன்னறுவை மற்றும் யாழ்ப்பாணத்தில் 2 சர்வதேச கிரிக்கெட் மைதானங்களை நிர்மாணிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.இதன்படி முதல் கட்டமாக உள்ளூர் போட்டிகளை நடத்துகின்ற தேசிய மைதானமாகவும், 2ஆவது கட்டமாக சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை நடத்துகின்ற மைதானங்களாகவும் இவை நிர்மாணிக்கப்படவுள்ளமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.இதன்படி யாழ் மாவட்டத்தில் மண்டைதீவுப்பகுதியிலும், பொலன்னறுவை, ஹிங்குராங்கொடை பிரதேசத்திலும் தலா 100 மில்லியன் ரூபா செலவில் இவ்விளையாட்டு மைதானங்கள் நிர்மாணிக்கப்படன.

உலகின் தலைசிறந்த கிரிக்கெட் நாடாக விளங்கும் இலங்கையில் கடந்த 30 வருடகாலமாக நிலவிய யுத்த சூழ்நிலையினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கிரிக்கெட் வளர்ச்சியை ஏற்படுத்த முடியாமல் போனதுடன், திறமையான வீரர்களையும் இனங்கண்டு கொள்ளமுடியாமல் போனமை இந்நாட்டின் கிரிக்கெட் வளர்ச்சிக்கு மிகப் பெரிய பின்னடைவை ஏற்படுத்தியது.இந்நிலையில் இலங்கை பாராளுமன்றத்தின் பிரதி சபாநாயகரும், பிரபல தொழிலதிபருமான திலங்க சுமதிபால இலங்கை கிரிக்கெட் சபையின் தலைமைத்துவத்தை கடந்த 2015ஆம் ஆண்டு பொறுப்பேற்றது முதல் பல வருடங்களாக தடைப்பட்டிருந்த இந்நாட்டின் கிரிக்கெட் விளையாட்டின் வளர்ச்சிக்கு பல்வேறு வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்தியும், அவற்றை முன்னெடுத்தும் வருகின்றமையும் அனைவராலும் பேசப்பட்டு வருகின்றன. இந்நிலையில் திலங்க சுமதிபால தலைமையிலான இலங்கை கிரிக்கெட் சபையின் அதிகாரிகளின் நீண்ட கால முயற்சிகளின் பிரதிபலனாக யுத்தத்தினால் மோசமாக பாதிக்கப்பட்ட யாழ்.குடா நாட்டில் கிரிக்கெட் வசந்தத்தை கொண்டு வருவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையினை கடந்த மாதம் 17ஆம் திகதி முன் யாழ்.மண்டைத் தீவுப் பகுதியில் ஆரம்பித்து வைத்தனர்.

நீண்டகாலமாக அதிகாரிகளால் அசட்டை செய்யப்பட்டு வந்த மாவட்ட ரீதியிலான கிரிக்கெட் அபிவிருத்தி விவகாரம் தற்பொழுது நிறைவேறும் தருவாயிற்கு வந்துள்ளது. இதன்படி இலங்கை கிரிக்கெட் சபையினால் இந்த வருடம் திட்டப்பட்ட இரண்டு பாரிய திட்டங்களில் ஒன்றாக யாழ் மாவட்டத்தில் மண்டைதீவுப்பகுதியில் சர்வதேச விளையாட்டரங்கமொன்று நிறுவப்படவுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் திலங்க சுமதிபால,மற்றும் சபை அதிகாரிகளும் யாழ்குடாநாட்டிற்கு கடந்த மாதம் விஜயம் செய்திருந்தார்கள்.இதன்படி, விளையாட்டு மைதானத்தை அமைக்க இரு இடங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அடிப்படைத் தேவைகளான தண்ணீர் மண் வளம், மின்சக்தி விநியோகம், சூழல் பாதிப்பு, வீதிகளின் நிலைமைகள் போன்ற விடயங்கள் மேலும் ஆராயப்படவுள்ளன. மிகவும் பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்வது முக்கியமெனவும், மக்கள் சுலபமாகச் சென்றடையக் கூடிய இடமாக இருக்க வேண்டுமென்றும் கூறிய சுமதிபால மைதானங்களில் பச்சைப் புல்லை வளர்க்க முறையான பராமரிப்பும் அவசியம் என்பதையும் அதற்கு பெருமளவு பணம் செலவாகும் என்பதையும் சுட்டிக்காட்டினார். கடந்த காலங்களில் நல்ல தரமான கிரிக்கெட் வீரர்களை வட பகுதி கண்டுள்ளது. அது மீண்டும் வர வேண்டும் என்பதையும் சுமதிபால வலியுறுத்திக் கூறினார். எனவே 2022இல் கட்டி முடிக்கப்படும் நோக்கில் 100 மில்லியன் ரூபா தொகையை இலங்கை கிரிக்கெட் சபை இதற்காக ஒதுக்கியுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, 1998ஆம் ஆண்டு காலப்பகுதியில் மகாவலி அபிவிருத்தி அமைச்சராக இருந்த போது பொலன்னறுவை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் தலைவராகவும் செயற்பட்டார்.அக்காலப்பகுதியில் இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவராக திலங்க சுமதிபால செயற்பட்டதுடன், அப்போது அமைச்சராக இருந்த ஜனாதிபதி பொலன்னறுவைப் பகுதியில் கிரிக்கெட் மைதானமொன்றை நிர்மாணித்துத் தரும்படி கோரிக்கை விடுத்திருந்ததுடன், அப்பகுதியில் உள்ள விவசாய பண்ணையில் இருந்து 15 ஏக்கர் நிலத்தை ஒதுக்கீடு செய்தும் கொடுத்தார்.எனினும் திலங்க சுமதிபால தலைவர் பதவியிலிருந்து விலகிச் சென்ற பிறகு குறித்த திட்டத்தை தொடர முடியாமல் போனது.இந்நிலையில், மீண்டும், கிரிக்கெட் சபைத் தலைவராக அவர் நியமனம் பெற்றுள்ளதால் குறித்த வாக்குறுதியை சுமார் 19 வருடங்களுக்குப் பிறகு நிறைவேற்றுவதற்காக பொலன்னறுவை, ஹிங்குராங்கொடை பிரதேசத்தில் உள்ள அரச விவசாய பண்ணைக்கு சொந்தமான 45 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த மைதானம் நிர்மாணிக்கப்படவுள்ளது. இதன்படி, குறித்த கிரிக்கெட் மைதானத்தின் நிர்மாணப் பணிகளை எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு நிறைவடைவதற்குள் நிறைவு செய்து உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளை நடத்தவும் இலங்கை கிரிக்கெட் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.இதற்கான மேற்பார்வை விஜயத்தை இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் மற்றும் அதிகாரிகள் கடந்த மாதம் 14ஆம் திகதி மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



இதேவேளை, பொலன்னறுவை மற்றும் யாழ்ப்பாணத்திற்கு இவ்வாறானதொரு கிரிக்கெட் மைதானமொன்று தேவைதானா என பலர் கேள்வி எழுப்பியுள்ளனர். இதில் குறிப்பாக நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை, பொலன்னறுவை மற்றும் யாழ்ப்பாணத்திலும் உள்ள மக்களின் சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றமை இதற்கு முக்கிய காரணங்களாகும். ஆனால், கிரிக்கெட் உலகின் பிறப்பிடமாகக் கருதப்படுகின்ற இங்கிலாந்திலும், உலகின் முதல்நிலை கிரிக்கெட் அணியானக விளங்குகின்ற அவுஸ்திரேலியாவிலும் வெறும் 7சர்வதேச கிரிக்கெட் மைதானங்களே உள்ளன.ஆனால் இலங்கை போன்ற நாடுகளில் அரசியல் இலாபத்துக்காகவும், அரசியல்வாதிகளின் பெயரை பிரபல்யப்படுத்துவதற்காகவும் இவ்வாறு புதிய மைதானங்களை நிர்மாணிப்பது அத்தியாவசியமற்றுது என்று பெரும்பாலானோர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

ஆனால் யுத்தத்திற்குப் பிறகு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் தனது ஆட்சிக்காலத்தில் ஹம்பாந்தோட்டையில் மிகப் பெரிய சர்வதேச கிரிக்கெட் மைதானமொன்றை நிர்மாணித்து கடந்த 2011 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற ஐ.சி.சியின் உலகக்கிண்ணப் போட்டிகளின் போது திறந்தும் வைக்கப்பட்டது.ஆனால் இதுவரை காலமும் எதிர்பார்த்த அளவு சர்வதேசப் போட்டிகள் அந்த மைதானத்தில் நடைபெறாவிட்டாலும்,போதியளவு நிதி வசதியின்றியும்,உரிய மேற்பார்வை மற்றும் பராமரிப்பு வசதிகளின்றியும் கைவிடப்பட்ட நிலையில் அந்த மைதானம் காணப்படுவது மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, மக்களின் பணத்தை வீணடிக்காமல், வெறும் அரசியல் இலாபத்துக்காக இவ்வாறு தேவைக்கும் அதிகமான மைதாணங்களை அமைப்பது வீணான ஒரு விடயம் என்று ஒரு தரப்பினர் குற்றம் சுமத்தியிருந்தாலும், யுத்த சூழ்நிலையினால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி இதுவரை காலமும் விளையாட்டுத் துறையில் தன்னிறைவு பெறாத வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இவ்வாறான சர்வதேச தரத்திலான மைதாணங்கள் நிர்மாணிக்கப்படுவது உண்மையில் வரவேற்கத்தக்க விடயமாகும்.அதிலும் குறிப்பாக, அப்பகுதிகளில் உள்ள இளம் வீரர்களை இனங்கண்டு தேசிய மற்றும் சர்வதேச மட்டத்துக்கு கொண்டுவருவதற்கான மிக முக்கிய தேவையாகவுள்ள விளையாட்டு மைதானங்களை பதவியில் இருக்கும் அரசியல் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் மிக விரைவில் பெற்றுக்கொடுக்க வேண்டிய தேவையுள்ளது.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 05th FEBRUARY 2017